# சுவிசேஷ கீதங்கள்

(விசுவாச கீதங்கள் உள்ளடங்கியது)

மின் நூல்: எஸ்.கே.ராஜன்
டக்கரம்மாள்புரம்.

# சுவிசேஷ கீதங்கள் முதலடி அகராதி

## அட்டவணை


| | | | | |
|---|---|---|---|---|
| அ | ஆ | இ | உ | எ |
| ஏ | க | ச | த | ந |
| ப | ம | ய | ர | வ |
| ஜ | | | | |

## அ


1. அசுத்தமான எதுவும்....110
2. அதோ ஓர் ஜீவ வாசலே....1
3. அந்தகார லோகத்தில்....68
4. அருள் ஏராளமாய் பெய்யும்....46
5. அருள் நாதா நம்பி வந்தேன்....123
6. அருள் நாதா ரட்சைசெய்து....136
7. அருள் மாரி எங்குமாக....56
8. அருள் ஜோதி தோன்றிடாமல்....81
9. அற்ப வாழ்வை வாஞ்சியாமல்....113
10. அன்பின் சொரூபி யேசு நிற்கிறார்....45
11. அனாதி நித்திய நேசர்....51


## ஆ


12. ஆயுததாரி நான் அபாத்திரனே....4
13. ஆராய்ந்து பாரும் கர்த்தரே....107


## இ


14. இடையில் ஒன்றும் நில்லாமல் உம்....109
15. இம்மானுவேலின் இரத்தத்தால்....7
16. இமால்ய மலை யேறி....50
17. இவ்வேற்ற நேரத்தில்....87


## உ


18. உந்தன் செட்டை நிழலில்....66

19. உந்தன் சொந்த மாக்கினீர் ........ 124
20. உம்பேரில் நான் மேன்மேலும் சார ........ 147
21. உம்மாலேயன்றி ரட்சகா ........ 57
22. உம்மோடு யேசுவே ........ 130

## எ

23. எக்காலும் யேசுவே ........ 72
24. எத்தேசத்திலேயும் ப்ரசங்கித்தே ........ 19
25. எந்தன் ஆத்ம நேசரே ........ 10
26. எந்தன் ஜீவன் யேசுவே ........ 122
27. என் அருமை ரட்சகா கண்ணோக்குமேன் ........ 54
28. என் அருள் நாதா யேசுவே ........ 37
29. என் ஆவி ஆத்மா தேகம் ........ 117
30. என் நேரமேயும் பாடுவேன் ........ 31
31. என் பாவம் தீர்ந்த நாளையே ........ 71
32. என் பாவம் நீக்கிவிட்டனர் ........ 63
33. என் பிதாவே மாசில்லாமல் ........ 119
34. என் மீட்பர் ரத்தஞ் சிந்தினார் ........ 103
35. என் மீட்பரே என் நாதரே ........ 121
36. என் முன்னே தேவன் போகிறார் ........ 73
37. என் யேசுவே உம்மையே நான் நேசிக்கிறேன் ........ 64
38. என் ரக்ஷகா நீர் என்னிலே ........ 115
39. என் ஜீவன் சுகம் செல்வம் ........ 118

40. என் ஜீவன் போகும் நேரம் ........ 17

ஏ

41. ஏகோபித்துச் சேருங்களேன் ........ 25

42. ஏராளமான கூட்டத்தார் சூழ ........ 79

ஒ

43. ஒப்பில்லாத ஸ்நேகத்தால் ........ 133

44. ஒன்று மில்லாமல் உந்தன் ........ 111

க

45. கர்த்தாவே இறங்கும் ........ 22

46. கர்த்தாவே எதுமட்டும் ........ 144

47. கர்த்தாவே பணிவிடை செய்ய ........ 65

48. கரை ஏறி உமதண்டை ........ 70

49. கல்வாரியை நோக்கும் எப்பாவியையும் ........ 97

50. காது குளிரப் பாடுங்கள் ........ 21

51. கெட்டுப்போன மாந்தரை ........ 52

52. கெட்டோனை ரக்ஷியும் சாவோனைக் காரும் ........ 5

53. கைதாங்கி வாரும் ஏழை அடியேனை ........ 128

54. கோடான கோடிக் கணக்கான மாந்தர் ........ 38

ச

55. சத்ய வேதமான விதை காலை மாலை ........ 23

56. சமஸ்தம் கிறிஸ்துவே ........ 120

57. சிறையின் கஷ்டம் கசப்பிலும் ........ 43

58. சீர்கெட்ட பாவ மாந்தரை ....6

59. சீர்கெட்டோரே நம்பி வாரும் ....88

60. சீர்பெறாமல் திக்கில்லாமல் ....32

61. சீரில்லாத பாபிஷ்டரே ....35

62. சுக காலம் என்கிலும் ....18

63. சொற்பக் காலம் பிரிந்தாலும் பார் ....44

## த

64. தட்டித் தட்டி நிற்கிறார் ....3

65. தந்தை தன் சிறு மைந்தனைக் ....126

66. தயாபரா என் உள்ளத்தில் ....141

67. தயாபரா கண்ணோக்குமேன் ....29

68. தயாபரா காத்தருளும் ....127

69. திக்கற்ற பாவி நான் ....9

70. திவ்ய அக்னி ஈவுக்காக ....139

71. திவ்ய அன்பின் சத்தத்தை ரட்சகா ....98

72. திவ்ய ஐக்கியத்தில் ....148

73. திவ்ய காளச்சத்தம் கேட்க யேசு தோன்றும் காலத்தில் ....99

74. திவ்ய விசேஷம் கூறும் ....95

75. தேடிக்கொண்டே மேய்ப்பர் ....76

76. தேவ சமாதான ....135

77. தேவனே கண்ணோக்குமேன் ....74

78. தேவனே ப்ரசன்னமாகி ....149

79. தேவாவி மனவாசராய்........................................................................142

80. தேவாவியே நீர் அவிழ்ப்பீர்...............................................................143

## ந

81. நல் மீட்பர் பட்சம் நில்லும்..................................................................151

82. நல்லசெய்தி யேசுவை..........................................................................53

83. நன் மீட்பரே உம்மேலே........................................................................77

84. நாயனே எந்தன் ஆத்துமா.......................................................................80

85. நான் உம்மைப்பற்றி ரட்சகா...................................................................62

86. நான் என் சொந்தமல்ல யேசு..................................................................116

87. நான் ப்ரமித்து நின்று பேரன்பின்............................................................134

88. நிர்ப்பந்த பாவி யேசுவால்.......................................................................11

89. நீர் வாரும் கர்த்தாவே..........................................................................146

90. நேச ஆத்ம நாயகா...............................................................................154

## ப

91. பக்தரே அண்ணாந்து பாரும்....................................................................27

92. பரிசுத்தம்பெற வந்திட்டீர்களா.................................................................36

93. பல்லவிகள்–இயேசு நேசிக்கிறார்..............................................................ப.2

94. பல்லவிகள்–இயேசுவைப் பார்...................................................................ப.8

95. பல்லவிகள்–இயேசுவோடு எங்கும்..............................................................ப.3

96. பல்லவிகள்–உம் திரு ரத்தம் தேவை...........................................................ப.7

97. பல்லவிகள்–எந்தன் ஜெபம் தேவன் கேட்கிறார்..............................................ப.11

98. பல்லவிகள்–எல்மீட்பர் நோக்கிச் சஞ்சலத்தை சொல்லுமே.............................ப.18

99. பல்லவிகள்–எல்லாரிலும் அன்பர் யேசு....................ப.17
100. பல்லவிகள்–என்னை மேலும் மேலும் சேர்க்கிறீர்....................ப.6
101. பல்லவிகள்–ஒப்பற்ற பேரன்பை....................ப.5
102. பல்லவிகள்–கர்த்தாவின் சித்தம் மெய்ப் பாக்கியமே....................ப.19
103. பல்லவிகள்–காணாமலே போன ஆட்டைத்....................ப.12
104. பல்லவிகள்–காணாமற்போன என்னை....................156
105. பல்லவிகள்–திருரத்தத்தாலே நாதா....................ப.10
106. பல்லவிகள்–திவ்விய சமாதானத்தை....................ப.15
107. பல்லவிகள்–தூய நேச அருள் நாதா....................ப.9
108. பல்லவிகள்–நம்புவோம் நம்புவோம்....................ப.4
109. பல்லவிகள்–நல் மீட்பரண்டை....................ப.16
110. பல்லவிகள்–பாவம் முற்றும் போக்கும் பேரன்பும்....................ப.13
111. பல்லவிகள்–பாவியாம் எந்தனை....................ப.1
112. பல்லவிகள்–ஜீவ அப்பம் நித்தம் புசிப்போம்....................ப.14
113. பாய்ந்து ஓடுகின்றதே....................100
114. பாவ சஞ்சலத்தை நீக்க....................14
115. பாவ தோஷம் நீக்கிட....................30
116. பாவம் தீராததென்ன?....................26
117. பாவம் ப்ரவேசியா....................106
118. பாவி உந்தன் மீட்பர்....................83
119. பாவி உன் மீட்பர் கரிசனையாய்....................41

120. பாவி கேள் உன் ஆண்டவர்....49
121. புத்திக்கடங்காத வல்ல....140
122. பூவின் நற்கந்தம் வீசும் சோலையாயினும்....105
123. பேரன்பர் யேசு நிற்கிறார்....86
124. பேரின்ப தேசம் பாடுவேன்....13
125. பொன்னகர் இன்பத்தைப் பெற்றிடுவோம்....85
126. போற்றும் போற்றும் புண்ணிய நாதரைப் போற்றும்!....39
127. போற்றுவேன் என் மீட்பர் அன்பை....61

## ம

128. மங்கல வார்த்தை சீக்கிரமாய்....28
129. மா நேசர் பேரில் சார்ந்து....132
130. முந்தி யேசுநாதர் நின்று....112
131. முயல்வோம் முயல்வோம் தேவ ஊழியரே....16
132. மெய் ராஜா கிறிஸ்துநாதர்....33
133. மெய்த்தேவனைத் துதி பெரு நன்மை செய்தார்....34
134. மெய்ப் பக்தர் தாசரே....92
135. மெய்ப் பக்தனே நீ நித்திரை செய்கிறாய்....47
136. மெய்ப்பக்தரே நற்செய்தி கேளும்....82
137. மெய்யாம் வாசஸ்தலமுண்டே....8
138. மேலோகத்தில் என் பங்கு நீர்....78
139. மேலோகத்திலுள்ள மா சேனையார் யார்?....15
140. மேன்மேலும் நீர் தாரும்....59

141. மோட்சலோக தூதர் ஸ்துதி செய்கிறார். ....67

ய

142. யுத்த சேனையில் பாதகம் நுழைந்ததே....108

143. யேசு என் மீட்பர் சண்டாளருக்காய்....42

144. யேசு என்னும் நாமத்தை....150

145. யேசு நாதர் மாட்சியோடு மீண்டும் வந்து தோன்றுவார்....84

146. யேசு நாதா காக்கிறீர்....60

147. யேசு ஸ்வாமி அருள் நாதா....55

148. யேசுநாதர் உள்ளம்....155

149. யேசுநாதர் என் சந்தேகம்....96

150. யேசுநாதர் ஐங்காயத்தை நோக்கிப் பார்த்தால்....104

151. யேசுநாதா பக்தியாக....152

152. யேசுவண்டை வந்தால் அவர் ஏற்றுக்கொள்வார்....101

153. யேசுவண்டை வாருமேன்....89

154. யேசுவின் அன்பில் மூழ்கவும்....91

155. யேசுவின் சொந்தம்....125

156. யேசுவே கல்வாரியில்....102

157. யேசுவே நான் உம்மைப்....90

158. யேசுவை நம்பிப் பற்றிக்கொண்டேன்....93

159. யேசுவை நாம் நோக்கி....137

160. யேசுவைப் போலச் சகாயஞ் செய்வார்....94

161. யேசையர் தயைகூர....24

## ர

162. ரக்ஷகா கண்ணோக்குமேன்........129

163. ரட்சா பெருமானே பாரும்........58

## வ

164. வருவாரே! தாவீதின் மைந்தர்:........40

165. வல்ல தேவன் கூறுவித்துச்........75

166. வல்ல யேசுநாதா........153

167. வா இளைப்பாறல் தருவேன்........114

168. வா நீச பாவி வா........2

169. வா பாவி இளைப்பாற வா........12

170. வாரும் யேசுநாதா வாரும்........145

171. விண் ஏகு முன் நல் வார்த்தையை........138

172. விருந்தைச் சேருமேன்........20

173. வீர தீரமாய்........69

## ஜ

174. ஜீவநேசா அருள் நாதா........131

175. ஜெய ராஜ கொடி ஏற்றிக்காட்டியே........48

# சுவிசேஷ கீதங்கள்

## 1. 'There is a gate that stands ajar!' (372)

**அதோ! ஓர் ஜீவ வாசலே!**
அவ்வாசலில் ஓர் ஜோதி
எப்போதும் வீசுகின்றதே,
மங்காத அருள் ஜோதி.

**பல்லவி**

ஆ! ஆழ்ந்த அன்பு இதுவே!
அவ்வாசல் திறவுண்டதே
பாரேன்! பாரேன்!
பார்! திறவுண்டதே.

2. அவ்வாசலில் ப்ரவேசிப்போர்
கண்டடைவார் மெய்வாழ்வும்;
கீழோர், மேலோர், இல்லோர், உள்ளோர்,
எத்தேச ஜாதியாரும்.

3. அஞ்சாமல் அண்டிச் சேருவோம்;
அவ்வாசலில் உட்செல்வோம்;
எப்பாவம் துன்பும் நீங்கிப்போம்
கர்த்தாவைத் துதி செய்வோம்.

## 2. 'I here Thy welcome voice' (475)

**வா! நீச பாவி! வா,**
என்றென்னைக் கூப்பிட்டீர்;
என் தோஷம் தீர, ரக்ஷகா!
சுத்தாங்கம் பண்ணுவீர்.

**பல்லவி**

அருள் நாயகா!
நம்பி வந்தேனே
தூய திரு ரத்தத்தால்
சுத்தாங்கம் பண்ணுமே,

2. சீர் கெட்ட பாவி நான்
என் நீதி கந்தையே
என்றாலும் உமதருளால்
துர்க்குணம் மாறுமே.

3. மெய்ப் பக்தி பூரணம்
தேவாவியாலுண்டாம்
உள்ளான சமாதானமும்
நற்சீறும் பெறலாம்.

4. உண்டான நன்மையை
நீர் விர்த்தியாக்குவீர்,
இப்பாவ குணத் தன்மையை
நிக்ரகம் பண்ணுவீர்.

5. ஆ! தூய ரத்தமே!
ஆ! அருள் நாயகா!
ஆ! கிருபா விசேஷமே!
ஆ! லோக ரக்ஷகா!

### 3. 'Knocking, Knocking, who is there?" (422)

**தட்டித் தட்டி நிற்கிறார்,**
காத்துக் கொண்டிருக்கிறார்,
பரதேசி போல வந்தும்
ராஜனாய் இருக்கிறார்.
உள்ளமே, இவ்வன் புணர்ந்து
கதவைத் திறக்கப்பார்!

2. தட்டித் தட்டி நிற்கிறார்,
காத்துக் கொண்டிருக்கிறார்,
நிலையோரம் புல் முளைத்து,
கீலும் துருப்பட்டது.
கதவசையாமல் தங்கி,
திறவாமற் போயிற்று!

3. தட்டித் தட்டி நிற்கிறார்,
காத்துக் கொண்டிருக்கிறார்;
சூட்டப்பட்ட சிரசுள்ளார்!
காயப்பட்ட கைகள் பார்!
நேசப் பார்வையுற்ற மீட்பர்
இன்னும் காத்து நிற்கிறார்!

4. உள்ளே வாரும் யேசுவே!
என்தன் நெஞ்சில் தங்குமே,
திவ்ய அன்பை உணராமல்,
முன்னே வாசல் பூட்டினேன்,
இப்போதே! என் நேச நாதா!
உள்ளே வாரும்! வாருமேன்.

## 4. 'Only an armour-bearer' (696)

**ஆயுததாரி நான், அபாத்திரனே,**
சேனாபதிக்கோ பின் செல்வேனே.
நில், செல் என்றவர் சொல்லக் கேட்கவும்,
யேசுவின் நல்வாக்கை நம்பி வெல்லவும்.

**பல்லவி**

பேரொலி கேட்குதே! ஜெயமுண்டாம்!
போராடுவோம் முனைமுகமெல்லாம்.
சேனாதிபதி என்னை நோக்குவார்;
ஆயுததாரியையும் நம்புவார்.

2. ஆயுததாரி நான் இந்நேரத்தினில்
சன்னத்தனாகப் படை முகத்தில்,
போர்க்களத்தில் தாரவாரங் கேட்கவே
பயமில்லாமல் யுத்தஞ்செய்வேனே.
பேரொலி கேட்குதே! மி.

3. ஆயுததாரி நான், அசக்தனுமாய்க்
காணப்பட்டாலும், வெற்றிவேந்தனாய்
நித்திய காலம் மிக வாழுவேன்,
மோட்ச வீட்டில் என்றும் நிலைத்திருப்பேன்.
பேரொலி கேட்குதே! மி.

## 5. 'Rescue the perishing; care for the dying' (814)

**கெட்டோனை ரக்ஷியும்; சாவோனைக் காரும்**
பாவமும் சாபமும் நீங்கச் செய்யும்
சோர்வோனைத் தாங்கிடும்; வீழ்ந்தோனைத் தூக்கும்
சுப விசேஷத்தை அறிவியும்.

**பல்லவி**

கெட்டோனை ரக்ஷியும், சாவோனைக்காரும்
யேசு தயாபரர்; யேசு வல்லோர்.

2. பாவ சண்டாளரைப் பொறுமையோடு
திருத்தி ரக்ஷிக்கப் பார்க்கிறாரே
மெய் மனஸ்தாபமாய் நம்பிக்கையோடு
வந்தடைந்தால், அவர் மன்னிப்பாரே.

3. தீக்குணம் நெஞ்சிலே, குன்றிப்போனாலும்,
மோட்சத்தை நாடும் நல்லாசையுண்டாம்
அன்பின் விசேஷத்தால், சத்தியத்தாலும்
குன்றிய வாஞ்சையும் மேலிடுமாம்.

4. கெட்டோனை ரக்ஷியும்; ஆத்திரத்தோடு;
ஆவியின் வல்லமை அருளுவார்,
ரக்ஷிப்பைக் கூறவும் உருக்கத்தோடு,
தேவாசீர்வாதமும் தந்திடுவார்.

**6. 'God loved the world of sinners lost' (17)**

**சீர்கெட்ட பாவ மாந்தரை**
நல் மீட்பர் நேசித்தார்
கைம்மாறில்லாமல் ரக்ஷிப்பை
எல்லோர்க்கும் தருவார்.

**பல்லவி**

ஒப்பில்லாத நேசம்! பார்!
பேரன்பின் பெருக்கே!
என் பாவம் நீக்க மரித்தார்
தயாள மீட்பரே.

2. மெய் விசுவாச கரத்தால்
அம்மீட்பைப் பற்றுவேன்.
மாசற்ற திரு ரத்தத்தால்
சுத்தாங்கமாகுவேன்.

3. பேரன்பின் சுவிசேஷத்தால்
சம்பூரணம் உண்டாம்.
சுபாவம் மாரிப்போவதால்,
நற்சீறைப் பெறலாம்.

4. ஆனந்த பரவசமும்
உண்டாகும் இவ்வாறாய்
பேரின்பத்தின் அச்சாரமும்
ஈவாரே நிறைவாய்.

5. பிசாசின் பெலனறவும்,
கெம்பீரங் கொள்ளுவோம்
நல் நாதர் அரசாளவும்
மெய் வாழ்வும் அடைவோம்.

**7. There is a fountain filled with blood, C.M. (129)**

**இம்மானுவேலின் இரத்தத்தால்**
நிறைந்த ஊற்றுண்டே;
எப்பாவத் தீங்கும் அதனால்
நிவிர்த்தியாகுமே.

2. மா பாவியான கள்ளனும்
அவ்வூற்றில் மூழ்கினான்.
மன்னிப்பும் மோக்ஷானந்தமும்
அடைந்து பூரித்தான்.

3. அவ்வாறு நானும் யேசுவால்
விமோசனம் பெற்றேன்.
என் பாவம் நீங்கிப்போனதால்
ஓயாமல் பாடுவேன்.

4. காயத்தில் ஓடும் ரத்தத்தை
விஸ்வாசத்தால் கண்டேன்.
ஒப்பற்ற மீட்பர் நேசத்தை
எங்கும் பிரஸ்தாபிப்பேன்.

5. விண் வீட்டில் வல்ல நாதரை
நான் கண்டு பூரிப்பேன்.
அங்கென்னை மீட்ட நேசத்தைக்
கொண்டாடிப் போற்றுவேன்.

**8. "Oh! think of the home over there!' (942)**

**மெய்யாம் வாசஸ்தலமுண்டே**
ஜீவநதியின் ஓரத்திலாம்.
மோக்ஷ வாசிகளானவரே
பரிசுத்த சம்பூரணராம்.

**பல்லவி**

அங்குதான் – அங்குதான்
மெய்யாம் வாசஸ்தலமுண்டே.

2. என் பிரிய சிநேகிதரும்
அந்த ஸ்தலத்தில் சென்றிருப்பார்
பரஞ்சோதி சமுகத்திலும்
சுகவாழ்வையும் பெற்றிருப்பார்.

3. என் அருமை ரக்ஷகரும்
பரலோகத்தின் சூரியனாம்,
அந்த வீட்டில் சேர்ந்திடவும்
நீங்கிப்போகும் விசாரமெல்லாம்.

4. சேர்வேன் அதிசீக்கிரமே
மோக்ஷலோகத்தில் ஆனந்திப்பேன்
ஜீவநதியின் ஓரத்திலே
என் மீட்பரை ஸ்தோத்தரிப்பேன்.

## 9. 'I hear the Saviour say' (855)

**திக்கற்ற பாவி நான்,**
சீர்கெட்ட நீசனே.
சொந்தக் கிரியை கந்தைதான்;
என்தன் கதி யேசுவே.

**பல்லவி**

கடனில்லையாம்!
தீர்ந்து போயிற்றே,
யேசுவால் என் தீதெல்லாம்
நிவிர்த்தியாயிற்றே.

2. என் நேச ரக்ஷகா!
உம் திரு ரத்தமே
தீமை, கறை, மாசெல்லாம்
நீங்கிவிடச் செய்யுமே.

3. என் குணம் தீயதே;
என்றாலும் தேவரீர்
மாசில்லாத ரத்தத்தால்
சுத்த ஸ்பாவம் அளிப்பீர்.

4. நான் சாக நேரிட்டால்,
சந்தோஷ மடைவேன்.
பாவக்கடன் தீர்ந்ததால்
பாடிக் கரை ஏறுவேன்.

5. நல்ல மோக்ஷஞ் சேரவும்
பேரின்பம் பெறுவேன்.
யேசுநாதர் பாதத்தில்
தாழ்ந்து நமஸ்கரிப்பேன்.

**10. 'Jesus Lover of my soul' (227, 1172)**

**எந்தன் ஆத்ம நேசரே!**
வெள்ளம் போன்ற துன்பத்தில்,
தாசன் திக்கில்லாமலே
தடுமாறிப் போகையில்,
தஞ்சம் தந்து, யேசுவே,
திவ்ய மார்பில் காருமேன்;
அப்பால் கரை யேற்றியே
மோட்ச வீட்டில் சேருமேன்.

2. வல்ல தேவரீர் அல்லால்
வேறே தஞ்சம் அறியேன்;
கைவிடாமல், நேசத்தால்
ஆற்றித் தேற்றித் தாங்குமேன்.
நீரே எந்தன் நம்பிக்கை;
நீர் சகாயம் செய்குவீர்.
ஏதுமற்ற ஏழையை
செட்டையாலே மூடுவீர்.

3. குறை யாவும் நீக்கிட
நாதா நீர் சம்பூரணர்.
திக்கற்றோரைத் தாங்கிட
நீரே மா தயாபரர்.
நான் அசுத்த பாவிதான்;
நீரோ சுத்தர் சுத்தரே.
நான் அநீதி கேடுள்ளோன்;
நீர் நிறைந்த நீதிரே.

4. பாவம் யாவும் மன்னிக்க
மூட வல்லோரான நீர்
என்னைச் சுத்திகரித்து
அருள் பாயச் செய்குவீர்.
ஜீவ ஊற்றாம் யேசுவே!
எந்தன் தாகம் தீருமேன்,
ஸ்வாமி! என்றும் என்னிலே
நீரே ஊறி வாருமேன்.

## 11. 'Come, every soul by sin oppressed' (392)

**நிர்ப்பந்த பாவி! யேசுவால்**
விமோசன முண்டாம்.
மெய் வேத வாக்கை நம்பினால்,
மா பாரம் நீங்குமாம்.

**பல்லவி**

நம்பி வந்தால், நம்பி வந்தால்
யேசுவண்டையில்,
ரக்ஷிப்பாரே! ரக்ஷிப்பாரே!
இந்த நேரத்தில்

2. மாசற்ற ரத்தஞ் சிந்தலால்
மெய்வாழ்வுண்டாக்கினார்
தூய்தான செந்நீர் ஸ்நானத்தால்
சுத்தாங்கம் பண்ணுவார்.

3. பேரின்ப வீட்டில் சேரவும்,
கைம்மாறில்லாமலே
ஆனந்தம் பெற்று வாழவும்
மெய் வழி யேசுவே.

4. சந்தோஷ கூட்டஞ் சேருவாய்,
ப்ரயாணஞ் செய்யவும்
மேலான மோட்சம் அடைவாய்
ஆனந்த க்ரீடமும்.

## 12. 'I heard the voice of Jesus say; (216)

**'வா! பாவி! இளைப்பாற வா!**
என் திவ்விய மார்பிலே
'நீ சாய்ந்து சுகி' என்பதாய்
நல் மீட்பர் கூறவே;
இளைத்துப்போன நீசனாய்
வந்தாறித் தேறினேன்;
என் பாரம் நீங்கி ஏசுவால்
சந்தோஷமாயினேன்.

2. 'வா! பாவி! தாகந் தீர்க்க வா!
தாராளமாகவே
நான் ஜீவ தண்ணீர் தருவேன்'
என்றார் என் நாதரே;
அவ்வாறு ஜீவ ஊற்றிலே
நான் பானம் பண்ணினேன்.
என் தாகந் தீர்ந்து பெலனும்
மெய்வாழ்வும் அடைந்தேன்.

3. 'வா, பாவி! இருள் நீங்க வா!
நான் லோக ஜோதியே,
உன் நெஞ்சில் ஒளி வீசுவேன்'
என்றார் என் நேசரே.
மெய்ஞான அருணோதயம்
அவ்வாறு நான் கண்டேன்.
அச்சோதியில் சந்தோஷமாய்
நான் என்றும் ஜீவிப்பேன்.

## 13. 'I love to think of the heavenly land' (991)

**பேரின்ப தேசம் பாடுவேன்;**
விண் தூதர் வாழவும்.
எப்பாடுமின்றிச் செழிப்பார்
என் இஷ்டர் நேசரும்

**பல்லவி**

நீடுழி காலம், நீடுழி காலம்,
நீடுழி காலம், நீடுழி வாழுவோம்.

2. பேரின்ப தேசம் பாடுவேன்;
என் மீட்பர் ஜோதியாய்
வான் ஆட்சிசெய்யப் போற்றுவார்
எல்லாரும் ஏகமாய்.

3. பேரின்ப தேசம் பாடுவேன்;
மெய்ப் பக்தர் வீடதாம்.
பொற்க்ரீடம் ஜெயகோலமும்
கெம்பீரமும் உண்டாம்.

4. பேரின்ப தேசம் பாடுவேன்;
அங்காரவாரிப்போம்
சங்கீத மேளம் கோஷ்டிக்க
ஆனந்தம் அடைவோம்.

5. பேரின்ப தேசம் பாடுவேன்;
கிரேஷ்ட நாடதே.
அங்கேறிப்போக ஆவலும்
என் உள்ளத்தில் உண்டே.

## 14. 'What a Friend we have in Jesus!' (319)

**பாவ சஞ்சலத்தை நீக்க**
ப்ராண ஸ்நேகிதருண்டே
பாவப் பாரம் தீர்ந்துபோக
மீட்பர் பாதம் தஞ்சமே.
சால துக்க துன்பத்தாலே
நெஞ்சம் நொந்து சோருங்கால்,
துன்பம் இன்பமாக மாறும்
ஊக்கமான ஜெபத்தால்.

2. கஷ்ட நஷ்ட முண்டானாலும்
யேசுவண்டை சேருவோம்.
மோச நாசம் நேரிட்டாலும்
ஜெப தூபங் காட்டுவோம்.
நீக்குவாரே நெஞ்சின் நோவை
பெலவீனம் தாங்குவார்
நீக்குவாரே மனச்சோர்பை;
தீயகுணம் மாற்றுவார்.

3. பெலவீனமானபோதும்
கிருபாசனமுண்டே.
பந்து ஜனம் சாகும்போதும்
புகலிடம் இதுவே.
ஒப்பில்லாத ப்ராணநேசா
உம்மை நம்பி நேசிப்போம்.
அளவற்ற அருள் நாதா!
உம்மை நோக்கிக் கெஞ்சுவோம்.

**15. 'With harps and with vials there stand a great throng!' (1023)**

**மேலோகத்திலுள்ள மா சேனையார் யார்?**
ஜெய கீதத்தைப் பாடிக் கெம்பீரிக்கிறார்.

**பல்லவி**

பாவ நாசகரான மா நேசருக்கே
சர்வ மகிமை மேன்மையும் உரியதே.

2. ஓர் காலத்தில் தீயரானாலுமே, பார்!
தூய தன்மையராகிச் சந்தோஷிக்கிறார்.

3. நல் மீட்பர் இவ்வாறு மா நன்மை செய்தார்
தேவ த்ரோகியை ரக்ஷித் திவ்வாழ்வைத் தந்தார்.

4. மா நேசர் இவ்வருள் செய்யாதே போனால்
கெடுவோமே! அநாதராய்ப் பாவத்தினால்.

5. ஏகோபித் தாராதிப்போம் மாட்சிமையாய்
அருள் நாதரைப் போற்றுவோம் மகிழ்ச்சியாய்.

**16. 'To the work! To the work! we are servants of God' (751)**

**முயல்வோம்! முயல்வோம்! தேவ ஊழியரே;**
செல்லுவோம் யேசுநாதர் நற்பாதையிலே.
மிக்க ஞானத்தினால் வழி நடத்துவார்;
வல்ல ஆவியின் பெலனை அருளுவார்.

**பல்லவி**

முயல்வோம்... முயல்வோம்,
முயல்வோம்... முயல்வோம்,
நம்புவோம்... நாடுவோம்,
நல் மீட்பர் வருமளவும்.

2. முயல்வோம்! முயல்வோம்! சுவிசேஷகரே!
காட்டுவோம் தெளிவாய் ஜீவ மார்க்கத்தையே
பாவ நாச விசேஷத்தைப் பகரவும்,
ப்ராயச்சித்த நற்செய்தி விஸ்தரிக்கவும்.

3. முயல்வோம்! முயல்வோம்! விசுவாசிகளே!
கூறுவோம் கிறிஸ்துவின் ராஜரீகத்தையே
அந்தகாரத்தின் க்ரியைகள் நொறுக்குவார்;
பரலோக பேரின்பத்தை நாட்டுவிப்பார்.

4. முயல்வோம்! முயல்வோம்! தேவதாசர்களாய்
சேருவோம் மோக்ஷலோகம் மகத்துவமாய்
அந்த லோகத்தின் ஜோதியில் ஆனந்திப்போம்;
சுகவாழ்வும் சந்தோஷமும் கண்டடைவோம்.

## 17. 'The sands of time are sinking' (975)

**என் ஜீவன் போகும் நேரம்**
சமீபம் வந்ததே!
பேரின்ப அருணோதயம்,
இதோ! உதித்ததே.
ராக்காலம் மோசம் நீங்கும்
விண் சுடரொளியில்;
மா அருள் ஜோதி வீசும்
பேரின்ப தேசத்தில்.

2. சாரோனின் ரோஜா புஷ்பம்
சுகந்தம் மணமும்
விண் சோலை எங்கும் வீசி,
என்றைக்கும் கமழும்
அங்கேறிச் சுகிப்பேனே
வானாதி வானத்தில்
மா அருள் ஜோதி வீசும்
பேரின்ப தேசத்தில்.

3. ஆ நேச ஜீவ ஊற்று!
என் அருள் நாதரே!
ஈண்டுண்ணும் ஜீவ தண்ணீர்
அங்காழி போலாமே.
பேரன்பின் பெருவெள்ளம்
பாய்ந்தோடும் மோட்சத்தில்
மா அருள் ஜோதி வீசும்
பேரின்ப தேசத்தில்.

4. அன்போடும் நீதியோடும்
என் சுக துக்கமும்
ஆண்டென்னைப் பாதுகாத்து
வந்தார் எந்நேரமும்.
ஆ! போற்றுவேன் தெய்வன்பை,
விண் வாசஸ்தலத்தில்;
மா அருள் ஜோதி வீசும்
பேரின்ப தேசத்தில் .

5. நல்நித்திரை செய்து, பின்பு
மாசற் றெழும்புவேன்.
என் மீட்பரை நான் கண்டு
ஆனந்தங் கொள்ளுவேன்
ராஜாதிராஜன் என்னை
அழைக்கும் நேரத்தில்,
மா அருள் ஜோதி வீசும்
பேரின்ப தேசத்தில்.

6. தன் ஆடையைப் பாராமல்
பர்த்தாவின் முகத்தை
பத்தினி நோக்குமாறு,
நான் ஜீவக்ரீடத்தை
நோக்காமல், மீட்பர் மாண்பைப்
பார்ப்பேன் அவ்வேளையில்.
இம்மானுவேலே ஜோதி
பேரின்ப தேசத்தில்.

## 18. 'Simply trusting every day'

**சுக காலம் என்கிலும்,**
துக்கமானபோதிலும்
நெறிநின்று தவறேன்.
நித்தம், நித்தம், நம்புவேன்.

**பல்லவி**

வாழ்விலும் மா தாழ்விலும்,
கஷ்ட நஷ்டம் ஆகிலும்,
யேசுவைப் பின்பற்றுவேன்.
நித்தம், நித்தம், நம்புவேன்.

2. என்தன் வெறும் நெஞ்சத்தில்
தூய ஆவி விளங்கில்,
அவராலே செல்லுவேன்,
நித்தம், நித்தம், நம்புவேன்.

3. இன்பம் ஆகில் பாடுவேன்,
துன்பத்தில் மன்றாடுவேன்,
மோசம் நேரில் அஞ்சிடேன்,
நித்தம், நித்தம், நம்புவேன்.

4. ஜீவகாலம் முழுதும்,
சாவுபரியந்தமும்,
மோட்சம் நாடிச் செல்லுவேன்,
நித்தம், நித்தம், நம்புவேன்.

**19. 'Oh, where are the reapers that garner in' (749)**

**எத்தேசத்திலேயும் ப்ரசங்கித்தே**
கற்கதிரைச் சேர்ப்பாருண்டோ, இன்றே?
கையாடிய கத்தி மெய்யறிவாம்,
களஞ்சியமும் மோட்சலோகமாம்.

**பல்லவி**

கொய்வார் எங்கே? சகாயர் யார்?
அவசரமான திந்த வேலை! பார்!
க்ராமந்தோறும் ப்ரசங்கித்தே
நற்கதிரைச் சேர்ப்பா ருண்டோ, இன்றே?

2. விசேஷித்த ஸ்தலத்துச் சந்தைக்கும்,
சாதாரண ஜனத்தின் வீதிக்கும்,
எவ்வருணத்தாரினிடத்திற்கும்
சென்றே சுவிஷேசத்தைக் கூறவும்,
கொய்வார் மி.

3. எத்திசையிலும் விளைவாகுதே,
இப்போதறுத்தால் பலன் காண்போமே,
இவ்வேலையும் ஜாஸ்தி! நீர் தீவிரியும்!
ராக்காலமும் சீக்கிரம் வந்திடும்!
கொய்வார் மி.

4. சகோதரர் யாவரும் வாருங்கள்,
உற்சாக சந்தோஷமாய்ச் சேருங்கள்,
நற்பலனைக்கண்டு கெம்பீரிப்போம்,
ஆதாய மானந்தமும் அடைவோம்.
கொய்வார் மி.

**20. 'Come! for the feast is spread'**

**விருந்தைச் சேருமேன்,**
அழைக்கிறார்!
ஆகாரம் பாருமேன்,
போஷிப்பிப்பார்;
தாகத்தைத் தீர்க்கவும்,
யேசுவின் மார்பினில்
சாய்ந்திளைப்பாறவும்,
வா! பாவி! வா!

2. ஊற்றண்டை சேரவும்,
ஜீவனுண்டாம்.
பாடும் விசாரமும்
நீங்கும் எல்லாம்!
நம்பி வந்தோருக்கு
த்ருப்தி உண்டாயிற்று
ஜீவாற்றின் அண்டைக்கு
வா! பாவி! வா!

3. மீட்பரின் பாதமும்
சேராவிடில்
தோல்வியே நேரிடும்
போராட்டத்தில்.
யேசுவே வல்லவர்;
யேசுவே நல்லவர்,
யேசுவே ஆண்டவர்.
வா! பாவி! வா!

4. மோட்ச பாதையினில்
முன் செல்லுவாய்.
சிற்றின்ப வாழ்வினில்
ஏன் உழல்வாய்?
வாடாத கிரீடமும்
ஆனந்தக் களிப்பும்
மெய்வாழ்வும் பெறவும்
வா! பாவி! வா!

5. சேருவேன், யேசுவே!
ஏற்றுக்கொள்வீர்.
பாவமும் அறவே
சுத்தஞ்செய்வீர்.
அப்பாலே மோட்சத்தில்,
ஆனந்தக் கடலில்
மூழ்கிப்பேரின்பத்தில்
கெம்பீரிப்பேன்.

## 21. 'Sing them over again to me' (357)

**காது குளிரப் பாடுங்கள்**
கிருபா சத்தியம்,
புத்திதெளியக் காட்டுங்கள்
திவ்விய வசனம்
வெல்க! சத்திய வேதம்,
வாழ்க! நித்திய வேதம்.

**பல்லவி**

அமிர்தமே! அற்புதமே!
திவ்விய சத்தியம்
அமிர்தமே! அற்புதமே!
திவ்விய சத்தியம்.

2. நல்ல செய்தியைக் கூறுமேன்
கிருபா சத்தியம்,
பாவநாசத்தைக் காட்டுமேன்
திவ்விய வசனம்
வான வருஷமாறி,
ஞான பொக்கிஷவாரி,
அமிர்தமே! மி.

3. வேத நாயகர் பொழியும்
கிருபா சத்தியம்.
ஜீவ மங்கல மொழியும்
திவ்விய வசனம்.
யேசு! எந்தனைப் பாரும்
நித்தம் எந்தனைக் காரும்.
அமிர்தமே! மி.

## 22. 'Revive Thy work O, Lord' (309)

**கர்த்தாவே! இறங்கும்!**
ப்ரசன்னமாகுவேன்;
மெய்ப்பக்தர் நெஞ்சில் இப்போதும்
வந்தனல் மூட்டுமேன்.

**பல்லவி**

கர்த்தாவே! இறங்கும்!
நற்சீரைத் தாருமேன்,
மாவல்ல க்ரியை செய்யவும்
இந்நேரம் வாருமேன்.

2. கர்த்தாவே! இறங்கும்!
நல்மீட்பர் நாமமும்
மாசுடர் போல் ப்ரகாசிக்க,
பேரன்பைக் காட்டவும்

3. கர்த்தாவே! இறங்கும்!
இவ்வருள் வேதத்தை
கேட்போரின் நெஞ்சில் பொழியும்
தேவாநுக்ரகத்தை.

4. கர்த்தாவே! இறங்கும்!
பேர்நன்மை செய்யுமேன்.
விண்மாரிபெய்ய மேன்மையும்
உண்டாகும் உமக்கே.

**23. 'Sowing in the morning sowing seeds of kindness' (757)**

**சத்ய வேதமான விதை காலை மாலை**
விதைப்போம் எப்போதும் ஓய்வில்லாமலே,
அறுப்பின் நற்காலம் எதிர்நோக்குவோமே;
சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே,

**பல்லவி**

அரிக்கட்டோ டே
அரிக்கட்டோ டே
சேருவோம் எல்லோரும்
அரிக்கட்டோடே.

2. மழையடித்தாலும், வெயிலெரித்தாலும்,
குளிர்ச்சியானாலும், வேலை செய்வோமே,
நல்ல பலன் காண்போம் துன்பம் மாறிப்போகும்,
சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே,
அரிக்கட்டோடே, மி.

3. கவலை, விசாரம்; கஷ்ட நஷ்டத்தோடு
விதைத்தாலும் வேலை விடமாட்டோமே,
இளைப்பாறக் கர்த்தர் நம்மை வாழ்த்திச் சேர்ப்பார்
சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே
அரிக்கட்டோடே, மி.

**24. 'While Jesus whispers to you' (336)**

**யேசையர் தயைகூர**
வா! பாவி! வா!
மெய்ப் பக்தர் ஜெபஞ் செய்ய,
வா! பாவி! வா!
இந்நேரம் கிட்டிச்சேர
வா! பாவி! வா!
இக்ஷணம் நெஞ்சந் தேற
வா! பாவி! வா!

2. மா பாரம் சுமந்தாலும்,
வா! பாவி! வா!
யேசுவால் லகுவாகும்
வா! பாவி! வா!
ஏற்பாரே நேசமாக!
வா! பாவி! வா!
சேர்ப்பாரே தயவாக!
வா! பாவி! வா!

3. அன்போடழைக்கிறாரே!
வா! பாவி! வா!
பேரின்பங் கொடுப்பாரே!
வா! பாவி! வா!
சேராமல், ஆசையோடு
வா! பாவி! வா!
அஞ்சாதுற்சாகத்தோடு
வா! பாவி! வா!

## 25. 'Be glad in the Lord and rejoice! (207)

**ஏகோபித்துச் சேருங்களேன்**
கர்த்தாவில் ஆனந்திக்கவும்,
விசாரம் விட்டோங்களேன்
கெம்பீரித் தாராதிக்கவும்.

**பல்லவி**

செய்வோம்! செய்வோம்!
திரியேகரைத் துதிசெய்வோம்!

2. பராபரன் மெய்வஸ்துவாம்
தயாபரர் ஆண்டவரே
வந்தார் வையகத்திலேயாம்!
இரட்சிக்க வல்லவரே.
செய்வோம்! செய்வோம்!

3. பிசாசின் உபாயங்களால்
பயங்கர மோசமுண்டாம்
ஆனாலும் தேவாவியினால்
ஒத்தாசையும் ஜெயமுமாம்.
செய்வோம்! செய்வோம்!

4. தரித்திரமே யாயினும்
சந்தோஷம் விடாதிருப்போம்.
மா கல்வி இல்லாவிடினும்
ஓயாமல் ஸ்தோத்திரிப்போம்!
செய்வோம்! செய்வோம்!

5. ஏகோபித்துப் பாடுங்களேன்
மகோற்ச வானந்தத்தினால்,
த்ரியேகரைப் போற்றுங்களேன்.
கெம்பீர சங்கீதத்தினால்.
செய்வோம்! செய்வோம்!

## 26. 'Why do you wait dear brother' (351)

**பாவம் தீராததென்ன?**
ஓ! தாமதம் பண்ணுவானேன்?
தயாபரர் நித்திய ஜீவன்
ஈவாரே, சந்தேகிப்பானேன்?

**பல்லவி**

வாவேன்! வாவேன்!
வாவேன்! இச்சணமே!

2. உணர்வில்லாத தென்ன?
பயங்கர மோசமுண்டாம்.
இயேசுவினாலே யல்லாமல்
விமோசனமே யில்லையாம்.

3. சுத்தமில்லாத தென்ன?
மா திவ்ய ஸ்நானமுண்டே!
உன் பாவம் நிவாரணமாகும்
சமூலம் இந்நேரத்திலே.

4. குணப்படாத தென்ன?
ரட்சண்ய நல் நாளிதுவே!
ராக்காலம் சமீபித்துவர
மா மோசமும் சாவுமுண்டே.

## 27. 'Look, ye saints! the sight is glorious!' (127)

**பக்தரே! அண்ணாந்து பாரும்!**
யேசு வெற்றி வேந்தராய்
வானில் தோன்ற, மாந்தர் யாரும்
சேவிப்பாரே தாழ்மையாய்.

**பல்லவி**

வாழ்க! வாழ்க! என்றும் வாழ்க!
வாழ்க! ராஜ ராஜரே!
வாழ்க! வாழ்க என்றும் வாழ்க!
வாழ்க! ராஜ ராஜரே!

2. தேவதூதர் க்ரீடம் சூட்ட
ராஜரீகம் செய்கிறார்.
யாரும் ஜெய கீதம்பாட,
க்ரீடதாரியாகிறார்.

3. தீயரும் முண்முடி சூட்டி
நிந்தையாக வாழ்த்தினார்.
தூய தூதர் வெற்றி கூறிச்
சேவித் தாரவாரிப்பார்.

4. பாரும் ராஜ அபிஷேகம்!
ஆரவாரம் கேளுமேன்.
யேசுவின் சர்வாதிகாரம்
பூமி எங்கும் கூறுமேன்.

## 28. 'Jesus is coming, sing the glad word!' (178)

**மங்கல வார்த்தை! சீக்கிரமாய்**
மானத்தில் தோன்றி மெய்ப் பக்தருக்காய்
ஆளுகை செய்வார் மகத்துவமாய்,
யேசு வந்தருளுவார்.

**பல்லவி**

மங்கல வார்த்தை! வந் தருளுவார்,
யேசு வந்தருளுவார்.
செய்தியைக் கூறும் எத்திசையிலும்,
யேசு வந்தருளுவார்.

2. மங்கல வார்த்தை! மரித்தோரும்
ஜீவனோ டெழுந் தாகாசத்திலும்
ஏறி ஏகோபித்தானந்திக்கவும்,
யேசு வந்தருளுவார்.

3. மங்கல வார்த்தை! மாவாழ்வடைவோம்;
தீங்கணுகாமலும் ஓய்ந்திருப்போம்,
பாவமும் துக்கமும் ஒழிந்துபோம்
யேசு வந்தருளுவார்.

4. மங்கல வார்த்தை! மெய்வாக்கிதுவே!
மீட்பரை நேசிக்கும் தாசர்களே!
பூரிப்புண்டாகும் அத்தினத்திலே,
யேசு வந்தருளுவார்.

## 29. 'Jesus, my Lord, to Thee I cry' (476)

**தயாபரா! கண்ணோக்குமேன்!**
உம்மாலேயன்றி சாகுவேன்,
என் சீரில்லாமை பாருமேன்!
என் பாவம் நீக்குமேன்!

**பல்லவி**

என் பாவம் நீக்குமேன்!
என் பாவம் நீக்குமேன்!
உம் ரத்தமே என் கதியே!
என் பாவம் நீக்குமேன்!

2. என் பாவ ஸ்திதி அறிவீர்,
மாசற்ற ரத்தஞ் சிந்தினீர்,
சீர்கேட்டை யெல்லாம் மாற்றுவீர்
என் பாவம் நீக்குமேன்!

3. மெய்ப்பக்தி ஒன்றுமில்லையே!
நற்கிரியை வீண் பிரயாசையே!
உம் ரத்தத்தின் நிமித்தமே
என் பாவம் நீக்குமேன்!

4. இதோ! நற்பாத மண்டினேன்.
தள்ளாமற் சேர்த்துக்கொள்ளுமேன்!
என்றைக்கும் பாதுகாருமேன்,
என் பாவம் நீக்குமேன்!

## 30. 'What can wash away my sin?' (874)

**பாவ தோஷம் நீக்கிட,**
மீட்பரின் இரத்தம் தானே!
தீய குணம் மாற்றிட
மீட்பரின் இரத்தம் தானே!

**பல்லவி**

மெய்யாம் ஜீவநதி
பாவம் போக்கும் நதி!
வேறே நதியை அறியேன்
மீட்பரின் இரத்தம் தானே!

2. என்னைச் சுத்தமாக்கிட
மீட்பரின் ரத்தம் தானே!
மன்னிப்பை நான் பெற்றிட
மீட்பரின் இரத்தம் தானே!

3. வேறே ரக்ஷிப்பில்லையே!
மீட்பரின் ரத்தம் தானே!
புண்ணியக்ரியை செல்லாதே!
மீட்பரின் ரத்தம் தானே!

4. மோட்ச மார்க்கம் இதுவே!
மீட்பரின் ரத்தம் தானே!
ஏசு சுத்த தீர்த்தமே!
மீட்பரின் ரத்தம் தானே!

## 31. 'I feel like singing all the time' (218)

**என் நேரமேயும் பாடுவேன்;**
விசாரம் நீங்கிற்றே,
இம்மனுவேலைப் போற்றுவேன்;
சந்தோஷமாயிற்றே.

**பல்லவி**

சங்கீதம், கீதம், கீதம் பாடுவேன்.
கீதம், கீதம், சங்கீதம் பாடுவேன்.

2. என் பாவ பலியேசுவை
கல்வாரியிற் கண்டேன்.
அத்தாலுண்டான துக்கத்தை
விட்டாறித் தேறினேன்.
சங்கீதம். மி.

3. பொல்லாத சோதனை உண்டே,
என்றாலும் வெல்லுவேன்.
என் வல்ல கர்த்தர் யேசுவே.
நான் நித்தம் பாடுவேன்.
சங்கீதம். மி.

4. பேரன்பின் சுவிசேஷத்தை
எல்லோருக்குந் தெரிவி,
இப்பூமியெங்கும் வேதத்தைப்
ப்ரஸ்தாபித் தறிவி.
சங்கீதம். மி.

## 32. 'Lone and weary sad and dreary" (481)

**சீர்பெறாமல், திக்கில்லாமல்,**
யேசுவண்டை சேருவேன்,
ஆவலோடும், ஆசையோடும்,
திருப்பாதம் அண்டுவேன்.

**பல்லவி**

அண்டினேனே! அண்டினேனே!
ஆசீர்வாதம் தாருமேன்,
அண்டினேனே! அண்டினேனே!
ஆற்றித் தேற்றிக் காருமேன்.

2. தயவாக, நேசமாக
சீரைத் தந்து ரக்ஷிப்பீர்,
பாவத்தீங்கும் தூர நீங்கும்,
சர்வ சுத்தியாக்குவீர்.

3. குணம் மாற, நெஞ்சம் ஆற
பரவசமாகுவேன்.
கரையேறி, மோக்ஷஞ்சேர்ந்து,
ஊழிகாலம் வாழுவேன்.

4. அருள் தாரும், பாதுகாரும்
மாசு மருவின்றியே
வாழ்விலேயும் தாழ்விலேயும்
தாங்கிவாரும் நாயனே!

**33. 'Our Lord is now rejected' (176)**

**மெய் ராஜா கிறிஸ்துநாதர்**
மா தயை காட்டவும்,
சண்டாள மாந்தராலே
தள்ளுண்டபோதிலும்,
வந்தரசாளும் காலம்
சமீபமாயிற்றே!
ராஜரீக நல்ல காலம் வருமே.

**பல்லவி**

ராஜரீக நல்ல காலம் வருமே.
சமீபமாயிற்றே!
யேசு மாட்சி மேன்மையோடு
ப்ரசன்னமாகவே,
ஜோதி காட்சி கண்டு பூத்த
கண் யாவும் குளிரும்,
ராஜரீக நல்ல காலம் வரட்டும்!

2. விண் ஜோதி தோன்றி வீச,
மெய் தேவபக்தரும்
கெம்பீர கோலத்தோடு
கொண்டாட்டஞ் செய்யவும்,
நல்மீட்பர் மாண்பைப் பார்த்து
கண் யாவும் குளிரும்
ராஜரீக நல்ல காலம் வரட்டும்!

3. எப்பாடும் நோவும் இன்றி
ஆனந்தம் அடைவோம்.
மாசற்ற நெஞ்சத்தோடு
ஓயாமல் போற்றுவோம்.
மா ராஜா சன்னிதானம்
நின்றாட்சி செய்யவும்.
ராஜரீக நல்ல காலம் வரட்டும்!

4. மெய்வாழ்வின் காலம் வர
ப்ரயாசப்படுவோம்
நன்னெறி தவறாமல்
முன்சென்று தேறுவோம்.
தீயோரும் குணமாற
எப்போதும் முயல்வோம்.
ராஜரீக நல்ல காலம் நோக்குவோம்!

**34. 'To God be the glory; Great things He has done'**

**மெய்த்தேவனைத் துதி; பெரு நன்மை செய்தார்**
குமாரனைத் தந்துன்னையே நேசித்தார்.
உன் பாவத்துக்காய் யேசுவே மரித்தார்.
நீ மோட்சத்தில் சேர ஆருயிர் தந்தார்.

**பல்லவி**

போற்றுவோம்! போற்றுவோம்! ஜீவநாயவர்
நம்புவோம்: நம்புவோம்! லோக ரக்ஷகரை.
இம்மீட்பரின் மூலம் நற்கதியுண்டாம்.
பிதாவின் சமுகம் கண்டடையலாம்.

2. சம்பூரண மீட்பைச் சம்பாதித்தனர்.
நல்லாசை உள்ளோர்க்கு ஈவேன் என்றனர்.
எப்பாவியானாலும் விஸ்வாசம் வைத்தால்
அந்நேரமே மன்னிப் புண்டாம் யேசுவால்.
போற்றுவோம் மி.

3. பேரன்பின் சொரூபி! மெய்த் தாசருக்கே
ஒப்பற்ற சந்தோஷத்தை அளித்தீரே.
ஆனாலும் பேரின்பத்திற் சேரும் போதோ
உண்டாகும் சந்துஷ்டிக்கு வரம்புண்டோ?
போற்றுவோம் மி,

**35. 'Blessed be the Fountain of Blood' (113)**

**சீரில்லாத பாபிஷ்டரே!**
யேசுநாதர் மரித்தால்
பாவதோஷம் தீர்ந்திடுமே
ஏகபலியின் ரத்தத்தினால்
நெறிதப்பிப் போவதினால்
நிருமூட நீசரானோம்,
மாசில்லாத ரத்தத்தினால்
வெளேரென்று தூய்தாகுவோம்.

**பல்லவி**

வெண்மையாகுவோம்
வெண்மையாகுவோம்
மாசில்லாத ரத்தத்தினால்
வெளெரென்று தூய்தாகுவோம்.

2. மோக்ஷலோக நாயகரே
தாழ்மையோடு மாந்தனானார்.
ஒப்பில்லாத மா நேசரே
முட்கிரீடம் சூட்டப்பட்டார்!
ரட்சை செய்தனராதலால்
நன்றி நிறைத்தேயிருப்போம்.
மாசில்லாத ரத்தத்தினால்
வெளேரென்று தூய்தாகுவோம்.

3. குணசிந்தை தீயதெல்லாம்
பக்தி சுத்த சூனியமே
தீவினை ரத்தாம்பரமாம்;
சுத்திசெய்வார் ஈண்டில்லையே
அருள்வாக்கை நம்புவதால்
யேசுவண்டை சேர்ந்திடுவோம்.
மாசில்லாத ரத்தத்தினால்
வெளேரென்று தூய்தாகுவோம்.

அட்டவணை

## 36. 'Have you been to Jesus for the cleansing power?' (379)

**பரிசுத்தம்பெற வந்திட்டீர்களா**
ஒப்பில்லாத் திரு ஸ்நானத்தினால்?
பாவதோஷம் நீங்க நம்பினீர்களா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்?

**பல்லவி**

மாசில்லா – சுத்தமா?
திருப் புண்ணிய தீர்த்தத்தினால்,
குற்றம் நீங்கிவிடக் குணம் மாறிற்றா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்.

2. பரலோக சிந்தை அணிந்தீர்களா
வல்லமீட்பர் தயாளத்தினால்
மறு ஜன்ம குணமடைந்தீர்களா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்?

3. மணவாளன் வரக் களிப்பீர்களா
தூய நதியின் ஸ்நானத்தினால்
மோட்ச கரை ஏறிச் சுகிப்பீர்களா
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்?

4. மாசுகரை நீங்கும், நீசப்பாவியே!
சுத்த ரத்தத்தின் சக்தியினால்,
முத்திப்பேறுண்டாகும், குற்றவாளியே!
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்.

## 37. 'When I survey the wondrous Cross' (115)

**என் அருள் நாதா! யேசுவே!**
சிலுவைக் காட்சி பார்க்கையில்,
பூலோக மேன்மை நஷ்டமே
என்றுணர்ந்தேன் என் உள்ளத்தில்.

2. என் மீட்பர் சிலுவை அல்லால்
வேறெதை நான் பாராட்டுவேன்
சிற்றின்பம் யாவும் அதினால்
தகாததென்று தள்ளுவேன்.

3. கை, தலை, காலிலும் இதோ!
பேரன்பும் துன்பும் கலந்தே
பாய்ந்தோடும் காட்சிபோலுண்டோ?
முட்கிரீட மும் ஒப்பற்றதே!

4. சராசரங்கள் அனைத்தும்
அவ்வன்புக்கு எம்மாத்திரம்!
என் ஜீவன், சுகம் செல்வமும்
என் நேசருக்குப் பாத்தியம்.

5. மாந்தர்க்கு மீட்பைக் கஸ்தியால்
சம்பாதித் தீந்த யேசுவே!
உமக்கு என்றும் தாசரால்
மா ஸ்தோத்திரம் உண்டாகவே.

*– சத்தியவாசகம் பண்டிதர்*

## 38. 'Far, for away, in heathen darkness dwelling?' (1090)

**கோடான கோடிக் கணக்கான மாந்தர்**
ஞானமில்லாமல் மாண்டுபோகிறார்
மெய்ஞானமுற்ற கூட்டத்தாரில் யாவர்
தீவிரித்தோடி மீட்பைக் கூறுவார்?

**பல்லவி**

ராஜாதி ராஜன் அவரே!
ராஜாதி ராஜன் அவரே!
சுவிசேஷங் கூற எங்கும் விரைந்தோடிச்
சந்தோஷமாய் செல்வோமே.

2. பூலோகவாசல் திறவுண்டதெங்கும்;
தடைகள் யாவும் நீங்கலாயிற்றே.
தீவிரிப்போம் ஒரே தீர்மானத்தோறும்
பாவவிநாசங் கூறிக்காட்டவே.

3. ஏன் சாகுவீர் என்றேசு கேட்கிறாரே;
ஏன் சாகுவீர் என்றிசைந்துரைப்போம்,
மன்னுயிர் காக்க ஜீவன் துறந்தாரே,
சுவ விசேஷம் எங்கும் கூறுவோம்.

4. தேவாவியால் எத்தேச ஜாதியாரும்
யேசுவின் பாதம் பணிவார்களாம்.
கருணைபெற்ற கூட்டத்தாரெல்லாரும்
ஒப்பற்ற நாமம் பாடுவார்களாம்.

## 39. "Praise Him! Praise Him! Jesus our blessed Redeemer" (208)

**போற்றும்! போற்றும்! புண்ணிய நாதரைப் போற்றும்!**
வானோர் கூடிப் பாடவும் இன்பமாய்,–
பாரிலேயும் நாமசங்கீர்த்தனஞ் செய்ய
மாந்தர் யாரும், வாரும் ஆனந்தமாய்.
நேசமேய்ப்பன் கரத்தில் ஏந்துமாறு
யேசுநாதர் நம்மையும் தாங்குவார்.
போற்றும்! போற்றும்! தெவகுமாரனைப் போற்றும்!
பாதுகாத்து நித்தமும் போஷிப்பார்.

2. போற்றும்! போற்றும்! புண்ணியநாதரைப் போற்றும்!
பாவம் போக்கப் பாரினில் ஜென்மித்தார்,
பாடுபட்டுப் பிராணத தியாகமுமாகி
வானலோக வாசலைத் திறந்தார்.
மா கர்த்தாவே! ஸ்தோத்திரம் என்றும் என்றும்!
வாழ்க, வாழ்க! ஜெகத்து ரட்சகா!
அருள்நாதா, மாசணுகா பரஞ்சோதி!
வல்ல தேவா! கருணை நாயகா!

3. போற்றும்! போற்றும்! புண்ணியநாதரைப் போற்றும்!
விண்ணும் மண்ணும் இசைந்து பாடவும்,
போற்றும்! போற்றும்! மீட்பர் மகத்துவமாக
ஆட்சி செய்வார் நித்திய காலமும்
ஏக ராஜா! மாட்சிமையோடு வந்து
யேசு ஸ்வாமி! பூமியில் ஆளுமேன்!
லோகமெங்கும் நீதியின் செங்கோலை ஓச்சி
ஜோதியாகப் பாலனம் பண்ணுமேன்!

## 40. "He is coming the Man of Sorrows," (172)

**வருவாரே! தாவீதின் மைந்தர்:**
வெற்றி வேந்தனானார்.
வானமேகங்கள் மீது வந்து
அரசாட்சி செய்வார்.

**பல்லவி**

அல்லேலூயா! அல்லேலூயா!
வரவே வருவார்!
தாசர் யாவரும் புடைசூடி
ராஜரீகஞ் செய்வார்.

2. வருவாரே! தயாள மீட்பர்!
பாடு பட்டவரே
சர்வ மாட்சிமை மேன்மையோடும்
ஆளுவார் என்றுமே.

3. வருவாரே! அனாதி தேவன்;
ராஜா! வாழ்க! என்போம்.
அருள்ஜோதி ப்ரகாசம் வீச,
போற்றி வணங்குவோம்.

4. வருவாரே! சபாபதி;
பக்தர் யாவரையும்
நானா திசையினின்று கூட்டி,
சேர்த்து வாழ்விக்கவும்.

**41. 'Jesus is tenderly calling thee home' (396)**

**பாவி! உன் மீட்பர் கரிசனையாய்**
அழைக்கிறார்! அழைக்கிறார்!
அலைந்து திரிந்து ஏன் கெடுவாய்?
யேசுவின் ரட்சிப்பைப்பார்!

**பல்லவி**

அழைக்கிறார்! அழைக்கிறார்!
விரும்பி, வருந்தி உந்தனை அழைக்கிறார்!

2. இளைத்தும் தவித்தும் போனவனை
அழைக்கிறார்! அழைக்கிறார்!
நம்பிக்கையோடவர் சரணத்தை
சேருவாய்; தள்ளமாட்டார்.

3. தாமதமின்றி இந்நேரத்தினில்,
வந்திடுவாய்! வந்திடுவாய்!
பாவமுமற உன் நெஞ்சத்தினில்
வாழ்வையும் பெற்றிடுவாய்.

4. விரும்பி வருந்தி அழைக்கிறார்
ஓடியே வா! ஓடியே வா!
வந்திடுவோரைச் சந்தோஷிப்பிப்பார்.
உடனே! உடனே! வா!

**42. "Jesus my Saviour, to Bethlehem came" (40)**

**யேசு என் மீட்பர் சண்டாளருக்காய்**
பூமியில் பிறந்தார் பாலகனாய்
நீசமா பாவியைக் கருணையாய்
தேடிவந்தார், வந்தார்.

**பல்லவி**

தேடிவந்தார், வந்தார்.
தேடிவந்தார், வந்தார்.
நீசமா பாவியைக் கருணையாய்
தேடிவந்தார், வந்தார்.

2. பாவ மா கடனைத் தீர்த்துப்போட்டார்,
தீவினை நீக்கவும் பாடுபட்டார்.
யேசுவைப்போல், வல்ல ரக்ஷகர் யார்?
உயிர் தந்தார், தந்தார்.

**பல்லவி**

யேசுவைப்போல் வல்ல ரக்ஷகர் யார்?
உயிர் தந்தார், தந்தார்.

3. சிறியேன் பாவத்தின் மாய்கையினால்,
புத்தியில்லாமலும் அலையுங்கால்,
நீசனை நினைத்து நேசித்ததால்
ரட்சை செய்தார், செய்தார்.

**பல்லவி**

நீசனை நினைத்து நேசித்ததால்
ரட்சை செய்தார், செய்தார்.

4. யேசு என் மீட்பர் வந்தருளுவார்.
வானத்தினின்றவர் இறங்குவார்.
மாட்சிமையோடென்னைச்சேர்த்துக் கொள்வார்!
வாழச்செய்வார், செய்வார்.

**பல்லவி**

மாட்சிமையோடென்னைச்சேர்த்துக்கொள்வார்!
வாழச்செய்வார், செய்வார்.

**43. "Out of my bondage sorrow and night." (490)**

**சிறையின் கஷ்டம் கசப்பிலும்**
நின்றுவந்தேன்! நீங்கிவந்தேன்!
முழு ஸ்வாதீனம் அடையவும்
ரட்சகரே! வந்தேன்.
பிணியினின்று சுகத்துக்காய்,
வறுமை நீங்கச் செல்வத்துக்காய்.
பாவத்தைவிட்டு ஆத்திரமாய்
ரட்சகரே! வந்தேன்.

2. இழிவு நஷ்டம் தவறினால்
நின்று வந்தேன்! நீங்கிவந்தேன்!
ரட்சிப்பின் லாபம் அடையவம்
ரட்சகதே! வந்தேன்.
துன்பத்தைவிட்டு இன்பத்துக்காய்,
துயரத்தைவிட்டு சாந்தத்துக்காய்,
இகழ்ச்சி நின்று மகிழ்ச்சிக்காய்,
ரட்சகரே! வந்தேன்.

3. மருளுகின்ற ஸ்திதியிலும்
நின்றுவந்தேன்! நீங்கி வந்தேன்
தேவரீர் சித்தம் அறியவும்
ரட்சகரே! வந்தேன்.
ஆபத்தினின்று சம்பத்தையும்,
தாழ்வினை விட்டு வாழ்வினையும்,
கண்டடைவேன் இந்நேரத்திலும்,
ரட்சகரே! வந்தேன்.

4. மரணக்கொடி பயத்திலும்
நின்றுவந்தேன்! நீங்கி வந்தேன்
நேசரின் வீட்டில் மகிழவும்
ரட்சகரே! வந்தேன்!
நாசத்தைவிட்டு ஜீவனுக்காய்,
மோசத்தினின்று மோட்சத்துக்காய்,
திருச்சமுகத் தின்பத்துக்காய்
ரட்சகதே! வந்தேன்.

**44. "God be with you till we meet again!" (298)**

**சொற்பக் காலம் பிரிந்தாலும் – பார்!**
பின்பு ஏக சபையாக
கூடுவோம் ஆனந்தமாக.
அது மட்டும் கர்த்தர் தாங்குவார்.

**பல்லவி**

கூடுவோம்... கூடுவோம்...
யேசுவோடு வாழுவோம்;
கூடுவோம்... கூடுவோம்
அதுமட்டும் தேவன் தாங்குவார்.

2. அது மட்டும் தேவன் தாங்குவார்;
மிக்க ஞானத்தால் நடத்தி
மோசமின்றியும் காப்பாற்றி,
அதுமட்டும் தேவன் தாங்குவார்.

3. அது மட்டும் தேவன் தாங்குவார்
சிறகாலே மூடிக்காத்து,
மன்னா தந்து போஷிப்பித்து,
அது மட்டும் தேவன் தாங்குவார்.

4. அது மட்டும் தேவன் தாங்குவார்;
துன்பம் துக்கம் நேரிட்டாலே,
கையில் ஏந்தி, அன்பினாலே
அது மட்டும் தேவன் தாங்குவார்.

5. அது மட்டும் தேவன் தாங்குவார்;
ஜெயக்கொடி பறந்தாடும்;
சாவும் தோற்றுப் பறந்தோடும்
அது மட்டும் தேவன் தாங்குவார்.

**45. "Come unto me: it is the Saviour's voice!" (424)**

**அன்பின் சொரூபி யேசு நிற்கிறார்**
என்னண்டை வா! என்றன்பாய் அழைப்பார்
'தவித்துப்போன பாவி! சோர்வதேன்?'
என்னண்டை வா! நான் ஆற்றித்தேற்றுவேன்.

**பல்லவி**

என்னண்டை வா! என்னண்டை வா!
என்னண்டை வா! நான் ஆற்றித்தேற்றுவேன்
ஆற்றித்தேற்றுவேன்... ஆற்றித்தேற்றுவேன்.

2. துன்பத்தினால் பாடுண்ட நெஞ்சனே!
உந்தன் விசாரம் நீக்க யேசுவே
நின்றழைப்பார் இப்பாடும் நோவும் ஏன்?
என்னண்டை வா! நான் வாழச் செய்குவேன்.

**பல்லவி**

என்னண்டை வா!... என்னண்டை வா!
என்னண்டை வா! நான் வாழச்செய்குவேன்
வாழச்செய்குவேன்... வாழச்செய்குவேன்

3. நிர் மூட பாவி! சாவுக்கேதுவாய்
துர்க்கிரியை செய்து, திகில் அடைந்தாய்;
உன் பயம் நீங்கிச் சீருமாக்குவேன்,
என்னண்டை வா நான் ஜீவன் ஈகுவேன்.

**பல்லவி**

என்னண்டை வா... என்னண்டை வா!
என்னண்டை வா! நான் ஜீவன் ஈகுவேன்
ஜீவன் ஈகுவேன், ஜீவன் ஈகுவேன்

4. ஆறுதல், வாழ்வு, ஜீவன், மூன்றையும்
அப்பாலே அன்று, ஈண்டும் இப்பவும்
தயாளர் தந்து, ஏற்ற காலத்தில்
பேரின்பம் ஈவார் மோட்ச வீட்டினில்,

**பல்லவி**

என்னண்டை வா!... என்னண்டை வா!
என்னண்டை வா! நான் ஆற்றித்தேற்றுவேன்
வாழச் செய்குவேன்... ஜீவன் ஈகுவேன்

## 46. " There shall be showers of blessing," (306)

**"அருள் ஏராளமாய் பெய்யும்"**
உறுதி வாக்கிதுவே,
ஆறுதல் தேறுதல் செய்யும்
சபையை உயிர்ப்பிக்குமே.

**பல்லவி**

"அருள் ஏராளம்
அருள் அவசியமே;
அற்பமாய்ச் சொற்பமாயல்ல
திரளாய்ப் பெய்யட்டுமே,

2. "அருள் ஏராளமாய்ப் பெய்யும்"
மேக மந்தாரமுண்டாம்;
காடான நிலத்திலேயும்
செழிப்பும் பூரிப்புமாம்
அருள் ஏராளம் மி.

3. "அருள் ஏராளமாய் பெய்யும்"
யேசு! வந்தருளுமேன்!
இங்குள்ள கூட்டத்திலேயும்
கிரியை செய்தருளுமேன்!
அருள் ஏராளம். மி.

4. “அருள் ஏராளமாயப் பெய்யும்”
பொழியும் இச்சணமே!
அருளின் மாரியைத் தாரும்
ஜீவ தயாபரரே!
அருள் ஏராளம். மி.

**47. "Sleep on beloved, sleep and take thy rest" (1041)**

**மெய்ப் பக்தனே! நீ நித்திரை செய்கிறாய்,**
மா நேசர் மார்பில் சாய்ந்து சுகிப்பாய்;
பேரின்பக் கரை ஏறிக் களிப்பாய்;
துயில்வாய்! துயில்வாய்! துயில்வாய்!

2. ஓர் சிசுபோல மிகச் சாந்தமாய்
கேடணுகாமல் துயிலுகிறார்;
எப்பாடும் தீங்கும் என்றும் அடையாய்,
துயில்வாய்! துயில்வாய்! துயில்வாய்!

3. பாவந்தகாரம் பறந்தோடவும்,
இப்பூவின் மாய்கை தீருமளவும்,
மாசுடரொளி! வீசும் வரைக்கும்
துயில்வாய்! துயில்வாய்! துயில்வாய்!

4. எக்காளச் சத்தம் வானில் கேட்கவும்,
மெய்ப்பக்தர் யாரும் உயிர்த்தெழவும்,
மா வல்ல தேவன் வருமளவும்,
துயில்வாய்! துயில்வாய்! துயில்வாய்!

5. தெய்வீக சாயல் உன்தன் ஆவியில்
மாசணுகாமல் துலங்குகையில்,
பொற் க்ரீடஞ்சூடி ஆளும்வரையில்
துயில்வாய்! துயில்வாய்! துயில்வாய்!

6. ஆ! நேசனே! நல்நித்திரை அடைந்தாய்,
மா சொற்ப காலம் நீங்கியிருப்பாய்.
அப்பாலே யேசுவோடு வருவாய்.
துயில்வாய்! துயில்வாய்! துயில்வாய்!

7. மா ஜோதி வீசும் வாசஸ்தலத்தில்
மேலோக நாதர் சந்நிதானத்தில்,
எல்லோரும் கூடி வாழும் வரையில்
துயில்வாய்! துயில்வாய்! துயில்வாய்!

## 48. 'There's a royal banner given for display' (675)

**ஜெய ராஜ கொடி ஏற்றிக்காட்டியே**
யுத்தஞ் செய்யச் செல்லுவோம்;
வெற்றிமாலை சூடி ஜெயம்பெறவே
பூரிப்போடு பாடுவோம்

**பல்லவி**

செல்லுவோம், வெல்லுவோம்
நல் மீட்பர் நாமம் மூலமாய்.
வெற்றி சிறப்பார், ஆளுவார்
பூமி எங்கும் ஜோதியாய்.

2. எதிர்சேனை சீறிப் பாய்ந்து வரினும்
ராஜகொடி காட்டுவோம்;
திரள் கூட்டமே போராட்டஞ் செய்யினும்
வெற்றி வேந்தராகுவோம்.

3. எந்தச் தேச ஜாதி பாஷைக்காரரும்
சுவிசேஷங் கேட்பதால்,
யேசுநாதர் மாண்பாய் ஆளும் காலமும்
மா சமீபமானதால்.

4. அந்த நல்ல காலம் வந்தவுடன்
ராஜரீகம் பண்ணுவார்;
அவபக்தி யாவும் ஒழிந்திடவே
நீதிமுறை நாட்டுவார்.

**49. "Hark! my soul, it is the Lord!" 7's (365)**

**பாவி! கேள்! உன் ஆண்டவர்,**
அறையுண்ட ரட்சகர்
கேட்கிறார், " என் மகனே,
அன்புண்டோ என் பேரிலே?"

2. "நீக்கினேன் உன் குற்றத்தை,
கட்டினேன் உன் காயத்தை,
தேடிப்பார்த்து ரக்ஷித்தேன்,
ஒளி வீசப்பண்ணினேன்".

3. "தாயின் மிக்க பாசமும்
ஆபத்தாலே குன்றினும்
குன்றமாட்டா தென்றுமே
ஒப்பில்லா என் நேசமே."

4. "எனதன்பின் பெருக்கும்
ஆழம் நீளம் உயரமும்
சொல்லி முடியாது, பார்!
என்னைப் போன்ற நேசன் ஆர்?"

5. "திவ்ய ரூபம் தரிப்பாய்,
என்னோ டரசாளுவாய்
ஆதலால் சொல் மகனே!
அன்புண்டோ என் பேரிலே!"

6. "யேசுவே! என் பக்தியும்
அன்பும் சொற்பமாயினும்,
உம்மையே நான் பற்றினேன்;
அன்பின் ஸ்வாலை ஏற்றுமேன்!"

**50. "From Greenlan's icy mountains". (1070)**

**இமால்ய மலை யேறி**
தேசாந்தம் நோக்குமேன்!
வங்காளக் கடல் தாண்டி,
மேற்றிசை வாருமேன்!
இத்தேசத்தா ரெல்லாரும்
அஞ்ஞான பாசத்தால்
கட்டுண்டுபோனார், பாரும்!
மெய்யறிவின்மையால்,

2. மா கங்கா, சிந்து தீரம்,
காவேரிப் போக்குகள்
ராமேஸ்வரம், குற்றாலம்,
கண்கொள்ளும் காட்சிகள்
ஆனாலங்குள்ள யாரும்
வீண் பக்திக்காரரே!
அவர்கள் ஸ்திதி முற்றும்
நிர்பந்தமானதே.

3. இச்செல்வ தேசம் எங்கும்
மா செழிப்பாயினும்,
நற் புஷ்பச் செடி யாவும்
சுகந்தம் வீசினும்
ஐயோ! தீயோரின் நெஞ்சு
துர்க்கந்த முற்றதால்
பாதாளத் தீயில் வீழ்ந்து
மாழ்வாரே பாவத்தால்.

4. நாஸ்திகம், லோக ஞானம்
வீண்பக்தி, பூஜையும்;
புராண விசுவாசம்,
இஸ்லாம், வேதாந்தமும்
நிர்மூலமாக்கி நல்ல
ப்ரகாசம் காட்டுவீர்,
கர்த்தாவே! நீரே வல்ல
மெய்வேதம் ஸ்தாபிப்பீர்.

5. ஐரோப்பா ஆசியாவும்
ஆப்ரிக்கா கண்டமும்,
எத்திசை தேசம் யாவும்
பூலோகம் அனைத்தும்
இம்மானுவேலைச்சேரும்
சுதந்த்ர சொந்தமாய்
மெய்மார்க்கம் வளர்ந்தோங்கும்
மகா ப்ரபல்யமாய்.

6. யேசுவினாலுண்டான
நற்செய்தி கூறுவோம்!
பேரன்பின் மகத்தான
மெய்ச்சுடர் காட்டுவோம்.
பூலோகமெங்குமாக
பேரொளி வீசவே,
நல் மீட்பர் ராஜாவாக
வந்தரசாள்வாரே.

## 51. "O word of words the sweetest." (425)

**அனாதி நித்திய நேசர்**
அன்போடு நிற்கிறார்;
மா பரிதாபங்காட்டி
வாக்கருளுகின்றார்.
'எப்பாவப் பாரமேனும்
இப்போது நீக்குவேன்.
நான் இளைப்பாறல் தந்து,
சந்தோஷமாக்குவேன்.

**பல்லவி**

'வாரும்! வாரும்! என்னிடம்
வாரும்! வாரும் என்னிடம்
பாரஞ் சுமந்தோரே!
வாரும் வாருமேன்!
வாரும்! வாரும்! என்னிடம்
வாரும்! வாரும்! என்னிடம்
பாரஞ் சுமந்தோரே!
வாரும் வாருமேன்.

2. நல் நேசர் அருள் வாக்கை.
நம்பாமல் போவானேன்!
மெய் இளைப்பாறலின்றி
வீணாகச் சோர்வதேன்?
பொய் உரையாத தேவன்
இவ்வாறு நிற்கையில்
அஞ்சாமல் வந்து சேரும்,
பாதார விந்தத்தில்.

3. அபாத்திர ரானாலும்
தள்ளாமல் சேர்க்கிறார்.
பொல்லார் தீயோர், எல்லோரும்
வந்தாலும் ரட்சிப்பார்.
ஓ, தாமதஞ் செய்யாமல்,
இந்நல்ல நேரத்தில்
மெய்வாழ்வைப் பெற்றுக்கொள்ளும்
மா நேசரிடத்தில்.

## 52. "Sinners Jesus will receive" (390)

**கெட்டுப்போன மாந்தரை**
யேசு ஏற்றுக்கொள்ளுவார்.
பாவ ஆத்துமாக்களை
குணமாக்கி ரட்சிப்பார்.

**பல்லவி**

நல்ல செய்தி! கேளுமேன்!
யேசு ஏற்றுக்கொள்ளுவார்
நம்பி வாரும்! வாருமேன்.
தள்ளிப்போடவே மாட்டார்!

2. “இளைப்பாறல் தருவேன்,
நம்பி வாரும்” என்கிறார்,
யாரானுலும் வாருமேன்!
பாவப் பாரம் நீக்குவார்.

3. மாசில்லாத ரத்தத்தால்
சர்வ சுத்தமாக்குவார்.
வல்ல தூய ஆவியால்
தீய ஸ்பாவம் மாற்றுவார்.

4. இந்த ஏற்ற நேரத்தில்
வந்து சேரக்கடவீர்
புண்ணிய நாதர் பாதத்தில்
மீட்பும் வாழ்வும் பெறுவீர்.

## 53. 'We have heard the joyful sound Jesus saves' (1079)

**நல்லசெய்தி! யேசுவை**
நோக்கிப்பார்! ரட்சிப்பார்!
நம்பிவந்து, அவரை
நோக்கிப்பார், ரட்சிப்பார்!
எந்தப் பாவியாயினும்
தள்ளமாட்டேன் என்கிறார்.
துரோகஞ் செய்தபோதிலும்
நோக்கிப்பார்! ரட்சிப்பார்!

2. எங்கும் செய்தி சொல்லுவோம்,
நோக்கிப்பார்! ரட்சிப்பார்!
தேசா தேசம் கூறுவோம்
நோக்கிப்பார்! ரட்சிப்பார்!
எந்த நாடு தீவிலும்
யேசு காத்து நிற்கிறார்.
மூடன் நீசன் ஆகிலும்
நோக்கிப்பார்! ரட்சிப்பார்!

3. இன்னும் கேள்! மா நேசராம்
யேசுவே காக்கிறார்.
நம்பும் பக்தரையெல்லாம்
காக்கிறார்! காக்கிறார்!
சற்றும் தவறாமலும்
கையில் ஏந்திக்கொள்ளுவார்,
கேடுபாடில்லாமலும்
காக்கிறார்! காக்கிறார்.

4. சுவிசேஷம் இதுவே!
காக்கிறார்! காக்கிறார்!
பாவம் நீங்கி, பின்னுமே
காக்கிறார்! காக்கிறார்!
மோட்சம் சேருமளவும்
தாங்கிக்கொண்டே இருப்பார்.
தீமையைச் செய்யாமலும்
காக்கிறார்! காக்கிறார்!

## 54. "Lord Jesus, I long to be perfectly whole" (569)

**என் அருமை ரட்சகா! கண்ணோக்குமேன்!**
சம்பூர்ண ரட்சிப்பை நாடுகிறேன்.
என் பாவங்கள் யாவையும் வெறுக்கிறேன்.
நீர் கழுவும்! முழுதும் வெண்மையாவேன்.

**பல்லவி**

வெண்மையாவேன்!
நான் வெண்மையாவேன்!
நீர் கழுவும்! முழுவதும் வெண்மையாவேன்.

2. என் அருமை ரட்சகா! இரங்குவீர்!
எப்பாவமும் நீங்கச் சுத்தாங்கம் செய்வீர்.
உம் ரத்தமே கதி என்றண்டிக்கொண்டேன்.
நீர் கழுவும்! முழுதும் வெண்மையாவேன்.

3. என் அருமை ரட்சகா! முழுதுமாய்
வீண் கிரீயைகள் ஒழித்து, நம்பிக்கையாய்
நற்பாதகத்தில் எந்தனைப் படைக்கிறேன்.
நீர் கழுவும்! முழுதும் வெண்மையாவேன்.

4. என் அருமை ரட்சகா தள்ளமாட்டீர்.
துர்குணத்தை மாற்றியே புதுப்பிப்பீர்.
எப்போதும் காப்பாற்றுவீர்! நம்புகிறேன்!
நீர் கழுவும்! முழுதும் வெண்மையாவேன்.

## 55. "Pass me not O gentle Saviour" (488)

**யேசு ஸ்வாமி அருள் நாதா!**
கெஞ்சிக் கேட்கிறேன்;
பாவியேனைக் கைவிடாமல்,
சேர்த்துக்கொள்ளுமேன்.

**பல்லவி**

இயேசு ஸ்வாமி!
கெஞ்சிக் கேட்கிறேன்.
பாவியேனைக் கைவிடாமல்,
சேர்த்துக் கொள்ளுமேன்.

2. கெஞ்சினோர் அநேகர் பேரில்
தயை காட்டினீர்
எந்த நீசர் அண்டினாலும்
தள்ளவே மாட்டீர்.

3. தீய குணம் கிரியை யாவும்
முற்றும் வெறுத்தேன்.
நீரே தஞ்சமென்று நம்பி
வந்து நிற்கிறேன்.

4. தூய ரத்ததாலே என்னை
சுத்தமாக்குவீர்.
வல்ல ஆவியால் எந்நாளும்
காத்து ஆளுவீர்.

**56. "Lord, I hear of showers of blessing". (485)**

**அருள் மாரி எங்குமாக**
பெய்ய; அடியேனையும்,
கர்த்தரே; நீர் நேசமாக
சந்தித்தாசீர்வதியும்,

என்னையும் என்னையும்
சந்தித்தாசீர்வதியும்.

2. என் பிதாவே! பாவியேனை
கைவிடாமல் நோக்குமேன்,
திக்கில்லா இவ்வேழையேனை
அன்பாய்ச் சேர்த்துக்கொள்ளுமேன்.

என்னையும், என்னையும்
அன்பாய்ச் சேர்த்துக் கொள்ளுமேன்.

3. யேசுவே! நீர் கைவிடாமல்,
என்தன் பாவம் நீக்கிடும்.
ரத்தத்தாலே மாசில்லாமல்
சுத்தமாக்கி ரட்சியும்

என்னையும், என்னையும்
சுத்தமாக்கி ரட்சியும்

4. தூய ஆவி! கைவிடாமல்
என்னை ஆட்கொண்டருளும்,
பாதை காட்டி, கேடில்லாமல்
என்றும் காத்துத் தேற்றிடும்

என்னையும், என்னையும்
என்றும் காத்துத் தேற்றிடும்.

**57. 'O Christ, in Thee my soul bath found.'**

**உம்மாலேயன்றி, ரட்சகா!**
நான் நன்மை காண்கிலேன்,
மெய்ச்சமாதானம் இன்பமும்
வெறெங்கும் பெற்றிலேன்.

**பல்லவி**

வெறென்றினாலும் ரட்சகா!
மெய்ப்பாக்யம் அடையேன்.
உம்மாலேதான், என் ஆண்டவா!
சந்தோஷமாகிறேன்.

2. பேரன்பை உணராமலே
மெய்ப்பாக்யம் நாடினேன்.
நான் ஆவலோடே தேடியும்
ஏமாறிப் போயினேன்.

3. பூலோகப் பொருள் இன்பத்தைப்
பின்பற்றிப் போயினேன்.
சற்றேனும் அற்பவாழ்வினால்
நான் திருப்தியாகிலேன்.

4. இப்போதோ உந்தன் ரட்சிப்பைக்
கண்டிளைப்பாறினேன்.
ஆனந்தம் பொங்கி இன்பமாய்
நான் பாடிப்போற்றுவேன்.

**58. 'Saviour, like a shepherd lead us,' (1164)**

**ரட்சா பெருமானே பாரும்!**
புண்ணிய பாதம் அண்டினோம்
சுத்தமாக்கி சீரைத்தாரும்,
தேடிவந்து நிற்கிறோம்.
யேசுநாதா! யேசுநாதா!
உன்தன் சொந்தமாயினோம்.
யேசுநாதா! யேசுநாதா!
உந்தன் சொந்தமாயினோம்.

2. மேய்ப்பன்போல முந்திச்சென்றும்
பாதுகாத்தும் வருவீர்.
ஜீவத்தண்ணீரண்டை என்றும்
இளைப்பாற செய்குவீர்.
யேசுநாதா! யேசுநாதா!
மேய்ச்சல் காட்டிப் போஷிப்பீர்.
யேசுநாதா! யேசுநாதா!
மேய்ச்சல் காட்டிப் போஷிப்பீர்

3. நீதிபாதை தவறாமல்
சுகமாகக் காக்கிறீர்.
மோசம் பயமுமில்லாமல்
தங்கச்செய்து தாங்குவீர்.
யேசுநாதா! யேசுநாதா!
ஒருபோதும் கைவிடீர்.
யேசுநாதா! யேசுநாதா!
ஒருபோதும் கைவிடீர்.

4. ஜீவகால பரியந்தம்
மேய்த்தும் காத்தும் வருவீர்.
பின்பு மோட்ச பேரானந்தம்
தந்து வாழச்செய்குவீர்.
யேசுநாதா! யேசுநாதா!
ஊழிகாலம் வாழ்விப்பீர்.
யேசுநாதா! யேசுநாதா!
ஊழிகாலம் வாழ்விப்பீர்.

## 59. "More holiness give me" (582)

**மேன்மேலும் நீர் தாரும்**
நல்நம்பிக்கையும்
மெய்யாம் விசுவாசம்
அன்போடுண்மையும்.
மேன்மேலுமே ஊக்கம்
உற்சாகத்தையும்
உண்டாக்கும் மெய்ப்பக்தி
வைராக்கியமும்.

2. மேன்மேலும் நீர்தாரும்
மெய்ஞ்ஞானத்தையும்,
உம்பேரிலே சாரும்
சற்குணத்தையும்,
மேன்மேலும் உண்டாக்கும்
நற்சிந்தையையும்,
ஆரருளை நாடும்
மெய் வாஞ்சையையும்,

3. மேன்மேலும் நீர்தாரும்
சுத்தாங்கத்தையும்,
மாசற்ற உள்ளான
நல் ஸ்பாவத்தையும்,
தீப்பாவத்தை வெல்லும்
வல்லாவியையும்,
தேவாவியால் வெற்றிக்
கெம்பீரத்தையும்.

**60. “Jesus! Saviour pilot me.” (556)**

**யேசு நாதா! காக்கிறீர்,**
இளைப்பாறச் செய்கிறீர்;
மோசம் நேரிடாமலும்,
பாதம் இடறாமலும்,
என்னைத் தாங்கி நிற்கிறீர்;
நேசநாதா! காக்கிறீர்.

2. வாரி போன்ற லோகத்தில்
யாத்ரை செய்து போகையில்,
சூறைக்காற்று மோதினும்,
ஆழி கோஷ்டமாயினும்,
அமைதல் உண்டாக்குவீர்!
நேசநாதா! காக்கிறீர்.

3. சற்றுத்தூரம் செல்லவே
மோட்சகரை தோன்றுமே!
துன்பம் நீங்கி, வாழுவேன்;
இன்பம் பெற்று, போற்றுவேன்
அதுமட்டும் தாங்குவீர்
நேசநாதா! காக்கிறீர்!

**61. "I will sing of my Redeemer." (896)**

**போற்றுவேன் என் மீட்பர் அன்பை!**
ப்ராணன் தந்து ரட்சித்தார்;
பாடுபட்டு! ரத்தஞ் சிந்தி,
பாபம், சாபம் நீக்கினார்.

**பல்லவி**

போற்றும்! போற்றும் அல்லேலூயா
பூரண மீட்புண்டாக்கினார்,
தூய வல்ல ரத்தஞ் சிந்தி,
தீய பாவம் நீக்கினார்.

2. நீசப் பாவியாம் என்பேரில்
நேசம் வைத்துக் காட்டினார்;
மீட்கும் பொருளாகத் தம்மை
முற்றும் தந்தீடேற்றினார்.

3. போற்றுவேன் சம்பூரண மீட்பை!
ப்ராணநாதர் காக்கிறார்;
வாணாள் எல்லாம் பாவப்போரில்
வெற்றிகாணச் செய்கிறார்.

4. போற்றுவேன் ஆனந்தமாக!
பாடி, நன்றி செல்லுவேன்;
என்னை மீட்ட ஏசுவோடே
என்றும், தங்கி, சேவிப்பேன்

**62. “I am not ashamed to own my Lord" (883)**

**நான் உம்மைப்பற்றி, ரட்சகா!**
வீண் வெட்கம் அடையேன்;
பேரன்பைக் குறித்தாண்டவா!
நான் சாட்சி கூறுவேன்.

**பல்லவி**

சிலுவை யண்டையில்
நம்பி வந்து நிற்கையில்,
பாவப் பாரம் நீங்கி, வாழ்வடைந்தேன்;
எந்த நேரமும் எனதுள்ளத்திலும்
பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்.

2. ஆ! உந்தன் வல்ல நாமத்தை
நான் நம்பிச்சார்வதால்,
நீர் கைவிடீர்! இவ்வேழையைக்
காப்பீர் தேவாவியால்.

3. மா வல்ல வாக்கின் உண்மையைக்
கண்டுணரச் செய்தீர்;
நான் ஒப்புவித்த பொருளை
விடாமல் காக்கிறீர்.

4. நீர் மாட்சியோடு வருவீர்,
அப்போது களிப்பேன்;
ஓர் வாசஸ்தலம் கொடுப்பீர்,
மெய்ப்பாக்கியம் அடைவேன்.

**63. “Christ has for sin atonement made” (119)**

**என் பாவம் நீக்கிவிட்டனர்**
ஒப்பில்லா வல்ல மீட்பர்
மா க்ரயம் தந்து மீட்டனர்
ஒப்பில்லா வல்ல மீட்பர்

**பல்லவி**

ஒப்பில்லா வல்ல மீட்பர்!
மா நேசர்! என் நேசர்!
ஒப்பில்லா வல்ல மீட்பர்!
என் யேசுவைப் பார்!

2. மாசற்ற ரத்தஞ் சிந்தினார்
ஒப்பில்லா வல்ல மீட்பர்.
தம்மண்டை சேர்த்து அணைத்தார்
ஒப்பில்லா வல்ல மீட்பர்.

3. என் நெஞ்சைச் சுத்தமாக்கினார்
ஒப்பில்லா வல்ல மீட்பர்.
அங்கரசாட்சி செய்கிறார்
ஒப்பில்லா வல்ல மீட்பர்.

4. என் துணையாக நிற்கிறார்
ஒப்பில்லா வல்ல மீட்பர்;
எத்தீங்குமின்றிக் காக்கிறார்.
ஒப்பில்லா வல்ல மீட்பர்.

5. சுத்தாங்க ஸ்பாவம் நல்கினார்
ஒப்பில்லா வல்ல மீட்பர்.
பிசாசை வெல்லச் செய்கிறார்
ஒப்பில்லா வல்ல மீட்பர்.

6. பூலோக நேசம் நீக்கினார்
ஒப்பில்லா வல்ல மீட்பர்;
என் நெஞ்சை வசமாக்கினார்
ஒப்பில்லா வல்ல மீட்பர்.

**64. "My Jesus! I love Thee! I know Thou art mine!" (659)**

**என் யேசுவே! உம்மையே நான் நேசிக்கிறேன்;**
வேறெந்த வீண் வாழ்வையும் நாடாதிருப்பேன்;
உம்மாலே மா நன்மையை நான் கண்டடைந்தேன்;
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்.

2. இப்பாவியின் பேரில் முந்தி நேசம் வைத்தீர்;
நீர் பிராணத்தியாகஞ் செய்து மீட்டுக்கொண்டீர்;
முட் க்ரீடம் ஐங்காயமும் தியானிக்கிறேன்;
என் நாதா! மேன் மேலும் உம்மை நேசிக்கிறேன்.

3. பேரன்பின் சொரூபி! உம்மைப் போற்றுகிறேன்;
எப்போதும் உம்மண்டை தங்க வாஞ்சிக்கிறேன்;
என் ஜீவன் போனாலுங்கூட நீங்கமாட்டேன்;
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்.

4. பேரின்ப மேலோகத்தில் ஆனந்தங்கொள்வேன்;
நீடூழி உம்முகம் கண்டு ஸ்தோத்திரிப்பேன்;
எப்பாவ மில்லாமலும் நான் வாழ்த்தல் செய்வேன்
என் நாதா! மேன்மேலும் உம்மை நேசிக்கிறேன்.

**65. "Ho! reapers in the whitened harvest." (753)**

**கர்த்தாவே! பணிவிடை செய்ய**
சோராமல் இருப்பொம்;
எப்போதும் புதுப்பெலன் நாடி,
உம்பேரில் சாருவோம்.

**பல்லவி**

உம்மோடு தங்கித் தரிப்பார்
புதுபெலன் அடைவார்;
மேலே எழும்புவார்
செட்டை அடித்துப் பட்சிபோல.
நடந்தாலும் ஓடினாலும்,
ஒருபோதும் சோரார்;
நடந்தாலும் ஓடினாலும்,
ஒருபோதும் சோரார்,
நடந்தாலும் ஓடினாலும்,
ஒரு போதும் சோரார்.

2. எப்பாடு துன்பம் நேரிட்டாலும்
சகாயஞ் செய்கிறீர்!
மெய் விசுவாசம் ஸ்திரமாக்கி,
கைதாங்கி நிற்கிறீர்,

3. 'எந்நாளும் உங்களோடு கூட
நான் இருப்பேன்,' என்றீர்;
இவ்வாக்கை நம்பி, வேலை செய்வோம்;
நீர் சித்தியாக்குவீர்.

## 66. "In the shadow of His wings". (664)

**உந்தன் செட்டை நிழலில்**
இளைப்பாறலாம்
எந்தப்பாடும் துன்பும் நீங்கும்
சற்றும் அணுகாமல் நீங்கும்.
உந்தன் செட்டை நிழலில்
இளைப்பாறலாம்.
உந்தன் செட்டை நிழலில்
இளைப்பாறலாம்.

**பல்லவி**

தங்குவேன், (ஸ்வாமி)
தங்குவேன், (ஸ்வாமி)
தங்குவேன், (ஸ்வாமி)
உந்தன் செட்டை நிழலில்;
சுகிப்பேன், (ஸ்வாமி)
சுகிப்பேன், (ஸ்வாமி)
சுகிப்பேன், (ஸ்வாமி)
உந்தன் செட்டை நிழலில்.

2. உந்தன் செட்டை நிழலில்
சமாதானமாம்!
நெஞ்சின் நோவு முற்றும் ஆறும்
துன்பம் இன்பமாக மாறும்;
உந்தன் செட்டை நிழலில்
சமாதானமாம்!
உந்தன் செட்டை நிழலில்
சமாதானமாம்!

3. உந்தன் செட்டை நிழலில்
பேரானந்தமாம்!
போற்றுவேன் சந்தோஷமாக!
பாடுவேன் கெம்பீரமாக!
உந்தன் செட்டை நிழலில்
பேரானந்தமாம்,
உந்தன் செட்டை நிழலில்
பேரானந்தமாம்.

**67. 'Ring the bells of heaven! there is joy today'(650)**

**மோட்சலோக தூதர் ஸ்துதி செய்கிறார்.**
நீசப் பாவி குணப்பட்டதால்;
தேவனும் மகா சந்தோஷமாகிறார்,
மகன் மீண்டும் வந்து சேர்ந்ததால்.

**பல்லவி**

போற்றும்! போற்றும் ஏககூட்டமாய்!
போற்றும்! போற்றும் பேரானந்தமாய்
கெட்டுப்போன பாவி மீண்டும் வந்திட்டான்
குணமாறி ரட்சிப்படைந்தான்.

2. மோட்ச லோக தூதர் ஏகவாஞ்சையாய்!
ரட்சிப்பைக் கொண்டாட கூடினார்;
ரட்சா பெருமானைப் பேரானந்தமாய்
பாடிப்போற்றி வாழ்த்தி நிற்கிறார்.

3. மோட்சலோக தூதரோடு ஏகமாய்
ஸ்தோத்திர கீதம் பாடிப் போற்றுவோம்;
யேசுநாமம் ஜெயம் என்று இன்பமாய்
ஆரவாரத்தோடே வாழ்த்துவோம்.

**68.** **'Standing by a purpose true;'** **(707)**

**அந்தகார லோகத்தில்**
யுத்தஞ் செய்கிறோம்;
யேசுநாதர் பட்சத்தில்
அஞ்சாமல் நிற்கிறோம்.

தானியேலைப் போல
தைர்யங் காட்டுவோம்;
பயமின்றி ஊக்கமாய்
உம்மை பிடிப்போம்.

2. பாவச் செய்கை யாவையும்
நேரே எதிர்ப்போம்,
துன்பமே உண்டாயினும்
பின்வாங்கவே மாட்டோம்.

3. மற்றோர் நிந்தை செய்யினும்
அஞ்சித் தளரோம்;
பொல்லார் நயங்காட்டினும்
சற்றேனும் இணங்கோம்.

4. வல்ல தேவ ஆவியால்
வெற்றி சிறப்போம்;
லோகம் பாவம் அவரால்
மேற்கொண்டு ஜெயிப்போம்.

**69.** **'Sound the battle cry'** **(703)**

**வீர தீரமாய்**
நேரும் சீருமாய்
நின்று ஏகமாய்
போர் செய்வோம்;
பயமின்றியும்,
பின்வாங்காமலும்,
கீதம் பாடியும்
முன் செல்லுவோம்.

**பல்லவி**

சோம்பும் சோர்வும்
நீக்கி, வீரராக
யாரும், வாரும்!
யுத்தம் பண்ணுவோம்;
செல்லும்! வெல்லும்!
ஆரவாரமாக
யேசுநாதர் நம்பிப் போகிறோம்.

2. கொடி ஏற்றுவோம்,
காளம் ஊதுவோம்;
வாளும் வீசுவோம்,
போர்க் கோலமாய்;
கர்த்தர் தாங்குவார்,
கூடப் போகிறார்;
வெற்றி சிறப்பார்
கெம்பீரமாய்.

3. சேனைக் கர்த்தரே!
யேசு நாதரே!
தேவரீரையே
ஸ்தோத்தரிப்போம்,
உம்மால் வல்லமை!
உம்மால் மகிமை,
உம்மால் வெற்றியும்
கண்டடைவோம்.

## 70. "Must I go and empty handed?" (789)

**கரை ஏறி, உமதண்டை**
நிற்கும்போது ரக்ஷகா!
உதவாமல், பலனற்று,
வெட்கப்பட்டுப் போவேனோ?

**பல்லவி**

ஆத்மா ஒன்றும் ரக்ஷிக்காமல்
வெட்கத்தோடே ஆண்டவா!
வெறுங் கையனாக; உம்மைக்
கண்டுகொள்ளல் ஆகுமா?

2. ஆத்துமாக்கள் பேரில் வாஞ்சை
வைத்திராமல் சோம்பலாய்க்
காலங் கழித்தோர் அந்நாளில்
துக்கிப்பார் நீர்ப்பந்தராய்.

3. தேவரீர் கைதாங்க சற்றும்
சாவுக்கஞ்சி கலங்கேன்,
ஆயினும் நான் பலன் காண
உடைக்காமற் போயினேன்!

4. வாணாள் எல்லாம் வீணாளாகச்
சென்று போயிற்றே; ஐயோ!
மோசம் போனேன்! விட்ட நன்மை
அழுதாலும் வருமோ!

5. பக்தரே! உற்சாகத்தோடு
எழும்பி ப்ரகாசிப்பீர்!
ஆத்துமாக்கள் யேசுவண்டை
வந்துசேர உழைப்பீர்.

**71. "O happy day that fixed my choice". (866)**

**என் பாவம் தீர்ந்த நாளையே,**
அன்போடு எண்ணி ஜீவிப்பேன்,
அந்நாளில் பெற்ற ஈவையே
சந்தோஷமாய்க் கொண்டாடுவேன்

**பல்லவி**

இன்ப நாள்! இன்ப நாள்!
என் பாவம் தீர்ந்து போன நாள்!
பேரன்பர் என்னை ரட்சித்தார்,
சீராக்கி இன்பம் நல்கினார்;
இன்ப நாள்! இன்ப நாள்!
என் பாவம் தீர்ந்து போன நாள்!

2. இம்மானுவேல் இப்பாவியை
தம் சொந்தமாக்கிக் கொண்டனர்;
சந்தேகம் நீக்கி மன்னிப்பை
தந்தென்னை அன்பாய் சேர்த்தனர்.

3. என் உள்ளமே, உன் மீட்பரை
என்றைக்கும் சார்ந்து வாழுவாய்,
ஆருயிர் தந்த நாதரை
ஓர்காலும் விட்டு நீங்கிடாய்

4. ஆட்கொண்ட நாதா! என்தனை
நாடோறும் தத்தஞ் செய்குவேன்;
பின் மோட்ச வீட்டில் பேரன்பை
இன்னோசையாலே பாடுவேன்.

## 72. "I need Thee every hour." (477)

**எக்காலும், யேசுவே!**
சகாயராயிரும்;
அன்பான சத்தத்தால்
என் ஏக்கம் நீங்கிடும்.

**பல்லவி**

எந்நாளும் நீரே வேண்டும்,
இந்த நாளும் வேண்டும்;
நீர் என்னை நோக்கிப்பாரும்
பேரன்பரே!

2. எப்போதும், யேசுவே!
இப்பாவியோடிரும்;
தீயோனின் சோதனை
ஓயாமல் விலக்கும்.

3. எக்காலும் யேசுவே!
இக்கட்டு வாழ்விலும்
அன்பாகத் தங்குவீர்
என் நீச நெஞ்சிலும்

4. எப்போதும் யேசுவே!
இப்பேதைக்கிரங்கும்;
மெய்ஞ்ஞானம், சத்தியம்
செய்நன்றி போதியும்.

5. எக்காலும் யேசுவே!
எக்கேடும் நீக்குமேன்;
காருண்ய நாயகா!
நீர் என்னை ஆளுமேன்.

## 73. 'He leadeth me O blessed though' (542)

**என் முன்னே தேவன் போகிறார்;**
நன் மேய்ப்பராகக் காக்கிறார்;
ஓர்காலும் என்னைக் கைவிடார்;
நேர் பாதை காட்டிப் போகிறார்.

**பல்லவி**

முன் செல்கின்றார்! முன் செல்கின்றார்!
என் முன்னே சென்று போகிறார்!
நல் மேய்ப்பர் சத்தம் அறிவேன்,
அன்போடு பின்சென் றேகுவேன்.

2. கார் மேகம் வந்து மூடினும்,
சீர் ஜோதி தோன்றி வீசினும்,
என் வாழ்வு தாழ்வில் நீங்கிடார்;
என்றைக்கும் முன்னே போகிறார்.

3. மெய்ப்பாதை காட்டி! பின்செல்வேன்,
தெய்வீக கையால் தாங்குமேன்;
எவ்விக்கினம் வந்தாலும் நீர்
இவ்வேழை முன்னே போகிறீர்.

4. ஒப்பற்ற உம் காருண்யத்தால்
இப்பூமி பாடு தீருங்கால்,
நீர் சாவை வெல்லச் செய்குவீர்,
பேரின்பம் காட்டி முன் செல்வீர்.

## 74. "Heavenly Father, bless me now"

**தேவனே! கண்ணோக்குமேன்;**
ஜீவன் வேண்டி நிற்கிறேன்;
அன்பாய்ச் சேர்த்து ரட்சியும்,
என்னை ஆசீர்வதியும்.

**பல்லவி**

என்னையும், என்னையும்
என்னை ஆசீர்வதியும்.

2. நல்ல வார்த்தை சொல்லுமேன்;
வல்ல கையை நீட்டுமேன்;
வந்த ஏழையேனையே
சந்தியும் இந்நேரமே.

3. கெஞ்சிக் கேட்டு நிற்கையில்,
தஞ்சம் தேடும் எந்தனில்
ஜீவன் தந்து உயிர்ப்பியும்,
பாவம் நீக்கி ரட்சியும்.

4. உந்தன் மைந்தன் நீதியே
நம்பி வந்த பாவியை
தூயனே! நீர் தேற்றுவீர்;
தூயனே; ஆட்கொள்ளுவீர்.

**75. "Precious promise God hath given." (543)**

**வல்ல தேவன் கூறுவித்துச்**
சொல்லும் வாக்கைக் கேளுமேன்;
'உந்தன்மேல் என் கண்ணை வைத்து
என்றும் பாதை காட்டுவேன்'

**பல்லவி**

'உந்தன் மேல்' என் கண்ணை வைத்து
என்றும் பாதை காட்டுவேன்;
இன்ப மோட்சம் சேருமட்டும்
என்றும் பாதை காட்டுவேன்.

2. 'சாத்தான் மாம்சம்' லோகத்தாலும்
ஆத்மா சோர்ந்து போவதேன்?
எந்தன் ஆவி, வாக்கினாலும்
என்றும் பாதை காட்டுவேன்.

3. 'துன்பம் துக்கம் நேரிட்டாலும்'
இன்பமாக மாற்றுவேன்;
என்ன சோதனை வந்தாலும்
என்றும் பாதை காட்டுவேன்;

4. 'சாவின் பள்ளத்தாக்கிலேயும்
ஜீவ ஜோதி வீசுவேன்;
உன்னைச் சேர்த்து விண்ணிலேயும்
என்றும் பாதை காட்டுவேன்;

## 76. “Tenderly the Shepherd.” (64)

**தேடிக்கொண்டே, மேய்ப்பர்**
காட்டில் போகிறார்;
தப்பிப்போன ஆட்டைத்
தேடுகிறார்.

**பல்லவி**

தேடுகிறார் தேடுகிறார்!
மீட்பர் தம் ஆட்டைத் தேடுகிறார்!
தேடுகிறார்! தேடுகிறார்!
மீட்பர் தம் ஆட்டைத் தேடுகிறார்!

2. ஆசையோடு மாது
தூசி கூட்டினாள்
தப்பிப்போன காசைத்
தேடுகிறாள்.

3. மைந்தன் கெட்டுப்போக,
தந்தை துக்கிப்பார்
கெட்டோன் மாறக்கண்டு
கெம்பீரிப்பார்.

## 77. “I lay my sins on Jesus,” (870)

**நன் மீட்பரே! உம்மேலே**
என் பாவம் வைக்கிறேன்:
அன்புள்ள கையினாலே
என் பாரம் நீக்குமேன்;
நன் மீட்பரே! உம்மேலே
என் குற்றம் வைக்க நீர்
உம் தூயரத்தத்தாலே
விமோசனஞ் செய்வீர்.

2. நன் மீட்பரே! உம்மேலே
என் துக்கம் வைக்கிறேன்;
இப்போ திம்மானுவேலே,
எப்பாடும் நீக்குமேன்;
நன் மீட்பரே! உம்மேலே
என் தீனம் வைக்க நீர்
உம் ஞானம் செல்வத்தாலே
சம்பூரண மாக்குவீர்.

3. நன் மீட்பரே! உம்பேரில்
என் ஆத்மா சார, நீர்
சேர்ந்து உம் திவ்ய மார்பில்
சோர்பெல்லாம் நீக்குவீர்;
நேசா! இம்மானுவேலே!
யேசென்னும் நாமமும்
உகந்த தைலம்போலே
சுகந்தம் வீசிடும்.

4. நன் மீட்பரே! பாங்காக
அன்போடு சாந்தமும்
நீர் தந்தும் சாயலாக
சீராக்கி மாற்றிடும்;
நன் மீட்பரே! உம்மோடு
பின் விண்ணில் வாழுவேன்;
நீடூழி தூதர் பாட,
பாடின்றிப் பூரிப்பேன்.

## 78. "Whom have I, Lord, in heaven but Thee?" (845)

**மேலோகத்தில் என் பங்கு நீர்,**
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
மேலான நன்மை தேவரீர்,
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
நீர் பாரில் ரத்தம் சிந்தினீர்,
பேரன்பைக் காட்டி மரித்தீர்,
சீர் கெட்ட என்னை ரட்சித்தீர்;
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!

2. பூலோக மேன்மை வாஞ்சியேன்,
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
மேலோக இன்பம் நாடுவேன்,
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
இப்பாரின் வாழ்வு நில்லாதே,
தப்பாமல் வாடிப் போகுமே,
ஒப்பற்ற செல்வம் நீர், நீரே,
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!

3. நீர் ஏழையேனைக் கைவிடீர்,
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
சீராகக் காத்து ஆளுவீர்;
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
பொன், வெள்ளி, ஆஸ்தி போயினும்
துன்புற்று பாடு படினும்
என் விசுவாசம் நிலைக்கும்,
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!

4. தீயோன் விரோதஞ் செய்யினும்,
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
ஓயாமலே போராடினும்,
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
அம்மூர்க்கம் கண்டு அஞ்சிடேன்,
உம்மாலே வெற்றி சிறப்பேன்,
கெம்பீர கீதம் பாடுவேன்,
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!

5. வெஞ்சாவையும் மேற்கொள்ளுவேன்,
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
உம் நேச மார்பில் சுகிப்பேன்,
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
பேரன் பரே! கைதாங்குவீர்,
நீர் விண்ணில் சேர்த்து வாழ்விப்பீர்
ஓயாப் பேரின்பம் ஈகுவீர்,
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!

**79. "She only touched the hem of His garment."**

**ஏராளமான கூட்டத்தார் சூழ,**
ஓர் ஸ்திரீயும் வந்தனள்;
பேரன்பர் கிறிஸ்தின் வஸ்திரம் தொட,
ஆரோக்கியம் பெற்றனள்.

**பல்லவி**

உன் மீட்பர் வஸ்திரம் நீயும்
இன்றாவலாய்த் தொட்டால்,
ஆரோக்கியம் ஜீவன் பெறுவாய்
பேரன்பர் சக்தியால்.

2. அம்மங்கை நாணி அஞ்சி வந்தாலும்,
இம்மானுவேல் தொட்டாள்;
தன் மீட்பராலுண்டான மா நன்மை
நன்குணர்ந்தே நின்றாள்.

3. பேரன்பர் பார்த்து 'ரட்சிப்பைப் பெற்றாய்,
நீ அஞ்சாதே' என்றார்.
அம்மாது நெஞ்சில் மெய்ச் சமாதானம்
இம்மானுவேல் தந்தார்.

**80. "Nearer the cross, my heart can say" (859)**

**நாயனே! எந்தன் ஆத்துமா**
உம்மைக்கிட்டிச் சேரும்.
நாளுக்குநாள், என் ரட்சகா,
இன்னும் கிட்டிச்சேரும்;
தூய விலாவின் தீர்த்தத்தை,
பாய்ந்த மாசற்ற ரத்தத்தை,
காயமும் தோன்றும் பாதத்தை
இன்னும் கிட்டிச்சேரும்;
இன்னும் கிட்டிச்சேரும்.

2. இன்னும் என் உள்ளம் ஜெபத்தால்
உம்மைக் கிட்டிச்சேரும்;
மன்னாவை ஈயும் வேதத்தால்
இன்னும் கிட்டிச்சேரும்.
பாவத்தைத் தீர்த்த தூயரை,
ஜீவனை விட்ட மீட்பரை,
சாவினை வென்ற நாதரை
இன்னும் கிட்டிச்சேரும்.

3. நம்பிக்கையோடென் ஆத்துமா
இன்னும் உம்மை நாடும்;
உந்தனைக்காண நாயகா!
மேலும் மேலும் நாடும்;
யேசுவின் மா ப்ரசன்னத்தை
தாசரின் மோட்சானந்தத்தை
ஆசித்த ஜீவ க்ரீடத்தை
மேலும் மேலும் நாடும்;
மேலும் மேலும் நாடும்.

## 81. "Long in darkness we have waited." (702)

**அருள் ஜோதி தோன்றிடாமல்,**
இருள் மூடிக் கிடந்தோம்;
திக்கில்லாமல், பாவப்பற்றில்
சிக்கிக்கொண்டே யிருந்தோம்.

**பல்லவி**

வல்ல யேசுகிறிஸ்து நாதா!
நல்ல நேச மீட்பர் நீர்
பற்று, பாசம், கட்டும் முற்றும்
அற்றுப்போகப் பண்ணுவீர்.

2. பக்தி ஒன்றுமில்லை! பாரும்!
சக்தியற்றுப் போயினோம்;
ஜீவபாதையில் நில்லாமல்
தேவசித்தம் மீறினோம்.

3. யேசு நாதரே! இப்போது
நேசமாக நிற்கிறீர்;
'என்னை நம்பு, பாவம் நீக்கி
உன்னைக் காப்பேன்' என்கிறீர்.

4. நம்பி வந்து பாவ நாசா!
உந்தன் பாதம் அண்டினோம்;
தூய ரத்தம் ஓடக்கண்டு,
தீய செய்கை வெறுத்தோம்.

5. பாவச் சேற்றிலே விழாமல்
தேவரீரே காக்கிறீர்.
வல்ல ஆவியாலே என்றும்
வெல்லச் செய்து ரட்சிப்பீர்.

**82. "Rejoice! rejoice! our King is coming". (164)**

**மெய்ப்பக்தரே! நற்செய்தி கேளும்!**
மீட்பர் வந்து ஆளுவார்,
மா நீதி சூரியோதயம் தோன்றும்;
மோட்சானந்தம் நல்குவார்.

**பல்லவி**

தாசர் வாஞ்சிக்கும் அவ்வின்ப நாளில்
துன்பம் துக்கம் நீங்கிப்போம்
தேவ மைந்தன் வான மேக மீதில்
தோன்றக் கண்டு பூரிப்போம்;
மெய்ப்பக்தரே! நற்செய்தி கேளும்!
மீட்பர் வந்து ஆளுவார்!
மா நீதி சூரியோதயம் தோன்றும்,
மோட்சானந்தம் நல்குவார்.

2. கெம்பீரத்தோடு ராஜா வரக்
காத்து நின்று வாஞ்சிப்போம்;
கோடான கோடி தூதர் சூழக்
கண்டு ஆரவாரிப்போம்.

3. நாம் ஒருபோதும் தூங்கிடாமல்
நீதி செய்து ஜீவிப்போம்;
நல்நாதர் தோன்ற, பாடில்லாமல்,
நீடு வாழ்ந்து பூரிப்போம்.

## 83. "Hark! there comes a whisper". (344)

**பாவி! உந்தன் மீட்பர்,**
தேவ மைந்தனார்,
யேசு கிறிஸ்துநாதர்
பேசுகிறார்.

**பல்லவி**

'பாடுபட்டேனே,
மீட்பர் நான் நானே:
கேள்; அன்பின் சத்தம் கேள்!
கேள்! பாவி! கேள்.

2. திக்கில்லாத உந்தன்
துக்கம் ஆற்றுவேன்;
துன்பம் எல்லாம் நீக்கி,
இன்பம் ஈகுவேன்.

3. 'சஞ்சல முற்றோனே!
தஞ்சங் கொடுப்பேன்;
பாடு பாவம் போக்கி
ஈடேற்றுவேன்.

4. சேர்ந்து வந்து என்மேல்
பாரம் போடுவாய்;
இந்த நேரந்தானே
சந்தோஷிப்பாய்.

**84. "On that bright and golden morning when the Son of man shall come." (159)**

**யேசு நாதர் மாட்சியோடு மீண்டும் வந்து தோன்றுவார்**
நேச மீட்பர் மாண்பைக் கண்டு பூரிப்போம்;
நானா திசை நின்று அடியாரைக் கூட்டி வாழ்விப்பார்
சேனை சேனையாக கூடியே நிற்போம்.

**பல்லவி**

கூடுவோமே! கூடுவோமே!
கூடிப்பாடிப் போற்றுவோமே, மீட்பர் சந்நிதானத்தில்
கூடுவோமே! கூடுவோமே!
பாடிப் போற்றுவோம், பேரின்ப வீட்டினில்.

2. வாழ்நாள் சென்றபின்பு நித்ரை அடைந்தோர் கெம்பீரமாய்
ஆழி மண்ணினின்றுயிர்த்துக் கூடுவார்
தேஜசுள்ள தேகம் பெற்று அம்பரத்தில் இன்பமாய்
தூய மீட்பரண்டை கூடி வாழுவார்.

3. பின்பு மின்னும் மோட்ச ஸ்தானம் கண்டு பேரானந்தமாக
இன்ப ஜீவ ஆற்றின் ஓரம் ஜீவிப்போம்,
நண்பர், நேசர் உறவோரைச் சந்தித் தேககூட்டமாய்
விண்ணில் நித்ய காலம் வாழ்ந்து கொள்ளுவோம்.

4. இன்ப வாழ்வின் நல்ல நாள் இதோ! சமீபமாயிற்றே
மன்னர் மன்னவன் ப்ரசன்னமாகுவார்.
தீது, தீமை யாவும் நீங்கி, இந்தப் பூமி எங்குமே
நீதி சமாதானத்தோடே ஆளுவார்.

**85. The Glory Song. "When all my labours and trials are o'er." (949)**

**பொன்னகர் இன்பத்தைப் பெற்றிடுவோம்.**
துன்பமும் துக்கமும் மாறியேபோம்
நன்மை சொரூபியைத் தரிசிப்போம்,
நீடுழி காலம் பேரின்ப முண்டாம்.

**பல்லவி**

பேரின்பமாம், பூரிப்புண்டாம்,
பேரின்பமாம், பூரிப்புண்டாம்,
மேலுலகில் அவர் சந்நிதியில்
மேலான வாழ்வு, பேரின்ப முண்டாம்.

2. மாட்சிமையான காருணியத்தால்
மோட்ச ஆனந்தத்தை அடையுங்கால்,
சாட்சாத் நல் மீட்பரை நோக்குவதால்,
நீடூழி காலம் பேரின்ப முண்டாம்.

3. அன்பராம் இஷ்டரைக் கண்டுகொள்வோம்
இன்ப மா வாரியில் மூழ்கிடுவோம்,
என்றைக்கும் இயேசுவை ஸ்தோத்திரிப்போம்,
நீடூழி காலம் பேரின்ப முண்டாம்.

## 86. "The great physician now is near." (89)

**பேரன்பர் யேசு நிற்கிறார்,**
நாம் அண்டிக் கொள்வோமே;
கடாட்சமாகப் பார்க்கிறார்,
நல் நாமம் போற்றுவோமே.

**பல்லவி**

விண்ணில் மேன்மை பெற்றது;
மண்ணோர் இன்பமாகவே
பாடிப்போற்றும் நாமமே;
யேசு என்னும் நாமம்.

2. உன் பாவம் யாவும் மன்னித்தேன்;
அஞ்சாதே என்கிறாரே
சந்தேகங்கொண்டு சோர்வதேன்?
மெய்ப்பாக்கியம் ஈகிறாரே.

3. நல் மீட்பர் யாவர் பேரிலும்
கடாட்சம் வைக்கிறாரே;
தம்மண்டை சிறியோரையும்
தள்ளாமல் சேர்க்கிறாரே.

4. மா மேன்மை யேசு ஸ்வாமிக்கே
நம்மால் உண்டாவதாக
ரட்சண்ய க்ரியைக்காகவே
நாம் வாழ்த்தல் செய்வோமாக.

5. ரட்சண்ய வல்ல நாமத்தால்
விசாரம் நீங்கிப்போகும்.
அவ்வின்ப நாமம் கேட்பதால்
சந்தோஷமும் உண்டாகும்.

6. ஆனந்தமாகப் பாடுவோம்,
பேராவலோடு வாரும்!
ஏகோபித்தார வாரிப்போம்,
மெய்ப்பக்தர், தாசர் யாரும்.

7. பேரின்ப மோட்ச லோகத்தில்
மாண்பாகக் கூடுவோமே;
ரட்சண்ய நாதர் பாதத்தில்
சாஷ்டாங்கம் பண்ணுவோமே.

**87. "Lord God, the Holy Ghost." (323)**

**இவ்வேற்ற நேரத்தில்**
தேவாவி! வாருமேன்;
மா பெந்தெகோஸ்திக் கூட்டத்தில்
உண்டாகச் செய்யுமேன்.

2. மெய்வாக்கைச் சார்ந்தோராய்
எல்லோரும் கூடினோம்;
வானாக்னி தேடி, ஆவலாய்
இவ்வாறு நிற்கிறோம்.

3. மெய்ப்பக்தி ஊக்கமும்
இப்போது மூட்டுவீர்;
உள்ளன்பும் திவ்விய சக்தியும்
கடாட்சஞ் செய்குவீர்.

4. பாவந்தகாரத்தை,
மெய்ஞ்ஞான ஜோதியே!
மேன்மேலும் நீக்கி தாசரைப்
ப்ரகாசிப்பிப்பீரே.

**88. "Come, ye sinners, poor and needy."**

**சீர்கெட்டோரே! நம்பி வாரும்!**
யேசு காத்து நிற்கின்றார்;
காயங்கட்டி, ரோகம் நீக்கி
சொஸ்தமாக்கி ரட்சிப்பார்.
வல்ல நாதர்,
வல்ல நாதர்
அன்பாய் ஏற்றுக்கொள்ளுவார்.

2. திக்கற்றோரே! வாரும்! வாரும்
திவ்ய அன்பை நம்புவீர்;
பச்சாத்தாபம், விசுவாசம்
கொண்டே, வந்து சேருவீர்.
கைம்மாறின்றி,
கைம்மாறின்றி
எல்லாம் பெற்றுக் கொள்ளுவீர்.

3. ஜீவ சாட்சி வாதித்தாலும்,
பின் வாங்காமல் வாருமேன்!
புண்யநாதர் நீதி பேரில்
தாகங்கொண்டு, அண்டுமேன்!
தேவ ஆவி,
தேவ ஆவி
ஆத்ம தாகம் ஈவாரே.

4. பாவப் பாரத்தாலே நொந்து
போன ஏழை மாந்தரே!
சொந்த நீதி என்றும் வேண்டாம்;
காத்திராமல் வாருமே!
சீர் கெட்டோரை,
சீர் கெட்டோரை
மீட்க யேசு வந்தாரே.

5. அன்பின் ரூபி சோலை சென்று
ரத்த வேர்வை சிந்தினார்;
கொல்கொதாவில் பாடுபட்டு,
பாவப் பாரம் தாங்கினார்,
ஆயிற்றென்று,
ஆயிற்றென்று
சத்தமிட்டுக் கூறினார்.

6. வானமேறி, தூய ரத்தம்
காட்டி வேண்டல் செய்கிறார்;
நோக்கிப் பாரும்! நம்பி வாரும்!
சேர்த்துக் கொண்டு வாழ்விப்பார்.
இதற்கென்றே,
இதற்கென்றே
மீட்பராக ஏற்பட்டார்.

**89. “Come to Jesus, come away.”**

**யேசுவண்டை வாருமேன்!**
வராமல் தூரம் நிற்பதேன்,
ஐங்காயம் நோக்கிப் பாருமேன்,
அன்போடு நிற்கிறார்.

2. யேசு காத்து நிற்கிறார்.
கைம்மாறில்லாமல் ரட்சிப்பார்;
தள்ளாமல் சேர்த்துக் கொள்ளுவார்,
கல்வாரி நாயகர்

3. யேசு பாவம் போக்குவார்,
சுத்தாங்கத் தன்மை நல்குவார்,
எந்நேரமும் காப்பாற்றுவார்,
ஓர்காலும் கைவிடார்.

4. யேசுவண்டை இப்போதே
அஞ்சாமல் கிட்டிச் சேருமே!
தேவாவி அன்பாய் ஏவவே,
வந்தண்டிக் கொள்ளுவீர்.

5. யேசுநாதா! வந்திட்டோம்!
இப் பாவலோகம் வாஞ்சியோம்
உம்மண்டை என்றும் தங்குவோம்
நீர் மா தயாபரர்.

**90. “Jesus I will trust Thee.” (468)**

**யேசுவே! நான் உம்மைப்**
பற்றிக்கொள்ளுவேன்
ஏழைப் பாவியேனைச்
சொஸ்தமாக்குமேன்.
ஒப்பில்லாத நேசா!
ரத்தஞ் சிந்தினீர்.
திக்கற்றோரை மீட்க
ஜீவனும் விட்டீர்.

**பல்லவி**

யேசுவே! நான் உம்மை
நம்பிச் சாருவேன்,
ஏழைப் பாவியேனைச்
சொஸ்தமாக்குமேன்.

2. யேசுவே உம்மண்டை
நீசர் துஷ்டரும்
சேர்ந்தபோது, அன்பும்
மா கடாட்சமும்
காட்டி பாவம் நீக்கி,
சீருமாக்கினீர்.
பாவியைத் தள்ளாமல்
ரட்சித்தே வந்தீர்.

3. யேசுவே நான் உம்மை
நம்பியே வந்தேன்
வேத வாக்கினாலே
தைரியங் கொண்டேன்.
திவ்விய ஆவியாலும்
போதிக்கப் பெற்றேன்.
உந்தன் இன்ப சத்தம்
கேட்டானந்தித்தேன்.

4. யேசுவே! அஞ்சாமல்
நம்பி நிற்கிறேன்!
என்னை ஏற்றுக்கொண்டீர்
ஸ்தோத்ரஞ் செய்கிறேன்!
தூய ரத்தத்தோடு
திவ்ய வாக்குமே
நல் ஆதாரமாக
பற்றிக்கொண்டேனே.

**91.** **“More about Jesus would I know”** **(571)**

**யேசுவின் அன்பில் மூழ்கவும்**
நேசத்தின் ஆழம் பார்க்கவும்
இன்னமும் தீரா வாஞ்சையை
என்னில் உண்டாகுகின்றதே.

**பல்லவி**

ஆட்கொண்டவர் நேசம்,
ஈடேற்றின நேசம்
இன்னும் மேன்மேலும் வாஞ்சிப்பேன்;
உன்னத அன்பைப் போற்றுவேன்.

2. யேசுவின் சொல்லும் சித்தமும்
ஆசையுள்ளோனாய்ச் செய்யவும்,
தேவ ஒத்தாசை நம்புவேன்;
ஆவியின்பேரில் சாருவேன்.

3. நாதரின் இன்ப சத்தமும்
வேதத்தில் கேட்டு, நித்தமும்
ஆத்தும நன்மை நாடுவேன்;
நீதியின் பாதை செல்லுவேன்.

4. யேசுவின் இராஜரீகமும்
ஆசீத்த மா செங்கோன்மையும்,
விண்ணிலே தோன்றும் வண்ணமாய்,
மண்ணிலுண்டாகும், மேன்மையாய்.

**92.** **“Come ye that love the Lord”** **(823)**

**மெய்ப் பக்தர், தாசரே!**
கொண்டாடக் கூடுவோம்.
சந்தோஷ கீதம் பாடியே,
சந்தோஷ கீதம் பாடியே
கர்த்தாவைப் போற்றுவோம்;
கர்த்தாவைப் போற்றுவோம்.

**பல்லவி**

மா உன்னத சீயோன்,
சோபித சுந்தர சீயோன்,
மகா உன்னத திவ்விய சீயோன்
நாம் நோக்கியே செல்லுகிறோம்.

2. ரட்சண்யக் கூட்டத்தார்
பேரீவுக்காகவே
மேன்மேலும் நன்றி சொல்லுவார்,
மேன்மேலும் நன்றி சொல்லுவார்;
பாடாமல் தீராதே!
பாடாமல் தீராதே!

3. பேரன்பின் வாரியில்
நாம் மூழ்கி ஆழ்கிறோம்;
பின், மோட்சானந்த வீட்டினில்,
பின், மோட்சானந்த வீட்டினில்,
ஒன்றாகப் பூரிப்போம்;
ஒன்றாகப் பூரிப்போம்.

4. விசாரம் துக்கத்தை
விட்டார வாரிப்போம்;
இம்மானுவேலின் தேசத்தை,
இம்மானுவேலின் தேசத்தை
நாம் நாடிப் போகிறோம்,
நாம் நாடிப் போகிறோம்.

## 93. "Blessed assurance; Jesus is mine" (873)

**யேசுவை நம்பிப் பற்றிக்கொண்டேன்,**
மாட்சிமையான மீட்பைப் பெற்றேன்,
தேவகுமாரன் ரட்சை செய்தார்;
பாவியாம் என்னை ஏற்றுக் கொண்டார்.

**பல்லவி**

யேசுவைப் பாடிப் போற்றுகிறேன்,
நேசரைப் பார்த்துப் பூரிக்கிறேன்;
மீட்பரை நம்பி நேசிக்கிறேன்,
நீடூழிகாலம் ஸ்தோத்தரிப்பேன்.

2. அன்பு பாராட்டி, காப்பவராய்
எந்தனைத் தாங்கி, பூரணமாய்
இன்பமும் நித்தம் ஊட்டுகிறார்
இன்னும் நீங்காமல் பாதுகாப்பார்.

3. மெய்ச் சமாதானம் ரம்மியமும்
துய்ய தேவாவி வல்லமையும்
புண்ணிய நாதர் தந்து விட்டார்,
விண்ணிலும் சேர்த்து வாழச்செய்வார்.

**94. "There's not a friend like the lowly Jesus." (904)**

**யேசுவைப் போலச் சகாயஞ் செய்வார்**
இல்லையே! இல்லையே!
ஆத்மாவின் ரோகமும் நோவும் தீர்ப்பார்
இல்லையே! இல்லையே!

**பல்லவி**

இன்பவாரி! இயேசு ஸ்வாமி
அன்பரில் நீர் பேரன்பரே.
நல்லோரும் வல்லோரும் உம்மைப்போல
இல்லையே! இல்லையே!

2. மீட்பரைப்போல் மாசில்லாதோ, மேலோர்
இல்லையே! இல்லையே!
கிறிஸ்துவைப் போல் மனத்தாழ்மையுள்ளோர்
இல்லையே! இல்லையே!

3. யேசுவினாலே வராத இன்பம்
இல்லையே! இல்லையே!
ஆண்டவர் நீக்க மாட்டாத இன்பம்
இல்லையே! இல்லையே!

4. நாதர் கைவிட்ட மெய்ப்பக்தர் உண்டோ?
இல்லையே! இல்லையே!
மீட்கப்படாத மா பாவி உண்டோ?
இல்லையே! இல்லையே!

5. யேசுவைப் போலக் கைதாங்குவாரும்
இல்லையே! இல்லையே!
மோட்ச பேரின்பம் கடாட்சிப்பாரும்
இல்லையே! இல்லையே!

## 95. “Tell me the old, old story” (1131)

**திவ்ய விசேஷம் கூறும்!**
மெய்த்தேவ மைந்தனார்
தீயோரை மீட்டுக்கொள்ளப்
பேராவலாய் வந்தார்.
பிள்ளைக்குச் சொல்லுமாறு,
நன்றாகக் காட்டுமேன்
சந்தேகமெல்லாம் நீங்க
நற்செய்தி சொல்லுமேன்.

**பல்லவி**

ரட்சிப்பின் செய்தி சொல்லும்!
ரட்சிப்பின் செய்தி சொல்லும்!
ரட்சிப்பின் செய்தி சொல்லும்!
பேரன்பைக் கூறுமேன்!

2. இன்னமும் திட்டமாக
இச்செய்தி சொல்லுவீர்
ரட்சண்ய நாதர் பாடும்
மா மீட்பும் சாற்றுவீர்.
பேதையேன் புத்திக் கேற்க
கல்வாரி காட்டுமேன்
நற்செய்தி மீண்டும் மீண்டும்
நீர் சொல்லி வாருமேன்.

3. ரட்சிப்பை மெல்ல மெல்ல
மெய்ப் பக்தியோடேயும்
கல்நெஞ்சம் முற்றும்மாற
அன்போடும், காண்பியும்.
துன்பம், விசாரம், துக்கம்
உண்டாகும் நாளிலும்
இம்மானுவேல் தயாளம்
நான் காணப்போதியும்,

4. லோகத்தின் இன்பம் பேரில்
என் உள்ளம் போவதாய்,
நீர் கண்டால் கைவிடாமல்
மேன்மேலும் ஊக்கமாய்
ரட்சகரின் ஐங்காயம்
முட்கிரீடம் காட்டுமேன்!
ரட்சண்ய செய்தி சொல்லி
மெய்ப்பக்தி மூட்டுமேன்.

**96. "All my doubts give to Jesus." (868)**

**யேசுநாதர் என் சந்தேகம்**
முற்றும் தீரப்பண்ணினார்;
உன்னைப் புறம்பாகத் தள்ளேன்
என்று வாக்குக் கொடுத்தார்.

**பல்லவி**

நம்பினேனே! நம்பினேனே
திவ்விய வாக்கை நம்பினேன்!
நம்பினேனே! நம்பினேனே!
வேத வாக்கை நம்பினேன்.

2. யேசுநாதர் எந்தன் பாவம்
யாவும் நீக்கி ரட்சித்தார்;
தூய ரத்தங்கொண்டு என்னைச்
சுத்தமாக்கிக் காக்கிறார்.

3. யேசுநாதர் எந்தன் ஏக்கம்
நீக்கி ஆற்றித் தேற்றினார்
மேகம் சூழ்ந்து மூடும்போதும்
ஜோதி தோன்றச் செய்கிறார்.

4. யேசுநாதர் மெய்ச்சந்தோஷம்
தந்து பூரிப்பாக்கினார்;
வல்ல கர்த்தர் என்னில் தங்கிச்
சர்வ நன்மை நல்குவார்.

5. யேசுநாதர் பாதத்தண்டை
என்னை ஒப்புவிக்கிறேன்
ஆவி ஆத்துமா சரீரம்
முற்றும் தத்தஞ் செய்கிறேன்.

## 97. "Whoever receiveth the Crucified one." (400)

**கல்வாரியை நோக்கும் எப்பாவியையும்**
தம்மண்டையில் சேருவார் யாவரையும்
ரட்சாபெருமான் ஏற்றுக்கொள்கிறார்;
எல்லோரையும் ரட்சிக்க வல்லோரானார்.

**பல்லவி**

மா பாவி உன் ரட்சகர் அழைக்கிறார்
தம் ஜீவனை விட்டுன்னை மீட்டுக்கொண்டார்
கைமாறு வாங்காமல் கடாட்சஞ்செய்வார்
எல்லோரையும் ரட்சிக்க வல்லோரானார்.

2. நற்செய்தியை நம்பும் எம்மாந்தரையும்
கல்வாரியின் ரத்தத்தைச் சார்ந்தோரையும்
அன்போடு கடாட்சித்துச் சேர்த்துக்கொள்வார்
எல்லோரையும் ரட்சிக்க வல்லோரானார்.

3. மெய்யாய் மனம் மாறி எப்பாவத்தையும்
விட்டோடித் தன் நெஞ்சத்தில் மீட்பரையும்
ஏற்றுக்கொள்ளும் நீசனை ஈடேற்றுவார்
எல்லோரையும் ரட்சிக்கச் சித்தங் கொண்டார்.

*(The first bar of each line should be played uniformly in quavers, both in hymns and chorus)*

**98. "I am Thine, O Lord, I have heard Thy voice." (607)**

**திவ்ய அன்பின் சத்தத்தை, ரட்சகா !**
கேட்டு உம்மை அண்டினேன்;
இன்னும் கிட்டிச்சேர என் ஆண்டவா!
ஆவல் கொண்டிதோ வந்தேன்.

**பல்லவி**

இன்னும் கிட்டக்கிட்டச் சேர்த்துக்கொள்ளுமேன்,
பாடுபட்ட நாயகா!
இன்னும் கிட்டக்கிட்டச் சேர்த்துக்கொள்ளுமேன்
ஜீவன் தந்த ரட்சகா!

2. என்னை முற்றுமே இந்த நேரத்தில்
சொந்தமாக்கிக் கொள்ளுமேன்;
உம்மை வாஞ்சையோடெந்தன் உள்ளத்தில்
நாடி தேடச் செய்யுமேன்.

3. திருப்பாதத்தில் தங்கும் போதெல்லாம்
பேரானந்தம் காண்கின்றேன்;
உம்மை நோக்கி வேண்டுதல் செய்கையில்
மெய்ச் சந்தோஷமாகிறேன்.

4. இன்னும் கண்டிராத பேரின்பத்தை
விண்ணில் பெற்று வாழுவேன்;
திவ்ய அன்பின் ஆழமும் நீளமும்
அங்கே கண்டானந்திப்பேன்.

## 99. "When the trumpet of the Lord shall sound."(893)

**திவ்ய காளச்சத்தம் கேட்க யேசு தோன்றும் காலத்தில்**
ஆவலாய் அக்காட்சி கண்டானந்திப்பேன்;
மீட்கப்பட்ட தாசர் ஒன்றுகூடி மோட்ச லோகத்தில்
நிற்கும் போது நானும் கூடவே நிற்பேன்

**பல்லவி**

தாசர் விண்ணில் ஒன்றுகூடி,
தாசர் விண்ணில் ஒன்று கூடி;
தாசர் விண்ணில் ஒன்று கூடி,
நிற்கும் போது நானும் கூடவே நிற்பேன்.

2. நித்திரை செய்த பக்தர் உயிர்த்து வானமேறி யேகுவார்
மீட்பர் மாண்பைக் கண்டு ஆரவாரிப்பேன்
விசுவாசிகள் எல்லோரும் விண்ணில்கூடி வாழுவார்
அந்த நாளில் நானும் கூட வாழுவேன்

3. யேசுநாதரின் பேன்பை எங்கும் கூறும்படிக்கே
சோர்பில்லாமல் வேலைசெய்து ஜீவிப்பேன்.
பின்பு, தாசர் ஒன்றுகூடி தேவ சந்நிதியிலே
நிற்கும்போது நானும் கூடவே நிற்பேன்.

**100. “Lo! fountain full and free.”**

**பாய்ந்து ஓடுகின்றதே,**
ரட்சிப்பின் ஜீவாறு;
பாவமாந்தர்க்காகவே
ஓடும் திவ்ய ஆறு
அதில் பானம் பண்ணுமேன்
தாகம் தீர்த்துக் கொள்ளுமேன்.

**பல்லவி**

பாரும்! பாரும்! ரட்சிப்பின் ஜீவாறு
இன்றும் என்றும் ஓடுகின்றதே!

2. கேளும்! சப்திக்கின்றதே
ரட்சிப்பின் ஜீவாறு;
பாவநாச வாழ்வையே
ஈயும் திவ்ய ஆறு.
இன்ப சத்தம் நம்புவீர்!
பாரம் நீங்கி வாழுவீர்.

3. ஒப்பில்லாத ஆறிதே;
ரட்சிப்பின் ஜீவாறு;
உன்னதத்திலிருந்தே
ஓடிவந்த ஆறு
துயரத்த ஆற்றிலே
ஸ்நானம் பண்ணி வருமேன்.

**101. “Tis th' promise' of God' full salvation to give.” (841)**

**யேசுவண்டை வந்தால் அவர் ஏற்றுக்கொள்வார்;**
ரட்சிப்பேனென்று வல்ல மெய் வாக்களித்தார்.

**பல்லவி**

மீட்பரண்டை வந்தேன்; விசுவாசியானேன்;
திருரத்தத்தால் ரட்சிப்பைப் பெற்றுக்கொண்டேன்.
அல்லேலூயா வந்தேன்; விசுவாசியானேன்
திருரத்தத்தால் ரட்சிப்பைப் பெற்றுக்கொண்டேன்.

2. பெருஞ் சோதனைகள் வந்து நெருங்கினும்
யேசுநாதரின் வல்லமை வெல்லச்செய்யும்,

3. இஷ்டர் ஸ்நேகிதரும் மோட்சலோகஞ் சென்றார்
இன்ப வாரியில் மூழ்கிக் கொண்டாடுகிறார்.

4. விண் வீட்டிலே பாலரும் பாடுகிறார்;
ராஜா கீதத்தைக் கேட்டுச் சந்தோஷிக்கிறார்,

5. தீர்க்கர் ராஜாக்களும் வானலோகத்தில், பார்!
பாடிக்கொண்டே பொன் வீதியில் செல்லுகிறார்.

6. நாமும் பேரின்பத்தில் பங்கு பெற்றுக்கொள்வோம்,
என்றும் மீட்பவரைப் போற்றியே ஸ்தோத்திரிப்போம்.

## 102. “Jesus keep me near the Cross.” (134)

**யேசுவே! கல்வாரியில்**
என்னை வைத்துக்கொள்ளும்;
பாவம் போக்கும் ரத்தமாம்
திவ்ய ஊற்றைக் காட்டும்.

**பல்லவி**

மீட்பரே! மீட்பரே!
எந்தன் மேன்மை நீரே!
விண்ணில் வாழுமளவும்
நன்மை செய்குவீரே!

2. பாவியேன் கல்வாரியில்
ரட்சிப்பைப் பெற்றேனே.
ஞான ஜோதி தோன்றவும்
கண்டு பூரித்தேனே.

3. ரட்சகா! கல்வாரியின்
காட்சி கண்டோனாக
பக்தியோடு ஜீவிக்க
என்னை ஆள்வீராக.

4. இன்னமும் கல்வாரியில்
ஆவலாய் நிற்பேனே,
பின்பு, மோட்ச லோகத்தில்
என்றும் வாழுவேனே.

## 103. "The love that Jesus had for me." (648)

**என் மீட்பர் ரத்தஞ் சிந்தினார்,**
அகோர கஸ்தியடைந்தார்,
இவ்வாறு அன்பு காட்டினார்;
பேரன்பு இதுவே!

**பல்லவி**

ஒப்பற்ற அன்பு இதுவே!
ஒப்பற்ற அன்பு இதுவே!
இப்பாவிக்காக மரித்தார்,
பேரன்பு இதுவே!

2. என் நேசர் பட்ட க்லேசமோ,
முட்க்ரீடம், ரத்தவேர்வையோ,
குரூரவாதை, நிந்தையோ,
எல்லாம் ஒப்பற்றதே.

3. என் நாதர் வானஞ் சென்றதால்,
விண் வீட்டில் வேண்டிக் கொள்வதால்
உண்டாகும் சமாதானத்தால்
மெய்ப் பாக்கியம் அடைந்தேன்.

4. என் ஆண்டவர் கடாட்சிக்கும்
நல் நம்பிக்கை, சந்தோஷமும்
நீங்காத இன்பம், பூரிப்பும்
ஒப்பற்றவைகளே.

**104. 'There is life for a look at the Crucified One' (123)**

**யேசுநாதர் ஐங்காயத்தை நோக்கிப் பார்த்தால்**
நித்ய ஜீவனைப் பெற்றுக்கொள்வாய்;
பாவி! ப்ராணனைத் தந்துன்னை மீட்டவரை
நம்பி வந்து அண்ணாந்து பார்ப்பாய்,

**பல்லவி**

பார்! பார்! நோக்கிப்பார்.
யேசுநாதர் ஐங்காயத்தை நோக்கியே பார்!
நித்ய ஜீவனைப் பெற்றுக்கொள்வாய்.

2. பாவப் பாரத்தைத் தாங்கின ரட்சகரால்
உந்தன் குற்றங்கள் நீங்கினதே!
ஜீவநாயகர் சிந்தின ரத்தத்தினால்
பாவக்கடனும் தீர்ந்தாயிற்றே!

3. எந்தக்ரியைகள் ஜெபங்கள் கண்ணீர்களும்
உன்னை ரட்சிக்கமாட்டாதே! பார்!
திரு ரத்தமே தஞ்சம் என்றோடி வந்தால்
வல்ல மீட்பர் கடாட்சஞ் செய்வார்.

4. ப்ராய்ச்சித்தத்தின் க்ரியைகள் முடிந்ததே
என்று ஆண்டவர் வாக்களித்தார்;
சர்வலோகத்தின் மீறுதல் பாவங்களைச்
சிலுவையில் நிவிர்த்தி செய்தார்.

5. பாவநாசனர் ஈயும் மா ரட்சிப்பையே
இந்நேரமே பற்றிக் கொள்வாய்;
உன் நீதியாம் யேசுவின் புண்ணியத்தால்
பேரின்பம் பெற்றே வாழுவாய்.

## 105. "Down in the valley with my Saviour I would go." (529)

**பூவின் நற்கந்தம் வீசும் சோலையாயினும்**
நல்லதண்ணீர் ஓடும் பள்ளத்தாக்கிலேயும்,
யேசுநாதர் பின்சென்றேகி மோட்சம் நாடுவேன்,
விண்ணில் சூடும் க்ரீடம் நோக்கி ஓடுவேன்.

**பல்லவி**

பின்செல்வேனே! மீட்பர் பின் செல்வேனே!
எங்கேயும் எப்போதும் பின்னே செல்லுவேன்;
பின் செல்வேனே! மீட்பர் பின் செல்வேனே!
யேசு காட்டும் பாதை யெல்லாம் செல்லுவேன்.

2. கார்மேகம் மேலே மூடும் பள்ளமென்கிலும்,
காற்றகோரமாக மோதும் ஸ்தானத்திலும்,
யேசு பாதை காட்டச் சற்றும் அஞ்சவேமாட்டேன்;
ரட்சகர் கை தாங்கத் தைரியம் கொள்ளுவேன்.

3. நாள்தோறும் யேசுநாதர் கிட்டிச்சேருவேன்,
மேடானாலும் காடானாலும் பின்செல்லுவேன்,
மீட்பர் என்னை மோசமின்றிச் சுகமே காப்பார்,
விண்ணில் தாசரோடு சேர்ந்து வாழ்விப்பார்.

**106. "There is a city bright." (Golden Bells) (415)**

**பாவம் ப்ரவேசியா**
பொன்னகரம் உண்டே,
தீட்டான தொன்றும்
தீட்டான தொன்றும்
ஓர்காலும் சேராதே

2. இதோ! நல் மீட்பரே!
உம்மண்டையில் வந்தேன்
என் பாவம் நீக்கி
என் பாவம் நீக்கி
நீர் சுத்தமாக்குமேன்.

3. உம் நேசப் பிள்ளையாய்
நீர் சேர்த்துக் கொள்ளுவீர்
தீமை செய்யாமல்,
தீமை செய்யாமல்
என்னைக் காப்பாற்றுவீர்.

4. பின் மோட்ச தேசத்தில்
வெண் வஸ்திரம் தரிப்பேன்,
குற்றமில்லாமல்,
குற்றமில்லாமல்
இன்பமாய் வாழுவேன்.

# HYMNS OF FAITH
# விசுவாச கீதங்கள்

**107. Search me, O God (22)**

**ஆராய்ந்து பாரும், கர்த்தரே;**
என் க்ரீயை யாவையும்;
நீர் காணுமாறு காணவே
என்னில் பிரகாசியும்.

2. ஆராயும்! எந்தன் உள்ளத்தை
நீர் சோதித்தறிவீர்;
என் அந்தரங்க பாவத்தை
மா தெளிவாக்குவீர்.

3. ஆராயும் திவ்ய ஒளியால்,
துர்ராசை தோன்றவும்,
மெய் மனஸ்தாபம் அதனால்
உண்டாக்கியருளும்.

4. ஆராயும் சிந்தை, யோசனை,
எத்தீய நோக்கமும்,
அசுத்த மனோபாவனை
உள்ளிந்த்ரியங்களும்.

5. ஆராயும் மறைவிடத்தை
மா தூய கண்ணினால்;
அரோசிப்பேன் என் பாவத்தை
தேவானுக்ரகத்தால்.

6. இவ்வாறு நீர் ஆராய்கையில்,
சாஷ்டாங்கம் பண்ணுவேன்,
உம்சரணார விந்தத்தில்
சுத்தாங்கம் தேடுவேன்.

**108. There is sin in the camp (43)**

**யுத்த சேனையில் பாதகம் நுழைந்ததே!**
என்னில் உண்டோ? என்னில் உண்டோ?
பெரும் தீமையும் தோல்வியும் நேரிட்டதே!
யேசுவே! என்னாலோ?
தேவாசீர்வாதம் வராமல், இதோ!
தடையுண்டாயிற்று தன்னயமோ?
பெருமை பொருளின் மயக்கமோ?
என்னிலே கண்டீரோ?

**பல்லவி**

என்னில் தானோ? என்னில் தானோ?
என்னிலே கண்டீரோ?

2. அருள் வேதத்தில் மன்னிப்பை வாக்களித்தீர்.
எனக்குண்டோ? எனக்குண்டோ?
நம்பி வந்தவர் யாருக்கும் இரங்குவீர்!
என்னையும் நோக்கீரோ?
பாவ விமோசனம் அருளுவீர்!
நித்திய ஜீவன் கடாட்சஞ் செய்வீர்!
பூரண சுத்தமும் தந்திடுவீர்!
எனக்கும் தாரீரோ?

**பல்லவி**

தாரீரோ? தாரீரோ?
எனக்கும் தாரீரோ?

3. விசுவாசிக்கு மெய்ச்சமாதான முண்டே,
எனக்குண்டோ? எனக்குண்டோ?
மெய்ப்பக்தரின் சோர்பை நீர் நீக்குவீரே
என்னையும் சேர்க்கீரோ?

ரக்ஷிப்பின் க்ரியையும் முடிந்ததே!
நீச மா பாவியும் வரலாமே!
என்னையும் வருந்தி அழைத்தீரே!
யேசுவே! வந்திட்டேன்.

**பல்லவி**

ஓடிவந்தேன், ஓடிவந்தேன்.
யேசுவே! வந்திட்டேன்.

## 109. Nothing between, Lord-Nothing between! (42)

**இடையில் ஒன்றும் நில்லாமல், உம்**
சமீபம் அண்டவும்,
சமுகம் காணவும்,
நல் சத்தம் கேட்கவும்,
கடாட்சியும்.

2. இடையில் ஒன்றும் நில்லாமல், உம்
மெல்லிய ஓசையே
காதாரக் கேட்கவே,
வீண்சத்தம் யாவுமே
அமர்த்திடும்.

3. இடையில் ஒன்றும் நிற்கவொட்டீர்
பூலோக ஸ்நேகமோ?
தன்னிஷ்ட செய்கையோ?
சுய ப்ரயாசையோ?
நீக்கிடுவீர்.

4. இடையில் ஒன்றும் நில்லாமலே,
அவிசுவாசமோ,
அச்சம், சந்தேகமோ,
பேரொளியால், இதோ!
அகற்றுமே.

5. இடையில் ஒன்றும் நில்லாமலே
இருளை நீக்குவீர்.
ப்ரகாசங் காட்டுவீர்,
வெளிச்சம் வீசுவீர்
மா சுடரே!

6. இடையில் ஒன்றும் நில்லாமலே
நித்தம் சஞ்சரிப்பேன்,
உம்மையே நோக்குவேன்
உம்மண்டை தங்குவேன்
ஏன் மீட்பரே!

7. இடையில் ஒன்றும் நில்லாமலும்,
காப்பாற்றும் சீக்கிரம்
ப்ரபஞ்ச மயக்கம்
நீக்கி, நின் ராஜ்யம்
தோன்றச் செய்யும்.

8. இடையில் ஒன்றும் நில்லாமலும்
தங்கி, பின் மோட்சத்தில்
சமுகத் தண்டையில்
நான் நிற்கும் வரையில்,
காத்தருளும்.

## 110. Nothing unclean can enter in (40)

**அசுத்தமான எதுவும்,**
என் தூய ஆண்டவா!
உம் திவ்ய சன்னிதானத்தில்
ப்ரவேசித்து நில்லா.

**பல்லவி**

அசுத்தமே இல்லாமலே
கிருபையாய்க் காப்பாற்றுமே!

2. அசுத்தமான எதையும்,
கர்த்தாவே! வெறுப்பீர்;
மா சுத்த கண்ணால் தீமையை
நீர் பார்க்கவே மாட்டீர்.

3. அசுத்தம் ஒன்றும் உமக்கும்
எனக்கும் இடையில்
வராமல், சர்வ சுத்தமும்
உண்டாக்கும் எந்தனில்,

4. அசுத்தம் யாவும் நீக்கி, உம்
நல் சத்தம் கேட்கவே
மாசற்ற ரத்தம் தெளித்து
சுத்தாங்கம் பண்ணுமேன்,

5. அசுத்தமே வராமல், நீர்
பவித்திரம் ஈயுமேன்,
உம் திருரத்தம், யேசுவே!
எப்போதும் நம்புவேன்.

## 111. Oh! to be nothing, nothing (325)

**ஒன்று மில்லாமல், உந்தன்**
பாதத்திலே விழுந்தேன்,
நான் வெறுமையான பாத்ரம்
உபயோகஞ் செய்யுமேன்,
கறையும், குறையும் நீக்கி
நீர் துப்புர வாக்கிடுவீர்,
வெறுமையானது! பாரும்!
பேரருளால் நிரப்புவீர்.

**பல்லவி**

ஒன்றும் இல்லாமல், உந்தன்
பாதத்திலே விழுந்தேன்,
நான் வெறுமையான பாத்ரம்
உபயோகஞ் செய்யுமேன்.

2. ஒன்று மில்லாமல், வந்து
வாசலில் காத்திருப்பேன்;
ஓர் அடிமைபோல் நின்று
பணிவிடையும் செய்குவேன்;
எந்தனைக் கருவியாக
எந்நேரமும் கையாடுவீர்,
வேலை கொடாமற் போனாலும்
நான் பணிந்து நிற்கச் செய்வீர்.

3. ஒன்றுமில்லாமையாலே
தூசியில் தாழுகிறேன்;
நான் சிறுகியே போனாலும்
திரு நாமத்தைப் போற்றுவேன்;
யேசுவை உயர்த்திக் காட்டி
ப்ரஸ்தாபித்து அறிவிப்பேன்;
யேசுவின் அன்பை அல்லாமல்
வேறொன்றையும் அறிந்திலேன்.

## 112. Oh, the bitter shame and sorrow, (53)

**முந்தி யேசுநாதர் நின்று**
நேசத்தோடழைத்துமே.
திவ்ய அன்பை வாஞ்சியாமல்,
அகங்காரங்காட்டி, “எல்லாம்
என்னால் ஆகும்“ என்றேனே.

**பல்லவி**

“என்னால் ஆகும்” என்றேனே.

2. கைவிடாத மீட்பர் ரத்தம்,
காயமும் நான் கண்டனன்.
சாவின் காட்சியாலே சற்று
ஆவல்கொண்டு "கொஞ்சமேனும்
உம்மால் ஆகும்" என்றனன்.

**பல்லவி**
"உம்மால் ஆகும்" என்றனன்.

3. மேலும் மேலும் துணை நின்று
என்னைத்தாங்கி வந்தாரே
எந்தன் கர்வம் நீங்கி, மீட்பர்
பாதம் அண்டி, "மிக்க நன்மை
உம்மால் ஆகும்" என்றேனே.

**பல்லவி**
"உம்மால் ஆகும்" என்றனன்.

4. நேசநாதா! வெற்றிகொண்டீர்!
அன்பின் ஆழம் நீளமும்
கண்டு, என்னை ஒப்புவித்து
முற்றும் உந்தன் மீதில் சார்ந்தேன்,
"உம்மால் ஆகும் சர்வமும்".

**பல்லவி**
"உம்மால் ஆகும் சர்வமும்"

## 113. Seek ye first (41)

**அற்ப வாழ்வை வாஞ்சியாமல்,**
இன்பம், செல்வம் பின்பற்றாமல்,
தேவ நேசத்தை ஓயாமல்
நாடுவாய்! நாடுவாய்!

2. விரும்பாதே பேர் ப்ரஸ்தாபம்,
லோகமகிமை ப்ரதாபம்
ஆத்மவாழ்வின் நித்தியலாபம்
நாடுவாய்! நாடுவாய்!

3. நாடுவாய் தேவாசீர்வாதம்
கர்த்தர்ஈயும் சற்பிரசாதம்
பாவந்தீரத் திருப்பாதம்
நாடுவாய்! நாடுவாய்!

4. மீட்பர்போல் சுத்தாங்கமாக,
தாழ்மையோடு சாந்தமாகத்
தொண்டுசெய்ய ஆவலாக
நாடுவாய்! நாடுவாய்!

5. பிறர் யேசுவண்டை சேர
அவராலே கடைத்தேற,
தேவசித்தம் நிறைவேற,
நாடுவாய்! நாடுவாய்!

6. அருள்நாதர் அரசாளும்
காலம் வந்து; சர்வத்தாளும்
மீட்பைக் காணவும், எந்நாளும்
நாடுவாய்! நாடுவாய்!

## 114. My Saviour! Thou hast offered rest

**வா! இளைப்பாறல் தருவேன்**
என்றென்னைக் கூப்பிட்டீர்;
என் சொந்த க்ரியை இன்றியே
மெய்ப்பாக்யம் நல்குவீர்.

2. ஆங்காரம், சுயஸ்நேகமும்
மேலிட்டு வந்ததால்
ஓய்வடையாமல், மருண்டேன்
அவிசுவாசத்தால்.

3. 'நான்' என்ற அங்காரத்தால்
வீணாக முயன்றேன்!
இவ்வாத்ம இளைப்பாறலைப்
பெறாமற் போயினேன்.

4. உம் திவ்ய சமாதானத்தை
நீர் தாரும், ரக்ஷகா!
என் ஆவி தேகம் யாவையும்
வந்தாளும், நாயகா!

5. மாவல்ல கையில் எந்தனை
நான் ஒப்புவிக்கிறேன்;
உம் திருச் சித்தப்படியே
ஆட்கொண்டு வாருமேன்.

6. பேரின்பம் காணும் அளவும்
நீர் ஆண்டு நடத்தும்;
உம் அருள் சாயல் எந்தனில்
உண்டாக்கியருளும்.

**115. O, Jesus Christ! grow Thou in me. (313)**

**என் ரக்ஷகா! நீர் என்னிலே**
மேன்மேலும் விளங்கும்;
பொல்லாத சிந்தை நீங்கவே
சகாயம் புரியும்.

2. என் பலவீனம் தாங்குவீர்
மாவல்ல கரத்தால்.
சாவிருள் யாவும் நீக்குவீர்
மெய் ஜீவன், ஜோதியால்,

3. துராசாபாசம் நீங்கிடும்
உம்தன் ப்ரகாசத்தால்
சுத்தாங்க குணம் பிறக்கும்,
நல்லாவி அருளால்.

4. மாசற்ற திவ்ய சாயலை
உண்டாக்கியருளும்;
என்னில் தெய்வீக மகிமை
மேன்மேலும் காண்பியும்.

5. சந்தோஷிப்பித்துத் தாங்குவீர்,
ஒப்பற்ற பலத்தால்;
என் நெஞ்சில் அனல் மூட்டுவீர்
பேரன்பின் ஸ்வாலையால்.

6. நீர் பெருக நான் சிறுக
ஆட்கொண்டு நடத்தும்;
மெய் பக்தியில் நான் வளர;
காடாட்சித்தருளும்.

## 116. Not my own. (53)

**நான் என் சொந்தமல்ல! யேசு**
ரத்தஞ்சிந்தி மீட்டனர்;
பாடுபட்டு ஜீவன் தந்து,
என்னை ஆளாய்க் கொண்டனர்.

**பல்லவி**

சொந்தமல்ல! யேசுவே!
முற்றும் நான் உம் அடிமை!
என்தன் ஜீவன் செல்வம் யாவும்
நித்தம் உமக்குடைமை.

2. நான் என் சொந்தமல்ல! என்னை
கிறிஸ்துவின் ஆதீனமாய்
ஒப்புவித்து, அவர்க்கென்று
ஜீவிப்பேன் ஆனந்தமாய்.

3. நான் என் சொந்தமல்ல! ஜீவன்,
சுகம், காலம், படைப்பேன்.
எஜமானன் சித்தமாக
உபயோகஞ் செய்குவேன்.

4. நான் என் சொந்தமல்ல, என்னை
ஏற்றுக்கொண்டு ரக்ஷித்தார்;
பின்பு மோக்ஷானந்தம் தந்து
ஊழிகாலம் வாழ்விப்பார்.

## 117. My spirit, soul and body (65)

**என் ஆவி, ஆத்மா, தேகம்**
சர்வாங்க பலியாய்;
நான்படைத் தொப்புவித்தேன்
என் மீட்பர் சொந்தமாய்.

**பல்லவி**
ஆம், பலிப்பீடம் பேரில்
சமஸ்தம் படைத்தேன்;
மாசற்று சுத்தமாக
நீர் என்றும் காருமேன்.

2. உம் அருள்வாக்கை நம்பி
வந்தேனே! நோக்குவீர்!
ஆ! வல்ல நேசநாதா!
நீர் முற்றும் ரக்ஷிப்பீர்.

3. சரீர அங்கம் யாவும்
போர் ஆயுதங்களாய்
ப்ரதிஷ்டை செய்தேன் பாரும்!
கையாடும் நித்தமாய்.

4. உம்மாலே அருள்நாதா!
நான் இனி ஜீவிப்பேன்;
உம் ஜீவன் சாயல் என்னில்
நீர் தோன்றச் செய்யுமேன்.

5. மாசற்ற ரத்தத்தாலும்
தேவாவியாலுமே
நீர் என்னைச் சுத்தமாக்கி
மாசின்றிக் காருமே.

## 118. In full and glad surrender! (88)

**என் ஜீவன், சுகம், செல்வம்**
ப்ரதிஷ்டை செய்கிறேன்;
உற்சாக பலியாக
நான் ஒப்புவிக்கிறேன்.

2. என் நாதா! அடியேனை
நீர் ஏற்றுக்கொள்ளுமேன்;
நான் உன்தன் சொந்தமாக
எந்நாளும் ஜீவிப்பேன்.

3. என் நெஞ்சில் நீரே வந்து
ப்ரசன்னமாகுவீர்;
ஏகாதிபதியாக
அங்காட்சி செய்குவீர்.

4. நீர் ஆளும்! யேசுநாதா!
என் ராஜாவாயிரும்;
எக்காலும் அடியேனை
ஆட்கொண்டு நடத்தும்.

**119. Oh! my Father, take me, make me! (35)**

**என் பிதாவே! மாசில்லாமல்**
சுத்தமாக்கிச் சொந்தமாய்
வைத்துத், திருப்பாதத்தண்டை
தங்கச்செய்யும் நித்தமாய்.

2. ரக்ஷகா என் உள்ளம் ஆர
திவ்ய அன்பை ஊற்றுமேன்
லோக நேசம் உம்மைவிட்டுப்
பிரிக்காமல், காருமேன்.

3. தூய ஆவி! என்னை அன்பின்
பாசத்தாலே கட்டுவீர்;
பாதைகாட்டிப் பாதுகாத்து,
மோட்சகரை ஏற்றுவீர்.

**120. I am Thine own, O Christ!**

**சமஸ்தம், கிறிஸ்துவே!**
ப்ரதிஷ்டை செய்கிறேன்;
நான் புது ஜீவியம்
கண்டடைந்தேன்.

2. பூலோக இன்பத்தை
நாடாமல், உம்மிலே
ஆனந்தித் துவப்பேன்.
என் நேசரே!

3. ஆனந்தக் களிப்பாய்ச்
சங்கீதம் பாடுவேன்
என் தயா நிதியைக்
கொண்டாடுவேன்.

4. என் நெஞ்சை, ரக்ஷகா!
நீர் வசமாக்கினீர்,
நீங்காப் பேரின்பத்தைக்
கடாட்சித்தீர்.

5. பேரன்பின் கடலில்
நான் மூழ்கிக் களிப்பேன்;
மெய் இளைப்பாறுதல்
கண்டுணர்ந்தேன்.

6. என் செய்கை சிந்தனை
சுத்தாங்க மாகவும்
சுகந்தம் வீசவும்
செய்தருளும்.

## 121. My glorious Victor! Prince Divine! (58)

**என் மீட்பரே! என் நாதரே!**
சாஷ்டாங்கமாய் நற்றாளிலே,
கைகூப்பி வந்து நிற்கிறேன்.
நீர் ராஜா! நான் உம் அடியேன்!

2. ஆ! எஜமானே! கதவில்
என் காதைக் குத்துவீராகில்,
உம்மண்டை தங்கிச் சேவிப்பேன்,
ஸ்வாதீனனாக விரும்பேன்.

3. கை, காது, சிந்தை, சித்தமும்
ப்ரதிஷ்டை செய்து, முற்றிலும்
உம் வசம் ஒப்புவிக்கிறேன்,
சுயேச்சையாய் நான் ஜீவியேன்.

4. என் ஏழைக்கையில் தேவரீர்
மா அருள் செல்வம் நல்குவீர்;
உம் நேச சத்தம் நல்குவீர்;
குத்துண்ட காதும் குளிரும்.

**122. Take my life, and let it be. (72)**

**எந்தன் ஜீவன், யேசுவே!**
சொந்தமாக ஆளுமே!
எந்தன் காலம், நேரமும்
நீர் ஆண்டு நடத்தும்.

2. எந்தன் கை பேரன்பினால்
ஏவப்படும் எந்தன் கால்
சேவைசெய்ய விரையும்;
அழகாக விளங்கும்.

3. எந்தன் நாவு இன்பமாய்
உம்மைப் பாடவும், என் வாய்
மீட்பின் செய்தி கூறவும்
ஏதுவாக்கியருளும்.

4. எந்தன் ஆஸ்தி தேவரீர்
முற்றும் அங்கீகரிப்பீர்
புத்தி, கல்வி யாவையும்
சித்தம்போல் ப்ரயோகியும்.

5. எந்தன் சித்தம் யேசுவே!
ஒப்புவித்து விட்டேனே;
எந்தன் நெஞ்சில் தங்குவீர்,
அதை நித்தம் ஆளுவீர்.

6. திருப்பாதம் பற்றினேன்;
எந்தன் நேசம் ஊற்றினேன்;
என்னையே சமூலமாய்
தத்தஞ்செய்தேன் உண்மையாய்.

**123. I am trusting Thee - Lord Jesus. (138)**

**அருள் நாதா! நம்பி வந்தேன்**
நோக்கக் கடவீர்.
கைம்மாறின்றி என்னை முற்றும்
ரக்ஷிப்பீர்.

2. தஞ்சம்வேண்டி, நம்பி வந்தேன்
திருப்பாதத்தில்,
பாவ மன்னிப்பருள்வீர் இந்
நேரத்தில்.

3. தூய்மை வேண்டி, நம்பி வந்தேன்
உம்தன் ஆவியால்
சுத்தி செய்வீர் மாசில்லாத
ரத்தத்தால்.

4. துணைவேண்டி நம்பி வந்தேன்
பாதை காட்டுவீர்,
த்ருப்திசெய்து நித்தம் நன்மை
நல்குவீர்.

5. சக்திவேண்டி நம்பி வந்தேன்,
ஞான பெலனும்;
அக்னி நாவும் வல்ல வாக்கும்
ஈந்திடும்.

6. யேசுநாதா! நம்பி வந்தேன்,
தவறாமலே
என்னை என்றும் தாங்கி நின்று
காருமேன்.

## 124. Thine for ever - God of love (74)

**உந்தன் சொந்த மாக்கினீர்**
அடியேனை நோக்குவீர்,
என்றும் தீங்கில்லாமலே
பாதுகாரும், யேசுவே!

2. நான் உம் சொந்தம்! லோகத்தில்
மோட்ச யாத்ரை செய்கையில்,
ஜீவன், சத்யம், வழி நீர்;
நீரே ரட்சித்தாளுவீர்.

3. நான் உம் சொந்தம்! ரட்சிப்பும்
மட்டில்லாத பாக்யமும்
அருள் நாதா நல்கினீர்;
இன்னமும் காப்பாற்றுவீர்.

4. நான் உம் சொந்தம்! நித்தமாய்
ஏழையேனைச் சுகமாய்த்
தங்கச்செய்து மேய்ப்பரே!
காத்தும் மேய்த்தும் வாருமே.

5. நான் உம் சொந்தம்! தேவரீர்
வழி காட்டிப் போஷிப்பீர்
பாவம் நீங்க கழுவும்!
ஆயுள் முற்றும் நடத்தும்.

## 125. Thine, Lord, for ever. (45)

**யேசுவின் சொந்தம்!**
எந்தனை ரட்சித்தார்!
மாசற்ற ரத்தத்தால்
ஈடேற்றினார்.

2. யேசுவின் சொந்தம்!
ஆபத்து நேரினும்
அஞ்சாமல் நம்புவேன்
எக்காலமும்.

3. யேசுவின் சொந்தம்!
காரிருள் மூடினால்
தைரியங் கொள்ளுவேன்
மெய் வாக்கினால்.

4. யேசுவின் சொந்தம்!
நித்தமும் ஜெபிப்பேன்;
மீட்பரின் நாமத்தைக்
கொண்டாடுவேன்.

5. யேசுவின் சொந்தம்!
மோட்ச பேரின்பத்தில்;
மேன்மை பாராட்டுவேன்
என் நேசரில்.

## 126. As helpless as a child who clings (559)

**தந்தை தன் சிறு மைந்தனைக்**
கையேந்தித் தாங்குவான்;
சீராட்டப்பெற்ற பாலகன்
அபாயம் நினையான்.

2. அவ்வாறே, என்னை, தந்தையே,
காப்பாற்றித் தாங்குவீர்;
என் பலவீனம் நீங்கவும்
கையேந்தி வருவீர்.

3. மாதாவின் நேச மடியில்
சாய்ந்தாடும் குழந்தை
தாயாரின், முகம் பார்க்கையில்
மறக்கும் க்லேசத்தை.

4. அவ்வாறே, நேச ரக்ஷகா!
உம் அருள் முகத்தை
நான் பார்க்க ஸ்திரமாக்குவீர்!
என் விசுவாசத்தை.

5. தாய் தந்தைப் பக்கம் பாலரை
உட்கார வைக்குங்கால்,
சந்தோஷித் துள்ளங்களிப்பார்
பெற்றோரின் அன்பினால்.

6. அவ்வாறே திருப்பாதத்தில்
ஆனந்தம் அடைந்தேன்;
மென்மேலும் அருள் நாதரின்!
பேரன்பை ருசிப்பேன்.

## 127. Lord Jesus? Thou dost keep thy Child (202)

**தயாபரா! காத்தருளும்,**
என் சுகதுக்கம் யாவிலும்
சகாயஞ் செய்குவீர்.
என் நேச வல்லாக்ஷகா!
ஆருயிர் தந்த நாயகா!
பேரன்பைக் காட்டினீர்.

2. அன்பின் சொரூபி! யேசுவே!
சங்கீதம் பாடி உம்மையே
எப்போதும் போற்றுவேன்;
மா அருள் செல்வம் அளித்தீர்;
கடாட்சம் வைத்துக் காக்கிறீர்;
உம் சொந்தமாயினேன்.

3. மெய் வேத வாக்கைச் சாருவேன்,
நான் முற்றும் உம்மை நம்புவேன்,
கைதாங்கிக் காருமே!
உம்மாலே வெற்றி சிறப்பேன்,
ஆனந்தக் களிப்படைவேன்,
புகழ்ச்சி உமக்கே!

4. ஆரம்பமான க்ரியையை
நீர் பூரணமாக்கிப் பாவத்தை
நிர்மூலம் பண்ணுவீர்;
எப்பாடுமின்றி இன்பமும்,
என்குறை நீங்க நிறைவும்
ஈந்தாசீர்வதிப்பீர்.

**128. Hold thou my hand. (350)**

**கைதாங்கி வாரும்! ஏழை அடியேனை**
உம்மாலேயன்றி நிற்கவேமாட்டேன்;
கைதாங்கி வாரும்! எந்தன் நேசநாதா!
எத்தீங்குக்கும் அப்போது அஞ்சிடேன்.

2. கைதாங்கி வாரும்! அருள் அவதாரி!
மார்போடு அணைத்தன்பு காட்டுவீர்;
கைதாங்கி வாரும்! பாதை தவறாமல்,
காலூன்றி நிற்கத் திடன் செய்குவீர்.

3. கைதாங்கி வாரும்! அருள் ஜோதியின்றி
நான் போகும் பாதை முற்றும் மறையும்;
என்பேரில் திருமுகத்தின் பிரகாசம்
ஏறெடுப்பீர், பேரொளி உதிக்கும்.

4. கைதாங்கி வாரும்! பூமி இருள் நீங்கி,
பேரின்ப ஜோதி வீச, அடியேன்
இன்னும் உம்மால் கைதாங்கப்பெற்று, நேசா!
விண் வீட்டில் ஏறி வாழ்வையடைவேன்.

**129. Saviour! more than life to me (266)**

**ரக்ஷகா! கண்ணோக்குமேன்!**
உம்மை அண்டிப் பற்றிப் பிடித்தேன்
கூடவைத்துக் கொள்ளுவீர்.
திருரத்தம் நித்தம் தெளிப்பீர்.

**பல்லவி**

எந்நாள் நேரமும்
சுத்தமாக்கிக் கொண்டிரும்;
அன்பினாலே இழுப்பீர்,
நித்தம் கிட்டச் சேர்த்து அணைப்பீர்.

2. மோசமின்றி தினமும்
என்னை மெல்ல மெல்ல நடத்தும்.
நம்பிப் பின்னே செல்லுவேன்;
வழிவிட்டுத் தப்பித் தவறேன்.

3. ஜீவன் உள்ளவரைக்கும்,
மோட்சானந்தம் பெறுமளவும்,
பற்றிக்கொண்டு வருவேன்.
உம்மை மேலும் மேலும் நேசிப்பேன்.

## 130. Walking with Thee my God! (311)

**உம்மோடு, யேசுவே!**
சஞ்சரிப்பேன்;
நித்தமும் நேசராய்
விளங்குமேன்.
ஸ்நேகம் பாராட்டினீர்
சீராக்கி இரட்சித்தீர்.
காப்பாற்றுமேன்! காப்பாற்றுமேன்!

2. உம்மோடு, பிதாவே!
சஞ்சரிப்பேன்.
கைதாங்கி, பாதையில்
நடத்துமேன்.
திவ்விய சம்பாஷணை,
தூய சற்போதனை
கேட்டேசெல்வேன், கேட்டேசெல்வேன்.

3. உன்னத ஸ்தலத்தில்
சஞ்சரிப்பேன்.
உம்மை எந்நேரமும்
தரிசிப்பேன்.

தீங்கணு காமலும்
மேகம் தோன்றாமலும்.
வாசஞ்செய்வேன், வாசஞ்செய்வேன்.

4. உம்மோடு தாழ்மையாய்
சஞ்சரிப்பேன்.
அஞ்சாமல், அன்பனாய்
அண்டிக் கொள்ளுவேன்.
இஷ்டனோ டிஷ்டனாய்,
அந்யோந்ய நேசமாய்ச்
சம்பாஷிப்பேன், சம்பாஷிப்பேன்.

5. அப்பாலே மோட்சத்தில்
சஞ்சரிப்பேன்;
கண்ணார நோக்கியே
ஆனந்திப்பேன்.
பேரின்ப சுகமும்,
மாசற்ற ஸ்பாவமும்
கண்டடைவேன்! கண்டடைவேன்.

**131. Jesus! I am resting. (242)**

**ஜீவநேசா! அருள் நாதா!**
உந்தன் பேரில் சாருவேன்.
திவ்ய அன்பின் ஆழம் நீளம்
கண்டு களிப்பேன்;
அருள்முகம் உற்றுப் பார்க்கப்
பரவச மாகுவேன்;
திருச்சாயலாக மறு
ரூபமடைவேன்.

**பல்லவி**

ஜீவ நேசா! அருள் நாதா!
உந்தன் பேரில் சாருவேன்.
திவ்ய அன்பின் ஆழம் நீளம்
கண்டு களிப்பேன்.

2. உம தன்பின் பிரவாகம்
கடல்விடப் பெரிதே.
பொழிந்தீரே! தயாநிதி!
எந்தன் பேரிலே!
நேச ரக்ஷகா! அனந்த
அருள் செல்வம் நல்கினீர்.
எனக்காக, நிறைவாக,
வாரி இறைத்தீர்.

3. யேசுவே! அன்பின் சொரூபி!
உம்மை நோக்கிப் பார்க்கையில்,
இன்ப வெள்ளம் பேரானந்தம்
எந்தன் உள்ளத்தில்
பொங்கியே, ஏராளமாக
மனோரம்யம் அடைவேன்
குறைதீர, குணமாற
த்ருப்தியாகுவேன்.

4. திருமுகத்தின் ப்ரகாசம்
என்னில் வீசச்செய்யவும்,
அதினால் பாவந்தகாரம்
பறந்தோடவும்
தயைபுரிந் தென்னைக் காரும்,
ஜோதிமா திவாகாரா!
அன்பு, அனல் மூட்டி வாரும்
கருணாகரா.

## 132. On Thee my heart is resting. (245)

**மா நேசர் பேரில் சார்ந்து**
நான் இளைப்பாறுவேன்,
தயாபரா வேறென்ன
மெய்ப் பாக்யம் நாடுவேன்?
மெய்ஞான ஜோதிகண்டு
பேரன்பை ருசித்தேன்;
ஆனந்தக்களிப்போடு
ஏக்காலும் வாழுவேன்.

**பல்லவி**

மா நேசர்பேரில் சார்ந்து
நான் இளைப்பாறுவேன்;
தயாபரா! வேறென்ன
மெய்ப்பாக்யம் நாடுவேன்?

2. ஏராளமாம் என் பாவம்
நிவிர்த்தி பண்ணினீர்
மாசற்ற பலியாக
நீர் ரத்தஞ் சிந்தினீர்;
உம்மோடிறந்த என்னை
உயிர்த்தெழும்பச் செய்தீர்
தேவாவியின் பேரீவும்
என்னில் கடாட்சித்தீர்.

3. என்னாலே யேசுநாதா!
உம் சித்தம் வேலையும்
நாள்தோறும் நடந்தேற
கடாட்சம் புரியும்;
அசக்தனே யானாலும்
சற்றேனும் தளரேன்;
உம்மாலே சர்வபெலன்
எப்போதும் பெறுவேன்.

4. விரோதம் நேரிட்டாலும்
சமீபம் நிற்கிறீர்.
மெய் விசுவாசம் தந்து
என் சோர்வை நீக்குவீர்.
மா திவ்ய மார்பில் சாய்ந்து
நெஞ்சார சுகிப்பேன்
பேரன்பர் முகங்கண்டு
ஆனந்தங் கொள்ளுவேன்.

5. என் பாவப்பாசக் கட்டும்
நீர் முற்றும் அவிழ்த்தீர்,
ஆ! யேசுவே! நீர் என்னை
ஆட்கொண்டு காக்கிறீர்;
பூலோக எந்த வாழ்வும்
இல்லாமல் போயினும்;
உம் அருள் செல்வம் இன்னும்
குன்றாமல் பெருகும்.

## 133. Loved with ever lasting Love (256)

**ஒப்பில்லாத ஸ்நேகத்தால்**
என்னை நேசித்தே வந்தார்;
ஆவியின் பேரொளியால்
இதைத் தெளிவாக்கினார்;
சமாதானம் நிறைவாய்
வெள்ளம்போலத் தந்தனர்;
பிரியாச் சம்பந்தமாய்
என்னைச் சேர்த்துக்கொண்டனர்.

**பல்லவி**

பிரியாச் சம்பந்தமாய்
என்னைச் சேர்த்துக்கொண்டனர்,

2. திவ்ய சுக வாரியில்
இன்பமாக மூழ்குவேன்.
நீலாகாயம், புவியில்
நவக்காட்சி காண்கிறேன்.
நித்தம் களிகூறுவேன்
யேசுவில் ஆனந்தமாய்
அவர் அன்பில் நிலைப்பேன்
பிரியாச் சம்பந்தமாய்.

**பல்லவி**

அவர் அன்பில் நிலைப்பேன்
பிரியாச் சம்பந்தமாய்

3. க்லேசம், துன்பம், திகிலால்,
இனி மேல் நான் கலங்கேன்
இழுப்புண்டு யேசுவால்,
திவ்ய மார்பில் சாய்கிறேன்.
தம்மோடென்றும் சுகமாய்த்
தங்க அருள் புரிவார்
பிரியாச் சம்பந்தமாய்
என்னை சேர்த்து அணைத்தார்

**பல்லவி**

பிரியாச் சம்பந்தமாய்
என்னைச் சேர்த்து அணைத்தார்.

4. பிரியாத வண்ணமாய்
அவர் சொந்தமாயினேன்.
இளைப்பாறி இன்பமாய்,
பரவசம் அடைந்தேன்.
வானம் பூமி நீங்கினும்,
மீட்பர் என்னைக் கைவிடார்
ஸ்திரமாய், எக்காலமும்
என்னைப் பாதுகாக்கிறார்.

**பல்லவி**

ஸ்திரமாய் எக்காலமும்,
என்னைப் பாதுகாக்கிறார்.

## 134. I stand bewildered with wonder. (244)

**நான் ப்ரமித்து நின்று பேரன்பின்**
ப்ரவாகத்தை நோக்கிப் பார்த்தேன்;
என் உள்ளத்தில் மெய்ச் சமாதானம்
சம்பூரணமாய் அடைந்தேன்.

**பல்லவி**

மா தூய உதிரத்தால்
என் பாவம் நீங்கக் கண்டேன்;
யேசையரின் ரட்சிப்பினால்
நான் ஆறுதல் கண்டடைந்தேன்

2. முன்னாளில் இவ்வாறுதல் காண
ஓயாமல் ப்ரயாசைப்பட்டேன்;
வீண் முயற்சி நீங்கின போதோ
என் மீட்பரால் அருள் பெற்றேன்.

3. தம் கரத்தை என் மீதில் வைத்து
'நீ சொஸ்தமாவாய்' என்றனர்;
நான் அவரின் வஸ்திரம் தொட,
ஆரோக்கியம் அருளினார்.

4. எந்நேரமும் புண்ணியநாதர்
என் பக்கத்தில் விளங்குவார்;
தம்முகத்தின் அருள் பிரகாசம்
என்பேரில் வீசச் செய்வார்.

**135. Like a river glorious. (272)**

**தேவ சமாதான**
இன்ப நதியே
மா ப்ரவாகமான
வெள்ளம் போலவே,
நிறைவாகப் பாயும்
ஓய்வில்லாமலும்;
ஓட ஆழமாயும்
நித்தம் பெருகும்,

**பல்லவி**

அருள் நாதர் மீதில்
சார்ந்து சுகிப்போம்
நித்தம் இளைப்பாறல்
பெற்று வாழுவோம்.

2. கையின் நிழலாலே
என்னை மறைத்தார்.
சத்ரு பயத்தாலே
கலங்க விடார்.
சஞ்சலம் வராமல்
அங்கே காக்கிறார்
ஏங்கித் தியங்காமல்
தங்கச் செய்கிறார்.

3. சூர்ய ஜோதியாலே
நிழல் சாயையம்
காணப்பட்டாற்போலே,
துன்பம் துக்கமும்
ஒப்பில்லாப் பேரன்பாம்
சூர்ய சாயையே,
அதால், வாழ்நாள் எல்லாம்,
சோரமாட்டேனே.

**136. Precious Saviour! Thou hast saved me. (201)**

**அருள் நாதா! ரட்சைசெய்து**
என்னை சொந்தமாக்கினீர்;
மாசில்லாத ரத்தத்தாலே
சர்வ சுத்தம் பண்ணினீர்.

**பல்லவி**

போற்றும்! போற்றும்! அல்லேலூயா
போற்றும் அருள்நாதரை;
ரத்தத்தால் சுத்தாங்கம் செய்தார்
போற்றும்! போற்றும்! யேசுவை.

2. பாவக்குண க்ரியை மாற்ற
நெடுங்காலம் முயன்றேன்;
பின்பு வீண் ப்ரயாசை யென்று
கண்டு, உம்மை நம்பினேன்.

3. நித்தம் நம்பி, மனந்தேறி
அருள்நாதர் ரத்தத்தால்
தூய்மையாகித் தீமை யாவும்
ஜெயிப்பேனே அவரால்.

4. ஜீவித்தாலும் மரித்தாலும்
யேசுநாதர் தொண்டனாய்
மகத்தான மீட்பை எங்கும்
கூறுவேன் மா ஊக்கமாய்.

5. எந்தன் ரக்ஷா பெருமானே
பாவகுணம் மாற்றினார்,
கறை மாசு மறுவின்றி
பரிசுத்தஞ் செய்கிறார்.

6. போற்றும்! பேரானந்தமாக,
சர்வ சுத்தஞ் செய்கிறார்;
போற்றும்! போற்றும்! வல்ல மீட்பர்
தீங்கில்லாமல் காக்கிறார்.

## 137. Looking unto Jesus (222)

**யேசுவை நாம் நோக்கி**
முன்னே செல்லுவோம்
விசுவாசம் கொண்டு
வெற்றி சிறப்போம்.
ரக்ஷிப்பின் பதாகை
ஏற்றிக்காட்டுவோம்
லோகம் பாவம் பேரில்
ஜெயம் கொள்ளுவோம்.

**பல்லவி**
யேசுவை நாம் நோக்கி
முன்னே செல்லுவோம்,
விசுவாசங்கொண்டு
வெற்றி சிறப்போம்.

2. யேசுவை நாம் நோக்கி,
சென்று போகையில்
கால்கள் இடறாமல்
மோட்ச பாதையில்,
மோசமும் வராமல்,
நிலை பெறுவோம்.
கண்ணியில் சிக்காமல்
நடந்தேகுவோம்.

3. யேசுவை நாம் நோக்கி,
அன்பின் ஆழமும்
கிருபா கடாட்சம்
அருள் செல்வமும்
பேரானந்தமாகக்
கண்டு களிப்போம்
இன்னும் வாஞ்சையோடே
முன்னே செல்லுவோம்.

4. யேசுவை நாம் நோக்கி
அவர் வானத்தில்
பெற்ற திவ்ய மாண்பை
சிந்தை செய்கையில்,
விசுவாசத்தாலே
பரம் ஏறுவோம்,
யேசுவோடு கூட
வாசம் பண்ணுவோம்.

**138. Our blest Redeemer, ere He breathed (162)**

**விண் ஏகு முன் நல் வார்த்தையை**
நம் மீட்பர் மொழிந்தார்;
மா தூய தேற்றரவாளனை
வாக்களித்தார்.

2. அவ்வாறு வல்ல ஆவியே
சகாயராய் வந்தார்;
மெய்ப் பக்தர் நைந்த நெஞ்சிலே
சஞ்சரிப்பார்.

3. ஆகாத சிந்தை தோன்றினால்
மேலிடவே ஒட்டார்;
வீண் பயமும் மென் சொல்லினால்
அகற்றுவார்.

4. நற்குணம், செய்கை, விருப்பம்
மெய்ப்பக்தி யாவுமே
தேவாவியாலே மாத்திரம்
உண்டாகுமே.

5. மா தூயநேச ஆவியே!
சுத்தாங்கம் தாருமேன்
அன்பாக எங்கள் நெஞ்சிலே
வந்தாளுமேன்.

## 139. Hungering for the Sacred Fire (482)

**திவ்ய அக்னி ஈவுக்காக**
உம்மைத்தேடி ஆவலாக
யேசுவே! உம்மிடமாக
அண்டினேன்.

**பல்லவி**

என்னை ஜீவ பலியாக
படைப்பேன் சமூலமாக,
உம்மால் பெலனை நிறைவாகப்
பெற்றிடுவேன்.

2. பக்தி பெலனே யில்லாமல்
சுயக்ரியை சார்ந்திராமல்,
வேறே கதி அறியாமல்
அண்டினேன்.

3. நீசபாவி சேர்வதாலே
காயப்பட்ட கரத்தாலே
ஏற்றுக்கொள்வீர் ஆகையாலே
அண்டினேன்.

4. திரு ரத்தம் பேரில் சார,
எந்தன் ஆத்மா இளைப்பாற,
குறைதீர, மனதார
அண்டினேன்.

5. தயவாக நோக்கிப்பாரும்,
மிக்க அருள் செல்வம் தாரும்,
உமதன்பால் பாதுகாரும்,
அண்டினேன்.

6. நீக்குவீர் என் அவமானம்,
நல்குவீர் இவ்வருள் தானம்,
தாரும் திவ்ய அக்னி ஸ்நானம்,
அண்டினேன்.

**140. Holy Father! Thou hast spoken (164)**

**புத்திக்கடங்காத வல்ல**
வாக்கை இப்போ துரைத்தீர்
திரள் அருள் செல்வம், நல்ல
பிதாவே! நீர் காட்டினீர்.

2. திருவாக்கினால் சந்தேகம்
நீக்கி விசுவாசமும்
ஸ்திரமாக்கி, அபிஷேகம்
ஆவியாலே அருளும்.

3. சுய சக்தியே யில்லாமல்
திருப்பாதம் அண்டினேன்.
வேறே நன்மை விரும்பாமல்,
உம்தன் ஈவைப் பெறுவேன்.

4. ஏற்றுக்கொள்ளும்! தயவாக
முற்றும் சுத்திகரிப்பீர்.
ஆவியாலே நிறைவாக
அபிஷேகம் பண்ணுவீர்.

5. ஆவியின் மா ஞானஸ்நானம்
புத்திக்கு எட்டாததே!
ஆயினும் இவ்வருள் தானம்
எந்தன் நெஞ்சில் ஊற்றுமே.

6. ராஜா உபயோகஞ் செய்யும்
சுத்த பாத்ர மாக்குவீர்.
நித்ய ஜீவ ஊற்றிலேயும்
நிரம்ப நீர் செய்குவீர்.

7. யேசுவே! நீர் வாசராக
வாரும் எந்தன் உள்ளத்தில்,
ஆவியாலே தயவாக
நிரப்பும் இந்நேரத்தில்.

**141. Jesus! Thine all victorious Love. (187)**

**தயாபரா! என் உள்ளத்தில்**
தேவன்பை ஊற்றுமேன்;
அப்போது திவ்ய நேரத்தில்
வேரூன்றி, நிலைப்பேன்.

2. வானாக்னி என்னில் மூட்டியே
துராசை எரிப்பீர்;
எப் பாவமேடு மலையும்
உருக்கி விடுவீர்.

3. முன் பெந்தெகோஸ்தே நாளிலே
தீப்போலத் தோன்றினீர்;
சுட்டெரிப்பின் நல்லாவியே!
என் பாவம் அழிப்பீர்.

4. உள்ளிந்திரியங்கள் எங்கணும்
ஊடுருவிச் சென்றே,
சுத்தாங்கம், ஜீவன், ஜோதியும்,
உண்டாகச் செய்யுமே.

5. அப்போது இடறாமலும்
நற்பாதை செல்லுவேன்;
என் மீட்பர் பேரில் முற்றிலும்
எக்காலும் சாருவேன்.

**142. Spirit Divine! attend our prayers. (181)**

**தேவாவி! மனவாசராய்**
வந்தனல் மூட்டுவீர்,
உம் அடியாரின் உள்ளத்தில்
மா க்ரியை செய்குவீர்.

2. நீர் ஜோதி போல் ப்ரகாசித்து
நிர்ப்பந்த ஸ்திதியும்
என் கேடும் காட்டி, ஜீவனாம்
மெய்ப்பாதை காண்பியும்.

3. நீர் வான அக்னி போலவே
துர் ஆசை சிந்தையும்
தீக்குணமும் சுட்டெரிப்பீர்,
பொல்லாத செய்கையும்.

4. நற்பனி போலும், இறங்கும்
இவ்வேற்ற நேரத்தில்
செழிப்புண்டாகச் செய்திடும்,
பாழான நிலத்தில்.

5. புறாவைப்போலச் சாந்தமாய்
நீர் செட்டை விரிப்பீர்.
மெய்ச் சமாதானம், ஆறுதல்
நற்சீரும், அருள்வீர்.

6. நீர் பெருங்காற்றைப் போலவும்
வந்தசைந்தருளும்.
கல்நெஞ்சை மாற்றி பேரன்பை
நன்குணரச் செய்யும்.

**143. Eternal Spirit, by whose power. (164) (167)**

**தேவாவியே! நீர் அவிழ்ப்பீர்**
எப்பாவக் கட்டையும்;
எல்லோரின் மேலும் ஊதுவீர்;
உயிர்ப்பித்து எழும்பும்!

2. மெய்வழி காட்டி, பயமும்
நீர் நீங்கச் செய்குவீர்;
கல்நெஞ்சில் அன்பு பொங்கவும்
வந்தனல் மூட்டுவீர்.

3. துன்புற்று, ஏங்கி விழுந்தால்,
கைதூக்கித் தாங்குவீர்;
ப்ரசன்னமாகித் தேற்றலால்
சந்தேகம் நீக்குவீர்.

4. இவ்வருள் வேதம் வாசிக்க,
பேரொளி வீசுவீர்;
கேட்போரின் நெஞ்சில் பதிய
சகாயம் பண்ணுவீர்.

5. வல்லாவியே! இக்கூட்டத்தை
நீர் சந்தித்தருளும்;
ஏராள அருள் மாரியை
இப்போதே பொழியும்.

**144. How long O Lord, our Saviour (378), (87)**

**கர்த்தாவே! எதுமட்டும்**
வராமல் இருப்பீர்?
மெய்ப்பக்தரின் ஆயாசம்
நீர் நன்றாய் அறிவீர்.

2. மா ஜோதி அருணோதயம்
எந்நேரம் உதிக்கும்?
மெய் வாழ்வின் சுபதினம்
எப்போது விடியும்?

3. தாசர் அநேகர் தூங்கி
வீண்காலம் கழிப்பார்.
நீர் தோன்ற சிலர் மட்டும்
காத்தெதிர்ப் பார்க்கிறார்.

4. வராமல், எதுமட்டும்,
மா மணவாளனே,
தாமதிப்பீர்? அநேகர்
நம்மால் போனாரே!

5. நல் மணவாட்டி தானும்
மெய்வாழ்வை மறந்தாள்;
தன்நாயகர் இல்லாமல்
சந்தோஷம் ஆகின்றாள்.

6. ஆ! தாசர் தூக்கம் விட
நீர் தட்டி எழுப்பும்
நீர் வர ஆவலோடே
காத்திருக்கச் செய்யும்.

7. எல்லாரும் அரைகட்டி
தம்தீபம் ஏற்றவும்,
கர்த்தாவே, தயவாக
நீர் ஏவியருளும்.

**145. Saviour, hasten Thine appearing. (391), (199)**

**வாரும்! யேசுநாதா! வாரும்!**
பக்தர் காத்து நிற்கிறார்
காடுபோன்ற லோகில், பாரும்,
மோட்ச யாத்ரை செய்கிறார்.
உம்மைக்காண
ஆவல்கொண்டு செல்கின்றார்.

2. சர்வ சிஷ்டி ஏகமாக
காத்துத் தவிக்கின்றதே,
மீட்புதோன்ற ஆவலாக
எதிர் நோக்குகின்றதே.
நீர் வந்தாலோ
பூமி செழித்தோங்குமே.

3. லோகமெங்கும் துன்பப்பட்ட
யூதர் வந்து கூடுவார்
காயமாகிக் குத்தப்பட்ட
திருமேனி நோக்குவார்.
குணம்மாறி
உம்தன் தொண்டராகுவார்.

4. வாரும்! யேசுநாதா! வாரும்
வானம் பூமி ஆளுவீர்,
உம்மை நம்பினோர் எல்லாரும்
வாழ்வு காணச் செய்குவீர்
பேரானந்தம்
தந்து பூரிப்பாக்குவீர்.

**146. Come Lord! and tarry not. (360), (144)**

**நீர் வாரும்! கர்த்தாவே**
ராக்காலம் சென்றுபோம்;
மெய் அருணோதயம் காணவே
ஆனந்தம் ஆகுவோம்.

2. நீர் வாரும் பக்தர்கள்
களைத்துச் சோர்கின்றார்
நல்லாவி, மணவாட்டியும்
'நீர் வாரும்' என்கிறார்.

3. நீர் வாரும்! சிஷ்டியும்
தான் படும் துன்பத்தால்
ஏகோபித்தேங்கி ஆவலாய்
தவித்து நிற்பதால்.

4. நீர் வாரும் ஆண்டவா!
மாற்றாரைச் சந்திப்பீர்.
இருப்புக் கோலால் தண்டித்து
கீழாக்கிப் போடுவீர்.

5. நீர் வாரும்! யேசுவே!
பயிர் முதிர்ந்ததே
உம் அரிவாளை நீட்டுமேன்
மா நீதிபரரே!

6. நீர் வாரும்! வையத்தில்
மெய்வாழ்வை நாட்டுவீர்
பாழான பூமி முற்றிலும்
நீர் புதிதாக்குவீர்.

7. நீர் வாரும்! ராஜாவே!
பூலோகம் ஆளுவீர்,
நீங்காத சமாதானத்தின்
செங்கோல் செலுத்துவீர்.

### 147. Let me come closer to Thee, Jesus. (7)

**உம்பேரில் நான் மேன்மேலும் சார**
ஆட்கொள்ளும், யேசுவே!
உம்மண்டை இன்னும் கிட்டிச் சேரச்
சகாயம் செய்யுமே.

2. உம் திவ்ய சௌந்தரியம் என்னில் தோன்ற
நீர் செய்யும், யேசுவே!
உம் நல்ல கந்தம் என்னால் வீசக்
கடாட்சம் தாருமே.

3. என்னை உம் ஜீவத்தண்ணீர் பாயும்
நீரூற்று மாக்குவீர்;
என்றும் உம் மேன்மைக் கேதுவாயும்
ப்ரயோகஞ் செய்குவீர்.

4. என் மனோவாக்குக்காயம், நாதா!
வந்தாளும் முற்றிலும்;
என் உள்ளம் சித்தம் மேலே நேசா!
நீர் செங்கோல் செலுத்தும்.

5. தீராத தாகத்தால், உம் பேரில்
மா வாஞ்சை வைத்தேனே;
நீர் காட்சியாகும் மோட்ச வீட்டில்
என் தாகம் தீருமே

**148. When we walk with the Lord. (99)**

**திவ்ய ஐக்கியத்தில்**
நிலைப்போமேயாகில்,
அருள் ஜோதியில் நடப்போம்;
வல்ல ஆவியினால்
தேவசித்தஞ் செய்தால்,
பெரும் பாக்யம் பெற்றே வாழுவோம்.

**பல்லவி**

கீழ்ப்படிவோம்.
தேவசிந்தஞ் செய்வோம்!
திருவாக்கை எப்போதும்
நம்பிக் கீழ்ப்படிவோம்.

2. மேகம் தோன்றுமானால்
அன்பின் சூரியனால்
அது நில்லாமல் மறைந்துபோம்;
சோர்பு சந்தேகமும்
அவநம்பிக்கையும்
அணுகாமலே, முன் செல்வோம்.

3. எந்த வேலையிலும்,
இன்ப துன்பத்திலும்,
அருள்நாதர் சகாயஞ் செய்வார்;
வரும் சோதனையோ,
மனோ சஞ்சலமோ,
இவை நீக்கியே பாதுகாப்பார்.

4. நம்பிக் கீழ்ப்படிந்தே
திருப்பாதத்திலே
நம்மை முற்றிலும் ஒப்புவிப்போம்;
பெரு நன்மை ஈவார்
அபிஷேகஞ் செய்வார்
தேவ ஆவியைப் பெற்றுக்கொள்வோம்.

5. கர்த்தரோ டின்பமாய்,
அந்நியோந்நியமாய்,
நீங்காமலே வாசஞ் செய்வோம்,
அவர் சொற்படியே
உண்மையோடுடனே
மனோற்சாகமாய்க் கீழ்ப்படிவோம்.

**149. God is here, and that to bless us. (185)**

**தேவனே! ப்ரசன்னமாகி**
ஜீவன் ஊதி உயிர்ப்பியும்;
ஆசை காட்டும் தாசர் மீதில்
ஆசீர்வாதம் ஊற்றிடும்

**பல்லவி**

அருள்மாரி எங்கள் பேரில்
வருஷிக்கப் பண்ணுவீர்,
ஆசையோடு நிற்கிறோமே;
ஆசீர்வாதம் ஊற்றுவீர்.

2. தேவரீரின் பாதத்தண்டை
ஆவலோடே கூடினோம்;
உந்தன் திவ்ய அபிஷேகம்
நம்பி நாடி அண்டினோம்.

3. ஆண்டவா! மெய்ப்பக்தர் செய்யும்;
வேண்டுகோளைக் கேட்கிறீர்;
அன்பின் ஸ்வாலை எங்கள் நெஞ்சில்
இன்று மூட்டி நிற்கிறீர்.

4. தாசர் தேடும் அபிஷேகம்
யேசுவே! கடாட்சியும்;
பெந்தேகோஸ்தின் திவ்ய ஈவை
தந்து ஆசீர்வதியும்.

**150. Name of Jesus, highest Name. (216)**

**யேசு என்னும் நாமத்தை**
வானம் பூமி வாழ்த்துமே;
திவ்ய அன்பின் ஆழத்தை
அது தோன்றச் செய்ததே.

2. யேசு என்னும் நாமத்தால்
எந்தன் தாகம் தீர்ந்ததே;
பேரானந்த வெள்ளத்தால்
பூரிப்புமுண்டாயிற்றே.

3. யேசு என்னும் நாமமே
அருள் செல்வம் இன்பமும்
மோட்சவீடும் ஈயுமே
ஆத்துமாவைப் போஷிக்கும்.

4. யேசு எந்தன் பாவத்தை
நீக்கிச் சுத்தமாக்கினார்;
ஒப்பில்லா தம் ஜீவனை
என்னில் தந்து காக்கிறார்.

5. யேசு என்னும் நாமத்தில்
சர்வ நன்மை காண்கிறேன்;
மாறாவல்ல மீட்பரில்
அன்பு கூர்ந்தானந்திப்பேன்.

**151. Stand up! Stand up for Jesus! (297)**

**நல் மீட்பர் பட்சம் நில்லும்!**
ரட்சண்ய வீரரே!
ராஜாவின் கொடி ஏற்றிப்
போராட்டம் பண்ணுமே;
சேனாதிபதி யேசு
மாற்றாரை மேற்கொள்வார்.
பின்வெற்றி க்ரீடஞ்சூடிச்
செங்கோலும் ஓச்சுவார்.

2. நல் மீட்பர் பட்சம் நில்லும்!
எக்காளம் ஊதுங்கால்
போர்க் கோலத்தோடு சென்று,
மெய் விசுவாசத்தால்
அஞ்சாமல் ஆண்மையோடே
போராடி வாருமேன்.
பிசாசின் திரள் சேனை
நீர் வீழ்த்தி வெல்லுமேன்.

3. நல் மீட்பர் பட்சம் நில்லும்!
எவ்வீர சூரமும்
நம்பாமல், திவ்விய சக்தி
பெற்றே பிரயோகியும்;
சர்வாயுதத்தை ஈயும்
கர்த்தாவைச் சாருவீர்.
எம்மோசமும் பாராமல்
முன் தண்டில் செல்லுவீர்.

4. நல் மீட்பர் பட்சம் நில்லும்!
போராட்டம் ஓயுமே!
வெம்போரின் கோஷ்டம் வெற்றிப்
பாட்டாக மாறுமே!
மேற்கொள்ளும் வீரர் ஜீவ
பொற்கிரீடஞ் சூட்டுவார்.
விண்லோக நாதரோடே
வீற்றரசாளுவார்.

## 152. Praise the Saviour (369)

**யேசுநாதா! பக்தியாக**
வந்துபெற்ற நன்மைக்காக
உம்மையே ஆனந்தமாகப்
பாடிப் போற்றுவோம்.

2. வல்ல நாமம் துதிப்போமே.
திவ்ய சக்தி பெறுவோமே.
பாவம் முற்றும் ஜெயிப்போமே
தேவ ஆவியாய்.

3. அருள் வாக்குத் தவறாதே
உம்தன் அன்பும் குறையாதே
உம்மை விட்டுப் பிரியாதே
பற்றிக்கொள்ளுவோம்.

4. யேசுநாதா! உம்மைச் சாரும்
தேவபக்தியோடு காரும்
பின்பு பேரானந்தம் தாரும்
மோட்ச லோகத்தில்.

5. அங்கே துக்கமுமில்லாமல்
பாவம், பாடும் அணுகாமல்
இன்ப வாழ்வும் ஒழியாமல்
வாசம் பண்ணுவோம்.

**153. Jesus; stand among us. (376)**

**வல்ல யேசுநாதா!**
இந்த நேரத்தில்
நீர் ப்ரசன்னமாகும்
எங்கள் மத்தியில்.

2. திவ்ய சக்தியோடே
க்ரியை செய்குவீர்
பக்தி விசுவாசம்
தூண்டியே நிற்பீர்.

3. தாசர் நெஞ்சில் தூய
ஆவி ஊதுவீர்.
ஏக்கம், துக்கம் யாவும்
நீக்கித் தேற்றுவீர்.

4. நன்மை பெற்று, மோட்ச
பாதை செல்லுவோம்
சூரியோதயம் தோன்ற
எதிர் நோக்குவோம்.

**154. Precious Saviour, dearest Friend, (380)**

**நேச ஆத்ம நாயகா!**
நோக்கிப் பாருமேன்;
நிறைவாய் என் உள்ளத்தில்
அன்பை ஊற்றுமேன்.

**பல்லவி**

என் நேசா! அருமை நாதா!
எந்தன் உள்ளத்திலே
தேவாவியாலே இன்னும் மேன்மேலும்
திவ்ய பேரன்பை ஊற்றுவீரே;

2. என்னை உம்தன் சொந்தமாய்
என்றும் ஆளுவீர்,
தேவ சித்தம் என்னிலே
நிறைவேற்றுவீர்.

3. ஏதுமற்ற பாலன் போல்
வந்து நிற்கிறேன்
உம்மை நம்பிக் கேட்கையில்,
அன்பை ஊற்றுமேன்.

4. இன்னமும் மேன்மேலுமே
அன்பை நாடுவேன்;
திவ்ய நேசம் வாஞ்சித்தே
கெஞ்சிக் கேட்கிறேன்.

## 155. In the heart of Jesus. (516)

**யேசுநாதர் உள்ளம்**

திவ்ய அன்பினால்
உனக்காகப் பொங்கி
உருகின்றதால்
நெஞ்சமே! அவ்வன்பை
நம்பித் தேறுவாய்
ஏன் திக்கற்று வீணே
சோர்ந்து போகிறாய்?

2. யேசுநாதர் எண்ணம்
உன்தன் மீதினில்
நித்தம் நன்மைக்கென்று
சென்று போகையில்
சஞ்சலம் விசாரம்
சற்றும் ஆகாதே!
ஏக்கம் துக்கமின்றி
பாது காப்பாரே.

3. யேசுநாதர் உன்னைத்
த்ராட்சத் தோட்டத்தில்
வேலை செய்ய அன்பாய்
ஏவும் காலத்தில்
இன்னும் சோம்பலாக.
நிற்பதென்னவோ?
மோட்சத்தார் பெறாத
வேலை இதல்லோ?

4. உனக்காக யேசு
நாதர் வீட்டிலே
இன்ப வாசஸ்தானம்
க்ரீடமுமுண்டே
போக்கில்லாதோனாக
ஏங்காதிருப்பாய்
மோட்ச பேரானந்தம்
பெற்று வாழுவாய்.

## 156. In tenderness He Sought me! (562)

**காணாமற்போன என்னை**
நல் மேய்ப்பர் தேடினார்
தம் தோளின்பேரில் போட்டுக்
கொண்டன்பாய் ரட்சித்தார்
மேலோக தூதர் கூடினார்;
ஆனந்தம் பொங்கிப் பாடினார்.

**பல்லவி**

நேசர் தேடிவந்தார்
ரத்தம் சிந்தி மீட்டார்
என்னைச் சொந்தமாகக் கொண்டனர்,
பேரன்போடு சேர்ந்துக்கொண்டனர்.

2. என்பாவக் காயங்கட்டி
வீண் பயம் நீக்கினார்
'என் சொந்தமாக உன்னைக்
கொண்டேனே பார்' என்றார்,
அவ்வின்ப சத்தம் கேட்கவே,
என் உள்ளம் பூரிப்பாயிற்றே.

3. பேரன்பராகத் தோன்றி
ஐங்காயம் காட்டினார்.
முட்க்ரீடம் சூடினோராய்
என்னோடு பேசினார்.
இப்பாவியினிமித்தமே
படாத பாடு பட்டாரே.

4. இப்போது இன்பமாக
என் மீட்பர் பாதத்தில்
ஒப்பற்ற திவ்ய அன்பைத்
தியானஞ் செய்கையில்,
ஆனந்தம் பொங்கிப் பூரிப்பேன்
மேன்மேலும் பாடிப்போற்றுவேன்.

5. ஆட்கொண்ட நாதர் பின்ப
பிரசன்னமாகுவார்.
தம் ஞான மணவாட்டி
சேர்த்தென்றும் வாழ்விப்பார்.
எம்மாசும் தீங்கும் நீங்கிப்போம்,
பேரின்பம் பெற்று வாழுவோம்.

# பல்லவிகள்

**ப.1. Air,-In the sweet by-and bye (349)**

**பாவியாம் எந்தனை**
யேசு கிருபையாய் நேசித்தார்.
பாவியாம் எந்தனை
யேசு கிருபையாய் நேசித்தார்.

2. பாவியாம் எந்தனை
யேசு கிருபையாய் நினைத்தார்.
பாவியாம் எந்தனை
யேசு கிருபையாய் நினைத்தார்.

3. பாவியாம் எந்தனை
யேசு கிருபையாய்த் தேடினார்.
பாவியாம் எந்தனை
யேசு கிருபையாய்த் தேடினார்.

4. பாவியாம் எந்தனை
யேசு கிருபையாய் ரக்ஷித்தார்.
பாவியாம் எந்தனை
யேசு கிருபையாய் ரக்ஷித்தார்.

5. பாவியாம் எந்தனை
யேசு கிருபையாய்க் காக்கிறார்.
பாவியாம் எந்தனை
யேசு கிருபையாய்க் காக்கிறார்.

**ப.2. Jesus saves me now (185)**

**யேசு நேசிக்கிறார்,**
யேசு நேசிக்கிறார்.
எப்போதும் எந்தனை நேசிக்கிறார்,
யேசு நேசிக்கிறார்.

2. யேசு ரட்சிக்கிறார்,
யேசு ரட்சிக்கிறார்,
எப்போதும் எந்தனை ரட்சிக்கிறார்.
யேசு ரட்சிக்கிறார்.

3. யேசு காக்கிறார்,
யேசு காக்கிறார்.
எப்போதும் எந்தனைக் காக்கிறார்.
யேசு காக்கிறார்.

**ப.3. Anywhere with Jesus. (46)**

**இயேசுவோடு எங்கும்**
செல்லுவேன், செல்லுவேன்
யேசுவோடு எங்கும்
நான் எங்கும் செல்லுவேன்.

2. யேசுவோ டெந்நாளும்
தங்குவேன், தங்குவேன்
யேசுவோ டெந்நாளும்,
நான் என்றும் தங்குவேன்.

3. யேசுநாதர்க் கென்றே
ஜீவிப்பேன், ஜீவிப்பேன்.
யேசுநாதர்க் கென்றே
நான் முற்றும் ஜீவிப்பேன்.

**ப.4. Always more to follow. (309)**

**நம்புவோம்! நம்புவோம்!**
நம்புவோம் மேன்மேலும்!
வேத வாக்கை நம்புவோம்!
நம்புவோம் மேன்மேலும்!

2. சாருவோம்! சாருவோம்!
சாருவோம் மேன்மேலும்!
மீட்பர்பேரில் சாருவோம்!
சாருவோம் மேன்மேலும்!

3. அடைவோம்! அடைவோம்!
அடைவோம் மேன்மேலும்!
பரிசுத்தம் அடைவோம்!
அடைவோம் மேன்மேலும்!

4. பெறுவோம்! பெருவோம்!
பெறுவோம் மேன்மேலும்!
ஞானபெலன் பெறுவோம்!
பெறுவோம் மேன்மேலும்!

5. ஜெயிப்போம்! ஜெயிப்போம்!
ஜெயிப்போம் மேன்மேலும்!
தீயபாவம் ஜெயிப்போம்!
ஜெயிப்போம் மேன்மேலும்!

6. தேறுவோம்! தேறுவோம்!
தேறுவோம் மேன்மேலும்!
தேவ அன்பில் தேறுவோம்!
தேறுவோம் மேன்மேலும்!

7. துதிப்போம்! துதிப்போம்!
துதிப்போம்! மேன்மேலும்;
யேசுநாதா! துதிப்போம்
உம்மையே மேன்மேலும்.

**ப.5. Oh? Wonderful Cleansing. (492)**

**ஒப்பற்ற பேரன்பை**

ஒப்பற்ற பேரன்பை
ஒப்பற்ற பேரன்பை
என் மீட்பர் காட்டினார்.

2. கைம்மாறு மில்லாமல்
கைம்மாறு மில்லாமல்
கைம்மாறு மில்லாமல்
என் மீட்பர் ரக்ஷித்தார்!

3. மா பூரண சுத்தம்
மா பூரண சுத்தம்
மா பூரண சுத்தம்
என் மீட்பர் தந்தனர்.

4. தேவாவியின் ஸ்நானம்
தேவாவியின் ஸ்நானம்
தேவாவியின் ஸ்நானம்
என் மீட்பர் தந்தனர்.

5. எப்பாவமும் நீக்கி,
எப்பாவமும் நீக்கி,
எப்பாவமும் நீக்கி,
என் மீட்பர் காக்கிறார்.

6. நல் மீட்பரைப் போற்றும்!
நல் மீட்பரைப் போற்றும்!
நல் மீட்பரைப் போற்றும்!
ஓயாமல் போற்றுமேன்

## ப.6. Draw me nearer. (66)

**என்னை மேலும், மேலும் சேர்க்கிறீர்**
தூய ரத்தத்தண்டையில்,
என்னை மேலும், மேலும் சேர்க்கிறீர்
திருப் புண்ய பாதத்தில்.

2. என்னை மேலும், மேலும் இழுப்பீர்
உமதன்பின் பாசத்தால்.
என்னை மேலும், மேலும் மேலும் இழுப்பீர்
காயப்பட்ட கரத்தால்.

3. என்னை மேலும், மேலும் நிரப்பும்
பரிசுத்த ஆவியால்,
என்னை மேலும், மேலும், மேலும் நிரப்பும்
அவர் திவ்ய பலத்தால்.

4. உம்மை மேலும், மேலும் காட்டுவீர்
எனதருள் நாயகா!
உம்மை மேலும், மேலும், மேலும் காட்டுவீர்,
வல்ல நேச ரக்ஷகா!

**ப.7. I need Thee Oh, I need Thee! (276)**

**உம் திரு ரத்தம் தேவை!**
எந்த நாளும் தேவை!
என் ரக்ஷகா! நீர் பாரும்
நான் அண்டினேன்.

2. உம் அருள் செல்வம் தேவை!
எந்த நாளும் தேவை!
என் ரக்ஷகா! நீர் பாரும்.
நான் அண்டினேன்.

3. தேவாவி மெத்த தேவை
எந்த நாளும் தேவை.
என் ரக்ஷகா! நீர் பாரும்
நான் அண்டினேன்.

4. உம் பாதுகாப்புத் தேவை
எந்த நாளும் தேவை
என் ரக்ஷகா! நீர் பாரும்
நான் அண்டினேன்.

5. நீரே எக்காலும் தேவை
எந்த நாளும் தேவை
என் ரக்ஷகா! நீர் பாரும்
நான் அண்டினேன்.

**ப.8. Jesus is near. (290)**

**யேசுவைப் பார்!**
துணை செய்வார்.
பாவமும் சாபமும் நீங்கும்
யேசுவைப் பார்!
துணை செய்வார்.
சுத்தாங்கமும் உண்டாகும்.

2. யேசுவைப் பார்!
துணை செய்வார்.
இளைப்பும் தவிப்பும் நீங்கும்
யேசுவைப் பார்!
துணை செய்வார்.
உன் நெஞ்சு முற்றும் ஆறும்.

3. யேசுவைப் பார்!
துணை செய்வார்.
மெய் வாழ்வு கிடைக்கும்
யேசுவைப் பார்!
துணை செய்வார்.
தெய்வீக பெலன் தோன்றும்.

**ப.9. Blessed, holy, loving Jesus! (35)**

**தூய நேச அருள் நாதா!**
நொறுங்குண்ட நெஞ்சத்தில்,
உமதன்பின் ஆழம் நீளம்
காட்டுவீர் இந்நேரத்தில்.

2. தூய நேச அருள் நாதா
நொறுங்குண்ட நெஞ்சத்தில்
நிறைவான வல்ல மீட்பைக்
காட்டுவீர் இந்நேரத்தில்.

3. தூய நேச அருள் நாதா!
நொறுங்குண்ட நெஞ்சத்தில்
தேவஞானம் பெலன் யாவும்
காட்டுவீர் இந்நேரத்தில்.

4. தூய நேச அருள் நாதா!
நொறுங்குண்ட நெஞ்சத்தில்
உம்மையே மாதெளிவாக
காட்டுவீர் இந்நேரத்தில்.

**ப.10. Jesus Master! Search me! Prove me! (242)**

**திருரத்தத்தாலே நாதா!**
என்னைச் சுத்திகரியும்
நீரேகதி! அடியேனை
முற்றும் ரட்சியும்.

2. தூய கண்ணினாலே, நாதா!
என்னைச் சோதித்தறியும்,
நீரே கதி! அடியேனை
முற்றும் ரட்சியும்.

3. திவ்ய அக்னியாலே, நாதா!
என்னைச் சுத்தமாக்கிடும்.
நீரே கதி! அடியேனை
முற்றும் ரட்சியும்.

4. தேவ ஆவியாலே, நாதா!
என்னை முற்றும் நிரப்பும்
நீரே கதி! அடியேனை
முற்றும் ரட்சியும்.

**ப.11. I believe, God answers prayer. (336)**

**எந்தன் ஜெபம் தேவன் கேட்கிறார்,**
எந்தன் ஜெபம் தேவன் கேட்கிறார்,
எந்தன் ஜெபம் தேவன் கேட்கிறார்.
(இதை நிச்சயித்தேன்,
பாடிப் போற்றுவேன்.)

**ப.12. Oh! come, let us go and find them. (442)**

**காணாமலே போன ஆட்டைத்**
தேடிக்கண்டு பிடிப்போம்.
பின்பு, மோட்சத்தினில்
கூடும் காலத்தில்,
அதைக்கண்டு, பூரிப்போம்.

**ப.13. Grace, there is my every debt to pay. (540)**

**பாவம் முற்றும் போக்கும் பேரன்பும்**
என்னைத் தூய்மையாக்கும் ரத்தமும்
மாசில்லாமல் காக்கும் சக்தியும்
யேசுவில் உண்டே
(கண்டேன்! கண்டேன்!)

**ப.14. What! never thirst agains?**
**(Tune, What! never part again?)**

**ஜீவ அப்பம் நித்தம் புசிப்போம்.**
ஜீவ ஊற்றில் பானம் பண்ணுவோம்.
யேசுநாதர் வாக்கின்படியே
ஓர்காலும் தாகம் தோன்றாதே

வினா. தாகம் முற்றும் தீருமோ?
பின்புண்டாக மாட்டாதோ?

விடை. தாகம் முற்றும் தீருமே.
பின்புண்டாக மாட்டாதே.

பொது. யேசு நாதர் வாக்கின்படியே,
ஓர்காலமும் உண்டாகாதே.

**ப.15. " Oh! the peace my Saviour gives."**

**திவ்விய சமாதானத்தை**
மீட்பர் தந்து காக்கிறார்
நம்பும் தாசர் பாதையில்
ஜோதி தோன்றச் செய்கிறார்.

**ப.16. "Keep close to Jesus."**

**நல் மீட்பரண்டை**
நல் மீட்பரண்டை
எப்போதும் தங்கிவாருமே;
நீங்காதிருப்பீர்!
அவர்மேல் சாருவீர்
மகா மீட்பரண்டை தங்குமே.

**ப.17. "The best Friend to have is Jesus."**

**எல்லாரிலும் அன்பர் யேசு!**
எல்லாரிலும் அன்பர் யேசு!
உன்னைத் தாங்கி நிற்கிறார்.
உந்தன் ஜெபம் கேட்கிறார்.
ஆம்! எல்லாரிலும் அன்பர் யேசு!

பூலோகத்தின் ஜோதி யேசு!
பூலோகத்தின் ஜோதி யேசு!
உனில் வந்து தங்குவார்,
பாவ இருள் போக்குவார்,
ஆம் பூலோகத்தின் ஜோதி யேசு!

**ப.18. "A Little talk with
Jesus makes it right all right."**

**நல்மீட்பர் நோக்கிச் சஞ்சலத்தை சொல்லுமே!**
து துன்பம் இன்பமாக மாறுமே!
துக்க காலத்தில்
ல் மீட்பர் பாதத்தில்
நெஞ்சின் நோவு முற்றும் நீங்குமே!

**ப.19. "His yoke is easy; His burden is light."**

**கர்த்தாவின் சித்தம் மெய்ப் பாக்கியமே**
இதைக் காட்டினீர்! இதைக் காட்டினீர்!
ஜீவஊற்றின் தண்ணீரண்டையிலே
என்னைத் தங்கச் செய்கிறார்.

*டயோசீசன் பிரஸ்,-K 1171- C. 3000-20-12-56*

skrajann@gmail.com